

விண்வெளியில் நடந்தார் சுனிதா வில்லியம்ஸ்

02 ஆம் பக்கம்




வாரவெளியீடு

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 05, இதழ் : 29, குரோதி வருடம், தை மாதம் 06ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (19.01.2025) ஹிஜ்ரி-1446, ரஜப் - 18, 0115886187 - பக்கங்கள் 20+8+8+8

விலை ரூ.130


நக்கல் நமசிவாயம்




# மின்கட்டணம் அதிரடியாகக் குறைப்பு

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவிப்பு



நீண்ட பரிசீலனைகளின் பின்னர் 2025ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களுக்கான மின்கட்டணத்தை 20 சதவீதத்தால் (ஒட்டுமொத்த சராசரி) குறைக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இந்தக் கட்டணத் திருத்தமானது வெள்ளிக்கிழமை (17) நள்ளிரவு முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மின்கட்டணத் திருத்தம் தொடர்பான இறுதி...

02 ஆம் பக்கம்

## சிவா பசுபதி காலமானார்



இலங்கையின் 34ஆவது சட்டமா அதிபராக பதவிவகித்த சிவா பசுபதி அவுஸ்திரேலியாவில் காலமானார்.

சிவா பசுபதி இலங்கையின் 34ஆவது சட்ட மா அதிபராக 13 வருட காலம் (1975 – 1988) பணியாற்றியுள்ளார். இவர் ஜனாதிபதி சட்டத்தரணியுமாவார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் கொழும்பு ஆனந்தா கல்லூரி ஆகியவற் றில் தனது பாடசாலைக் கல்வியைப் பயின்ற சிவா பசுபதி, கொழும்பு பல்கலைக்கழகத்தில் தனது சட்ட பட்டப்படிப்பைப் பூர்த்திசெய்ததன் பின்னர் இங்கிலாந்தின் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்திலும் பட்டப் பின்படிப்பைப் பூர்த்திசெய்திருந்தார்.

02 ஆம் பக்கம்

## வருமான வரியென்று நாடகமாடி கொள்ளை

### யாழ். நகைக் கடையில் சம்பவம்



யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியிலுள்ள நகைக் கடையொன்றுக்கு நேற்றுமுன்தினம் மதியம் சென்ற குழுவொன்று 30 இலட்சம் ரூபா பணத்தைப் பறித்துச் சென்ற சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வருமான வரித்துறை எனத் தெரிவித்து நகைக் கடைக்குள் நுழைந்த மூவரடங்கிய குழு சோதனை நடத்தப்போவதாகத் தெரிவித்து, கடையின் வாயில் கதவுகளைப் பூட்டியுள்ளது. வருமானத்துக்கு அதிகமாகக் கடையில்...

02 ஆம் பக்கம்

## பாராளுமன்ற பாலியல் துன்புறுத்தல்

### பணியாளர்கள் மூவர் பணிநீக்கம்

பாராளுமன்ற பெண் பணியாளருக்கு பாலியல் துன்புறுத்தல் மேற்கொண்டமை தொடர்பில் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்ட மூன்று பாராளுமன்ற பணியாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டனர்.

இந்த விவகாரம் தொடர்பில் பல கட்டங்களாக விசாரணைகள் நடத்தப்பட்டு இதனடிப்படையில் மூன்று பணியாளர்கள் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டனர். இதனைத் தொடர்ந்து பாராளுமன்றச் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவின் பரிந்துரைக்கமைய குறித்த மூன்று பணியாளர்களையும் பணிநீக்கம் செய்வதற்கு சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்ரமரத்ன அண்மையில் (09) ஒப்புதல் வழங்கினார்.

2021 மற்றும் 2022ஆம் ஆண்டு காலப் பகுதியில் பாராளுமன்ற பெண் பணியாளர்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பில் 2023 ஜூலை 30 மற்றும் ஓகஸ்ட் 02ஆம் திகதி பத்திரிகைகளில் செய்தி வெளியானதைத் தொடர்ந்து அப்போதைய கௌரவ சபாநாயகரின் அறிவுறுத்தலுக்கமைய...

02 ஆம் பக்கம்



## ரணில் - சஜித் கூட்டணி முயற்சி பின்னடையலாம்

### அரசியல் நோக்கர்கள் கருத்து

02 ஆம் பக்கம்

## சண்டே சாம்பார்



★ சீனாவில் அநுர - அதிருப்தியில் இந்தியா

★ எதிர்க்கட்சிப் பிரமுகர்களுடன் இந்தியத் தூதுவர் அவசர சந்திப்பு

05 ஆம் பக்கம்













# சீன கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் ஜனாதிபதி அநுர சந்திப்பு



சீனாவுக்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் சிச்சுவான் மாகாண சீன கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் வேங் சியூஹுய்க்குமிடையிலான சந்திப்பு வெள்ளிக்கிழமை (17) நடைபெற்றது.

வரலாற்று மற்றும் கலாசார பாரம்பரியத்தைப் பாதுகாத்து, அபிவிருத்தியின் விடியலைக் கண்டுள்ள சிச்சுவான் மாகாணத்தின் செங்டூ நகரம், சீனாவில் மகிழ்ச்சியான மக்களைக் கொண்ட நகரங்களில் முன்னணி இடத்தைப் பிடித்துள்ளது.

பொருளாதார அபிவிருத்தியில் முன்னணியில் இருக்கும் சிச்சுவான் மாகாணத்துக்கும் இலங்கைக்குமிடையிலான பொருளாதாரம், வர்த்தகம், கலாசாரம், சுற்றுலாத்துறை மட்டுமன்றி அரசுகளுக்கிடையிலான உறவுகளை வலுப்படுத்துவது மற்றும் அவற்றை புதிய நிலைக்கு உயர்த்துவது குறித்து இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

எரிசக்தி உட்பட பல துறைகளில் சிச்சுவான் மாகாணம் அடைந்துள்ள சாதனைகளை இலங்கையுடன் பகிர்ந்துகொள்ளுமாறு மாகாண செயலாளருக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்ததுடன், இலங்கை தற்போது பொருளாதார ரீதியாக ஸ்திரமடைந்து வருவதாகவும் வெளிப்படையான ஆட்சியின் கீழ் முதலீட்டுக்கு மிகவும் சாதகமான சூழல் தற்போது நாட்டில் இருப்பதாகவும் கூறினார்.

இலங்கை தற்போது அரசியலில் ஒரு திருப்புமுனையில் இருப்பதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, மக்கள் தங்கள் மீது வைத்திருக்கும் எதிர்பார்ப்புகளை முழுமையாக நிறைவேற்ற அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

# சீன மக்கள் தொகை 3ஆவது ஆண்டாக சரிவு

சீனாவில் மக்கள்தொகை தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக குறைந்துள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இந்தியாவுக்கு அடுத்தபடியாக உலகளவில் 2ஆவது அதிக மக்கள்தொகை கொண்ட நாடான சீனாவில் குழந்தைப் பிறப்பு வீதம் குறைந்து வருவதாலும் வயதான மக்கள்தொகை அதிகரித்து வருவதும் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுத்திருக்கிறது.

2004ஆம் ஆண்டின் இறுதியில் சீனாவின் மக்கள்தொகை 140 கோடியாக இருந்தது. தற்போது முந்தைய ஆண்டைவிட13.9 இலட்சம் அளவுக்குக் குறைந்துள்ளது.

பீஜிங்கில் அறிவிக்கப்பட்ட புள்ளிவிவரங்களின்படி கிழக்காசியாவில் ஜப்பான், தென் கொரியா, ஹொங்கொங் மற்றும் பிற நாடுகளில் குழந்தைப் பிறப்பு வீதம் கடுமையாக வீழ்ச்சியடைந்ததாகத் தெரிவித்துள்ளது.

குழந்தை பிறப்பு வீதம் வேகமாகக் குறைந்துவரும் நாடுகளான ஜப்பான், கிழக்கு ஐரோப்பா போன்ற நாடுகளுடன் தற்போது சீனாவும் இணைந்துள்ளது.

அதிகரித்துவரும் செலவினங்கள் மற்றும் உயர்கல்விக்கான செலவுகள் போன்றவை திருமணத்தைத் தள்ளிப் போடுவதற்கான முக்கிய காரணமாகப் பார்க்கப்படுகிறது. இது குழந்தைப் பிறப்பைத் தள்ளிப் போடவோ அல்லது குழந்தையே வேண்டாம் என்று முடிவுக்கோ காரணமாக அமைவதாகவும் தரவுகள் தெரிவிக்கின்றன.

## வருமான...

பணமும் தங்க நகைகளும் இருப்பதாக தெரிவித்து, பணத்தைப் பறித்துச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட கடை உரிமையாளர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.

கண்காணிப்பு கெமராக்களின் உதவியுடன் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## சிவா...

ரணில் விக்கிரமசிங்க 2002ஆம் ஆண்டில் பிரதமராக பதவி வகித்த தருணத்தில் அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஒஸ்லோ பேச்சுவார்த்தை நடைபெற்றபோது தமிழீழ விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தைக் குழுவின் ஆலோசகராக சிவா பணியாற்றியிருந்தார். அவ்வமைப்பின் அரசியல் விவகாரக் குழுவின் பிரதிநிதியாகவும் பணியாற்றியிருந்தார். விடுதலைப் புலிகள் இடைக்கால தீர்வாக முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை இந்த அரசியல் விவகாரக் குழுவே தயாரித்திருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

## ரணில்...

ஐக்கிய தேசியக் கட்சியையும் ஐக்கிய மக்கள் சக்தியையும் இணைத்து புதிய அரசியல் கூட்டணியொன்றை அமைக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றுவரும் அதேசமயம், இந்த முயற்சி வெற்றியளிக்கும் வாய்ப்பில்லையென அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கைக்காக விசேட குழு ஒன்றையும் ஐக்கிய மக்கள் சக்தி நியமித்திருந்த பின்னணியில், கூட்டணியில் சின்னம் தொடர்பான சர்ச்சை எழுந்துள்ளதாக அறியமுடிகின்றது.

புதிய கூட்டணி அமையுமானால் அது தொலைபேசி சின்னத்தில் போட்டியிட வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச உறுதியான நிலைப்பாட்டில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இந்தப் பின்னணியில் கூட்டணி தொடர்பான பேச்சுகள் இழுபறியாகும் நிலைமையே ஏற்பட்டுள்ளது.

## மின்கட்டணம்...

தீர்மானத்தை எடுப்பதற்காக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு கடந்த வெள்ளிக்கிழமை (17) ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் லலித் சந்ரலால் தலைமையில் ஒன்றுகூடியது. இந்தச் சந்திப்பில் பொறியியலாளர் பியல் ஹெனநாயக்க மற்றும் கலாநிதி சத்துரி சமன்மலி பெர்னாண்டோ ஆகியோரும் கலந்துகொண்டுள்ளனர். இதன்போதே மின் கட்டணத்தை 20 சதவீதத்தால் குறைக்க தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது.

2025ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களுக்கான மின்கட்டண யோசனை, கடந்த டிசம்பர் மாதம் 06ஆம் திகதி இலங்கை மின்சார சபையால் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டிருந்தது.

அந்த யோசனையை பரிசீலனை செய்த பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, அதுதொடர்பான பதில் யோசனைகளை கடந்த டிசம்பர் மாதம் 07ஆம் திகதி வெளியிட்டிருந்தது.

மின்சார சபையின் 30ஆவது உறுப்புரை மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் 17ஆவது உறுப்புரையின் பிரகாரம் மக்கள் கருத்துக்கணிப்பை முன்னெடுக்க வேண்டும். அதற்கமைய, மின்சார சபையின் யோசனையுடன், 11 சதவீதத்தால் மின்கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்ற பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பரிந்துரையும் மக்களின் கருத்துக்கணிப்புக்கு உட்படுத்தப்பட்டது.

ஜனவரி 17ஆம் திகதி வரை அமுலில் இருந்த கட்டண முறையை இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களுக்கு அவ்வாறே நடைமுறைப்படுத்துமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு மின் சார சபை யோசனை முன்வைத்திருந்த போதிலும் மாறாக மின்கட்டணத்தை 11 சதவீதத்தால் குறைக்க முடியுமென்று ஆணைக்குழு சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதனைத் தொடர்ந்து, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் கடந்த டிசம்பர் 17ஆம் திகதியிலிருந்து ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் மக்கள் கருத்துக்கணிப்புகள் நடத்தப்பட்டிருந்தன. இதன்போது மின்சார சபையின் யோசனை, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பதில் யோசனை மற்றும் ஏனைய தரப்புகளால் எழுத்துபூர்வமாக வழங்கப்பட்ட யோசனைகள் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளன.

இந்த யோசனைகளுக்கமையவே மின் கட்டணத்தைத் திருத்த பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்தக் கட்டணத் திருத்தத்துக்கமைய உள்ளகப் பயன்பாடு உள்ளிட்ட ஏனைய பாவனையாளர்களுக்கான மாதாந்த மின்கட்டணம் அட்டவணை 1,2இல் உள்ளதுபோன்று மாற்றமடையும்.

அட்டவணை-1

| உள்ளக கட்டணக் கணக்கு | | | |
|---|---|---|---|
| அலகு எண்ணிக்கை | முந்தைய கட்டணம் | திருத்தப்பட்ட கட்டணம் | % மாற்றம் |
| 150 | 5,460 | 4,170 | -23.6% |
| அலகு எண்ணிக்கை | முந்தைய கட்டணம் | திருத்தப்பட்ட கட்டணம் | % மாற்றம் |
| 30 | 280 | 195 | -30.4% |
| 60 | 700 | 500 | -28.6% |
| 90 | 1,840 | 1,480 | -19.6% |
| 120 | 3,340 | 2,680 | -19.8% |
| 150 | 5,460 | 4,170 | -23.6% |
| 180 | 6,720 | 5,160 | -23.2% |
| 210 | 8,810 | 7,220 | -18.0% |
| 240 | 10,760 | 8,780 | -18.4% |
| 270 | 12,710 | 10,340 | -18.6% |
| 300 | 14,660 | 11,900 | -18.8% |

அட்டவணை-2

| நுகர்வோர் பிரிவு | | கட்டண குறைப்பு சதவீதம் |
|---|---|---|
| வீட்டுப் பாவனை | | 20% |
| வீட்டுப் பாவனை | 0-30 | 29% |
| | 31-61 | 28% |
| | 61-90 | 19% |
| | 91-180 | 18% |
| | 180> | 19% |
| | D-TOU | 31% |
| பொது அலுவலகம் | | 12% |
| அரச நிறுவனம் | | 11% |
| ஹோட்டல் | | 31% |
| தொழிற்சாலை | | 30% |
| சமய வழிபாட்டிடங்கள் | | 21% |
| வீதி விளக்கு | | 11% |
| மொத்த குறைப்பு | | 20% |

## விண்வெளியில்...

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நாசா விண்வெளி வீராங்கனையான சுனிதா வில்லியம்ஸ், 12 ஆண்டுகளுக்குப் பிறகு முதல்முறையாக விண்வெளியில் நடந்தார்.

இது குறித்து அமெரிக்க விண்வெளி ஆய்வு அமைப்பான நாசா வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருக்கும் சுனிதா வில்லியம்ஸும் மற்றொரு விண்வெளி வீரரான நிக் ஹேகும் அந்த நிலையத்தில் சில பழுதுகளை மேற்கொள்வதற்காக வியாழக்கிழமை வெளியே வந்து விண்வெளியில் நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே, அடுத்த சில வாரங்களில் விண்வெளியில் நடந்து மேற்கொள்ளப்படவிருக்கும் மற்றொரு பணியிலும் சுனிதா வில்லியம்ஸ் பங்கேற்கிறார் என்று நாசா கூறியிருந்தமை நினைவுகூரத்தக்கது.

அமெரிக்காவின் போயிங் உருவாக்கியுள்ள ஸ்டார்லைனர் விண்கலம், சுனிதா வில்லியம்ஸ் மற்றும் பட்ச் வில்மோருடன் சர்வதேச விண்வெளி நிலையத்தை கடந்த ஆண்டு ஜூன் 05ஆம் திகதி அடைந்தது. ஒன்பது நாட்களுக்குப் பிறகு ஸ்டார்லைனர் மூலமே அவர்கள் இருவரும் பூமிக்குத் திரும்புவதாக இருந்தது. இருந்தாலும், தொழில்நுட்பக் கோளாறு காரணாக அவர்களால் திட்டமிட்டபடி பூமி திரும்ப முடியவில்லை.

ஸ்டார்லைனரில் ஆட்களை அழைத்து வருவது அச்சுறுத்தல் நிறைந்தது என்பதால் சுனிதாவும் பட்ச் வில்மோரும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவன விண்கலம் மூலம் எதிர்வரும் மார்ச்சில் பூமிக்குத் திரும்புவார்கள் என்று நாசா அறிவித்துள்ளது.

இந்நிலையில், அவர்களை பூமிக்கு அழைத்துவரும் திட்டம் மேலும் ஒரு மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## பாராளுமன்ற...

இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ள பாராளுமன்றத்தின் அப்போதைய நிர்வாகப் பணிப்பாளர் தலைமையில் மூவர் அடங்கிய உள்ளக விசாரணைக் குழுவை பாராளுமன்ற செயலாளர் நாயகம் 2023.08.04ஆம் திகதி நியமித்திருந்தார். இந்தக் குழு முன்னெடுத்த விசாரணைகளுக்கமைய பாராளுமன்றப் பணியாளர்கள் இருவர் இடைநீக்கம் செய்யப்பட்டிருந்ததுடன், குழுவின் அறிக்கை 2023.08.23ஆம் திகதி பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் கையளிக்கப்பட்டது. இது தொடர்பில் மேலதிக அறிவுறுத்தல்களைப் பெறுவதற்காக குறித்த அறிக்கை சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கமைய இது தொடர்பான விசாரணை பொலிஸ் மா அதிபரினூடாக சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகத் தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தப் பொலிஸ் பிரிவின் விசாரணைக்கமைய மற்றுமொரு பாராளுமன்றப் பணியாளர் கைதுசெய்யப்பட்டு 2024.01.30ஆம் திகதி குறித்த பணியாளர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டார்.

இதற்கமைய இது தொடர்பில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டதையடுத்து உரிய விசாரணை நடத்தப்பட வேண்டுமென குற்றஞ்சாட்டப்பட்ட பணியாளர்கள் முன்வைத்த கோரிக்கைக்கமைய சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்காற்று விசாரணையை நடத்துவதற்காக ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி குசலா சரோஜினி வீரவர்தன நியமிக்கப்பட்டார்.

இந்த ஒழுக்காற்று விசாரணையின் இறுதி அறிக்கை 2024.12.23ஆம் திகதி பாராளுமன்றச் செயலாளர் நாயகம் குசானி ரோஹணதீரவிடம் கையளிக்கப்பட்டதுடன், இதனை அடிப்படையாகக்கொண்டு சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மூவரும் இடைநீக்கம் செய்யப்பட்ட தினத்திலிருந்து பணிநீக்கம் செய்யுமாறு சபாநாயகரிடம் விடுத்த பரிந்துரைக்கமைய இவர்களைப் பணிநீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



# பீ.எம்.எம்.ஏ.காதருக்கு "வாழும் ஊடகம்" விருது







(ஜெஸ்மி எம்.மூஸா)

மருதமுனை ஊடகப் பேரவையின் ஏற்பாட்டில் சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் பீ.எம்.எம்.ஏ.காதரின் ஓராண்டு நினைவுகள் பற்றிய 'நினைந்து பேசுதல்' நிகழ்வு மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி அஷ்ரப் ஆராதனை மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை (13) நடந்தேறியது.

பேரவையின் தலைவர் எம்.எல்.எம்.ஜமால்டீன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வின் கருப்பொருள் உரையை இலக்கிய விமர்சகர் ஜெஸ்மி எம்.மூஸா நிகழ்த்தினார்

விடிவெள்ளி பத்திரிகை ஆசிரியர் எம்.பீ.எம்.பைறூஸ் 'விடிவெள்ளிப் பயணத்தில் பீ.ம்.எம்.ஏ.' என்ற தலைப்பிலும் தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் எம்.அப்துல் றஸாக் 'நான் கண்ட கலாபூஷணம் காதர்' என்ற தலைப்பிலும் சிறப்புரையாற்றினர்.

காதரின் எழுத்துப் பணியை எதிர்கால சந்ததியினருக்கு அடையாளப்படுத்தும் நோக்கில் மருதமுனை மக்கள் சார்பில் பேரவையின் பரிந்துரைக்கமைய 'வாழும் ஊடக ஆளுமை' விருது காதரின் குடும்பத்தவர்கள் சார்பில் காதரின் புதல்வியும் மருதமுனை பொது நூலகத்தின் நூலகருமான ஹரீஸா சமீமிடம் கையளிக்கப்பட்டது.

பத்திரிகைகளின் ஆசிரியர்களால் அனுப்பி வைக்கப்பட்ட இரங்கல் உரைகள் நிகழ்வின்போது வாசித்தளிக்கப்பட்டன.

தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவரின் 'மொழியாற்றலும் ஊடகத் திறனும் கொண்ட இனிய நண்பர் காதர்' என்ற உரையை தென்கிழக்குப் பல்கலைக்கழக வருகைதரு விரிவுரையாளர் கலாநிதி சத்தார் எம்.பிர்தௌஸ் அரங்கில் முன்வைத்தார்.

'அமரர் பீ.எம்.எம்.ஏ.காதர் ஐயாவின் நினைவுகளோடு' செய்தியை வீரகேசரியின் செய்தியாசிரியர் ஜே.ஜி.ஸ்டீபன் வழங்கியிருந்தார். அதனை வியூகம் முகநூல் தொலைக்காட்சியின் முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.ஜனூஸ் சமர்ப்பித்தார்.

தினகரன் ஊடகவியலாளர் எஸ்.பாண்டியனின் 'ஊடகத்துறை மீது தீராக்காதல் கொண்ட இனிய நண்பர் காதர்' ஆசிச் செய்தியை ஊடகப் பேரவையின் பிரதித் தலைவரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட அறிவிப்பாளருமான ஏ.முஹம்மட் அன்சார் வாசித்தளித்தார்.

'காதரின் ஆக்கங்கள் ஆய்வுக்குட்படுத்தப்படவேண்டியவை' என்ற தலைப்பில் ஒருவன் பத்திரிகையின் ஆசிரியர் க.குணராசாவின் அனுதாப செய்தியை பேரவையின் பொருளாளர் ஏ.எல்.எம்.ஷினாஸ் வாசித்தார்.

'காதரும் குடும்ப உறவும்' தலைப்பில் ஊடகவியலாளர் ஏ.எல்.எம்.ஷினாஸும் 'பீ.எம்.எம்.ஏயும் விருதுகளும்' தலைப்பில் பேரவையின் உப செயலாளர் றாஸிக் நபாயிஸும் 'இஸ்லாமிய ஒழுக்கவியலுடன் எழுதிய காதர்' தலைப்பில் மருதமுனை உலமா சபையின் தலைவர் விரிவுரையாளர் எவ்.எவ்.அன்சார் மௌலானாவும் உரையாற்றினர்.

கலாநிதி எம்.றியாஸ் சிரேஷ்ட ஒலி-ஒளிபரப்பாளரும் பேரவையின் பிரதித் தலைவருமான இஸ்மாயில் பீ. மஆரிப் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கவிஞரும் ஓய்வுநிலை நிருவாக உத்தியோகத்தருமான மருதமுனை ஹஸனின் கவிதையுடன் காதரின் புதல்வி ஹரீஸா சமீமின் ஏற்புரையும் நிகழ்வின் விசேட அம்சங்களாயின.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட ஊடக சங்கங்களின் தலைவர்கள்,கல்வியியலாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் காதரின் குடும்ப உறவினர்கள், கலைஞர்கள் எனப் பெருமளவானோர் பங்கேற்றனர்.










தமிழன்
THAMILAN WEEKLY
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/ thamilaneditor@gmail.com

ஞாயிற்றுக்கிழமை, ஜனவரி 19, 2025

# சீனாவும் இலங்கையும்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சீனாவுக்கு மேற்கொண்டுள்ள விஜயத்தால் இலங்கை - சீன உறவில் ஒரு புதிய அத்தியாயம் ஏற்பட்டுள்ளதை உணர முடிவதாக சமூகத்தில் பரவலாக கருத்துகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. இராஜதந்திர ரீதியாக சீன – இலங்கை உறவு ஆழமான, வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது.

உதாரணமாக, கி.பி.401இல் சீன பௌத்த துறவிகள் இலங்கைக்கு வருகை தந்ததைச் சுட்டிக்காட்டலாம். 1950இல் மாவோ சேதுங்கின் தலைமையிலான மக்கள் சீனக் குடியரசை அங்கீகரித்த முதல் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இதன் தொடர்ச்சியாக 1952இல், சீனாவுடன் அரிசி மற்றும் இறப்பர் வர்த்தகம் செய்வதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன் விளைவாக அமெரிக்கா, இலங்கைக்கான அனைத்து உதவிகளையும் அப்போது இரத்துச்செய்தது.

1960களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் முதல் பதவிக்காலத்தின் இறுதியில் அவர் வெளிநாட்டு வர்த்தகத்தை தேசிய மயப்படுத்திய காரணத்தால், அமெரிக்காவும் பிரித்தானியாவும் இலங்கைக்கான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப உதவிகளை நிறுத்தின. இது, இலங்கை அரசாங்கம் சீனாவுடனும் ரஷ்யாவுடனும் நெருக்கமாகச் சாய்வதற்கு வழிவகுத்தது. 1963இல் சீனாவும் இலங்கையும் வர்த்தகத்தை வளர்ப்பதற்கான வணிக – கடல்சார் ஒப்பந்தமொன்றில் கையெழுத்திட்டன. இந்தியாவும் சில மேற்கு நாடுகளும் சீனா தனது கடற்படையின் இருப்பை தெற்காசிய – இந்து சமுத்திர பிராந்தியத்தில் விரிவுபடுத்தும் முயற்சியாக இந்த ஒப்பந்தங்களைக் கருதின.

1965 தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சியானது கடல்சார் ஒப்பந்தத்தையும் இலங்கையின் அரச வணிகத்தில் சீனா செலுத்திய செல்வாக்கையும் தேர்தலில் எதிர்ப்புப் பிரசாரத்துக்குப் பயன்படுத்தியது. ஐக்கிய தேசியக் கட்சி அதன் வெற்றிக்குப் பிறகு மேற்கத்தேய சார்பு சாய்வை எடுத்துக்கொண்டது. 1967இல் சீன மாவோயிஸ்ட் அரசுடனான எதிர்மறையான இராஜதந்திர நிலைப்பாட்டை இலங்கை கடைப்பிடித்தது.

1970இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தது. 1971இல் இலங்கை அரசு, ஐக்கிய நாடுகள் சபையில் நிரந்தர ஆசனத்தை சீன மக்கள் குடியரசுக்கு வழங்கும் வரைபுத் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியது. இலங்கை அரசின் இந்த நிலைப்பாட்டையும் அதன் இடதுசாரி சொல்லாடல்களையும் கண்டு மகிழ்வடைந்த அப்போதைய சீனப் பிரதமர் Zhou Enlai (சோ என்லாய்) அன்றையகால ஜே.வி.பியின் முதல் எழுச்சியை பிற்போக்குவாதிகளின் சதி என்று கண்டித்தார். இன்று அதே ஜே.வி.பி. சீனாவுடன் நெருக்கமாகியுள்ளமை உலகத்தின் ஓட்டத்துடன் நிகழ்ந்துள்ளது.

1972இல் பல கட்டுமான உதவிகள் உட்பட வர்த்தகம் மற்றும் ஆயுத ஒப்பந்தங்கள் இரண்டு நாடுகளுக்கிடையிலும் கைச்சாத்திடப்பட்டன. இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட முன்பேயே புரிந்துணர்வு அடிப்படையில் இலங்கையும் சீனாவும் 1970ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் ஒப்பந்தத்தின் உள்ளடக்கங்களை நடைமுறைப்படுத்தத் தொடங்கின. உதாரணமாக, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வேலைகள் 1970இறுதியிலேயே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. இக்கட்டுமான பணிகளின் செலவினங்களுக்கு ஈடாக இலங்கையிலிருந்து சீனாவுக்கு அரிசி ஏற்றுமதியாகியது. ஆனாலும், பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபக் கட்டடம், சீன மக்களின் அன்பளிப்பென்றே வெளியில் கூறப்பட்டது.

1975ஆம் ஆண்டளவில் சீனா இலங்கையின் மிகப்பெரிய ஏற்றுமதி இலக்காக இருந்தது. இலங்கை கிழக்காசியப் பெரும் பொருளாதாரத்துடன் மிகவும் நெருங்கிய உறவை வைத்திருந்ததானது, சர்வதேச அரசியலில் அப்போது மிக ஆச்சரியமாகப் பார்க்கப்பட்டது.

1977ஆம் ஆண்டு, ஜே. ஆர்.ஜெயவர்தன அதிகாரத்துக்கு வந்த பின் இரு நாடுகளுக்குமிடையிலான சமூக – பொருளாதார – வர்த்தக – அரசியல் உறவானது மங்கத் தொடங்கியது. 1990களில் இலங்கையுடன் வர்த்தகம் செய்த நாடுகளில் மிகவும் குறைந்த அளவு வர்த்தகத்தை செய்தது சீனா என்று கணிக்கப்பட்டது. ஆனாலும், 1991இல் இலங்கை வரலாற்றில் பெரியளவிலான ஆயுத இறக்குமதிக்கான ஒப்பந்தத்தை இலங்கை, சீனாவுடன் செய்துகொண்டது.

2004இல், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அதன் கூட்டணிக் கட்சிகளும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற்றன. இதைத் தொடர்ந்து நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ 2005ஆம் ஆண்டு ஜனாதிபதியானார். மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியான காலம் தொடக்கம் சீனாவுடனான பொருளாதார, அரசியல் நெருக்கப்பாட்டை வலுப்படுத்தும் ஒப்பந்தங்கள் பல கைச்சாத்திடப்பட்டன. மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் முதலீடுகளுடன் இலங்கைக்குள் புகுந்த சீனா இன்று இலங்கையில் கோலோச்சுகிறது.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் பேசுபொருளாக இருந்த அம்பாந்தோட்டை எண்ணெய் சுத்திகரிப்பு விவகாரத்தைக் கடுமையாக விமர்சித்த ஜே.வி.பியின் பிரமுகர்கள் இன்று அதனை கைச்சாத்திட்டிருப்பதுகூட காலத்தின் மாற்றம்தான்.

சீனாவுடனான இராஜதந்திர உறவுகள் நீண்டநாட்களாக இருந்தாலும் பிராந்தியத்தில் சீனாவையும் இந்தியாவையும் கையாள்வதில் இலங்கை ஆட்சியாளர்கள் சரியான அணுகுமுறையை கடைப்பிடிக்கவில்லை. எனினும், பெரும்பாலான ஆட்சியாளர்கள் சீனாவுடன் ஓர் அளவுக்கு மேல் நெருங்கவில்லை. ஆனால், ஜனாதிபதி அநுரகுமார முன்னையவர்கள் அனைவரையும் தாண்டி ஒரு படி மேலே சென்றிருப்பது அவரின் விஜயத்தின் மூலம் புலனாகிறது. ஆனால், இதனால் வரும் இராஜதந்திர எதிர்வினைகளையும் அவர் சந்தித்தாக வேண்டும்.

# அரிசி என்ற ஆப்பு





**மீநிலங்கோ தெய்வேந்திரன்**

இன்று இலங்கையர்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினை அரிசித் தட்டுப்பாடாகும். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அரசாங்கம் எதிர்நோக்கும் முதன்மையான சவால் போதுமான அரிசியை நியாய விலையில் சந்தையில் தக்கவைப்பதே. ஆனால், இதுவரை அரசாங்கத்தால் அது இயலாமலுள்ளது. இது அரசாங்கத்தின் 'இயலுமை' குறித்த பல கேள்விகளை எழுப்புகிறது.

பெரும்பாலான இலங்கையர்கள் பயன்படுத்தும் சிவப்பு அரிசி தற்போது சந்தையில் பற்றாக்குறையாகவுள்ளது. இதற்கு அரசியல் காரணிகளுக்கு அப்பாலான காரணிகளும் உள்ளன. இலங்கையில் அரிசி பிரதானமானது. நாட்டு சம்பா மற்றும் கீரி சம்பா எனப்படும் வகைகள் சந்தையில் கிடைக்கின்றன. இறக்குமதி செய்யப்பட்ட பாஸ்மதி ஒரு செல்வந்த வகுப்பினரால் மட்டுமே உட்கொள்ளப்படுகிறது. சாதாரண மக்கள் உட்கொள்ளும் சிவப்பு அரிசிக்கு பற்றாக்குறை நிலவுகிறது.

தற்போது நிலவும் மோசமான வானிலையால் நெல் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. 3,38,446 ஏக்கர் நெற்பயிர்கள் நட்டமடைந்துள்ளதுடன், வங்காள விரிகுடாவில் அண்மையில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியால் ஏற்பட்ட அழிவால் 1,37,880 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக கமநல அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

இலங்கையின் 2.5 மில்லியன் விவசாயிகள், நாட்டின் மொத்தத் தொழிலாளர்களில் 30 சதவீதமாகும். இவர்கள் பருவநிலைக்கேற்ப பயிர்ச்செய்கையில் ஈடுபடுவோராவர். உலக வங்கியின் காலநிலை மாற்ற அறிக்கையின்படி, காலநிலை மாற்றத்தால் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நாடுகளில் இலங்கை உள்ளது. கடுமையான வெப்பநிலை உயர்வு சராசரியை விட வேகமாக இருக்குமென்று கணிக்கப்பட்டுள்ளது. காலநிலை உணர்திறன்கொண்ட நெல் உற்பத்தியைப் பிரதானமாகக்கொண்ட இலங்கை விவசாயிகளுக்கு காலநிலை மாற்றம் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் நாட்டில் தற்போது நிலவும் அரிசி நெருக்கடி குறித்து நாட்டிலுள்ள நுகர்வோர் அறியாமல் உள்ளனர். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, செப்டெம்பர் மாத இறுதியில் பதவியேற்ற பின்னர் அவர் எதிர்கொண்ட முதலாவது முக்கிய பிரச்சினை இதுவாகும். முதலில் கிட்டத்தட்ட அனைத்து ரகங்களின் அரிசியின் விலையும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் சுமார் 200 ரூபாவாக இருந்தது. தேர்தலுக்குப் பின்னர் அது 250 ரூபாவாக அதிகரித்தது. ஆனால், சந்தையில் தட்டுப்பாடு இல்லாமல் அரிசி கிடைத்தது. சடுதியான விரய அதிகரிப்பு கட்டுப்படுத்தப்பட்ட விலையை நிர்ணயம் செய்ய அரசை நிர்ப்பந்தித்தது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, அண்மைய மாதங்களில் அரிசி ஆலை உரிமையாளர்களை மூன்று தடவைகள் சந்தித்தார். முதலில் அவர் பாரிய ஆலை உரிமையாளர்களை ஒக்டோபர் மாதம் சந்தித்தார். பின்னர் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆலை உரிமையாளர்களை டிசம்பர் 02ஆம் திகதி சந்தித்தார்.

அரசால் நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையில் போதுமான அரிசியை சந்தைக்கு வழங்க அனைவரும் ஒப்புக்கொண்டனர். பின்னர் சில நாட்களாக சந்தை சீரானது. அந்த வாக்குறுதியும் விலையேற்றத்துக்குப் பிறகு சந்தையை தற்காலிகமாக ஸ்திரப்படுத்துவதும் அரிசி ஆலைகள் செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்கி விலையை உயர்த்தியதை ஒப்புக்கொண்டது. ஆனாலும், சில நாட்கள் மட்டுமே அவர்கள் உறுதியளித்தபடி நடந்துகொண்டனர். தற்போது, சந்தையில் சிவப்பு அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், கட்டுப்படுத்தப்பட்ட விலையை கடைப்பிடிக்க வியாபாரிகள் மறுத்து வருகின்றனர்.

இதற்கிடையில் அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இருப்பினும், ஜனவரி முதலாம் திகதிக்குள் தனியார் இறக்குமதியாளர்கள் மற்றும் அரசாங்கத்தால் இறக்குமதி செய்யப்பட்ட தொகைகளுக்கிடையே அப்பட்டமான வேறுபாடு இருந்தது. தனியார் வர்த்தக நிறுவனங்கள் 79,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்திருந்த நிலையில், அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம் 780 மெற்றிக் தொன்களையே இறக்குமதி செய்ய முடிந்தது.

மேலும், அரிசி இறக்குமதிக்கான சில அரசாங்க விலை மனுக்கள் நிராகரிக்கப்பட்டதையும் தனியார் வர்த்தகர்களால் சமர்ப்பிக்கப்பட்டவை அங்கீகரிக்கப்பட்டதையும் அமைச்சர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். அவ்வகையில் அவர்கள் வெளிப்படைத்தன்மையோடு இருக்கிறார்கள் என்பது பாராட்டுக்குரியது. ஆனால், இன்றுவரை அரசாங்கத்தால் குறித்த விடயத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இயலவில்லை என்பதே உண்மையாகும். இது அரசியல் வட்டாரங்களில் "அரிசி மாபியா" என்று அறியப்படும் குழுவானது எவ்வளவு செல்வாக்கானதாக இருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

மிகவும் கவலையளிக்கும் விடயம் யாதெனில், இலங்கையின் வருடாந்த அரிசித் தேவையான 2.4 மில்லியன் மெற்றிக் தொன் 2024 இல் உற்பத்தியான 4.2 மில்லியன் மெற்றிக் தொன்களை விட மிகக் குறைவாக இருப்பதாக பல்வேறு அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. முன்னாள் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவும் அண்மையில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போது இந்தப் புள்ளிவிபரங்களை உறுதிப்படுத்தினார்.

இருப்பினும், பெரிய அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் நேர்மையற்ற அதிகாரிகள் மக்களை அடகுவைத்து தமது நலன்களைப் பாதுகாக்க முனைவது புதிதல்ல. ஒரு தசாப்தத்துக்கும் மேலாக தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் ஏன் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கத் தவறிவிட்டன என்ற கேள்வி முக்கியமானது. இந்தப் பிரச்சினை எழுந்தபோது, ஒவ்வொரு அரசாங்கமும் ஒருமுறையாவது விலைக் கட்டுப்பாட்டை நாடியது. ஆனால், அது இறுதியில் பயனற்றது என்பதை நிரூபித்தது.



இன்றைய அரிசி நெருக்கடி அரசாங்கத்தின் நிர்வாகத் திறனைச் சோதிக்கிறது. அதேவேளை, நிர்வாகம் முழுமையாக அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இல்லை என்பதையும் காட்டுகின்றது. அவ்வகையில் ஒரு குழம்பிய குட்டையாக இன்றைய அரசாங்கம் காட்சித் தருகிறது. குழம்பிய குட்டையில் மீன்பிடித்தல் இலகு. அதற்கு சில சக்திகள் தயாராக இருக்கின்றன.

ஜனாதிபதியும் அரசாங்கமும் தெளிவான பொருளாதாரக் கொள்கை நிலைப்பாடுகளை எடுத்தாக வேண்டும். அரசாங்கத்தின் நடவடிக்கைகள் "பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை"என்பது போல் உள்ளன. தேர்தல் பிரசாரங்களில் ஐ.எம்.எவ்யைக் கடுமையாகச் சாடிய தேசிய மக்கள் சக்தியினர் ஆட்சிக்கு வந்தவுடன் எதுவித மாற்றமுமின்றி ஐ.எம்.எவ்வின் உடன்படிக்கைகளை ஏற்றுக்கொண்டனர்.

இன்று அரசாங்கத்தின் "பொருளாதாரக் குழு" நவதாராளவாதப் பாதையில் அரசாங்கத்தை வழிநடத்துகிறார்கள். இது தேசிய மக்கள் சக்தியில் வெற்றுச் சுலோகங்களுக்கப்பால் பொருளாதாரத்தைச் சரிவர விளங்கிக்கொள்ளக்கூடிய ஆட்கள் மிகக்குறைவு என்பதைக் காட்டுகிறது.

சிதைந்துவரும் சர்வதேச பொருளாதார ஒழுங்கின் ஏற்ற இறக்கம் மற்றும் இலங்கையின் நிதி ஸ்திரத்தன்மையில் ஐ.எம்.எவ். கவனம் செலுத்துவது ஆகியவற்றின் அடிப்படையில் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் தொடர்ச்சியாக நெருக்கடிகளைச் சந்திக்கப் போவது உறுதி.

குறிப்பாக ஐ.எம்.எவ்வின் பொருளாதார மற்றும் நிதி ஆலோசனையானது வர்க்க சார்புடையது மற்றும் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கான அதன் பாதையானது, மறுசீரமைப்பு செலவினங்களின் சுமையை ஏழைகளின் மீது சுமத்துவதாகும். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஐ.எம்.எவ்வின் பாதையில் செல்ல ஒப்புக்கொண்டாலும் ஏழை மற்றும் தாழ்த்தப்பட்டவர்களின் நலன்களுக்காக அரசாங்கம் பிரிந்து செல்லவேண்டிய ஒரு நேரம் வரும். வரவிருக்கும் வரவு-செலவுத் திட்டம் அரசாங்கம் எதிர்கொள்ளும் இக்கட்டான சூழ்நிலையைப் பற்றிய சில அறிகுறிகளைக் கொடுக்க வேண்டும்.

இலங்கை போன்ற சிறிய பொருளாதாரங்கள் ஓரளவு பொருளாதார சுதந்திரத்தை அடையவேண்டுமானால் அவற்றின் பொருளாதார முன்னுரிமை களை சரியாகத் திட்டமிட வேண்டும். உள்நாட்டு உற்பத்தித் துறையில் குறிப்பாக, விவசாயத்தை வளப்படுத்துவதில் கவனம் வேண்டும். உணவுப் பாதுகாப்பு மற்றும் மக்களின் அடிப்படைத் தேவைகள் திருப்திகரமாக நிறைவேற்றப்படாமல் அரசியல் சுதந்திரத்தில் எந்தப் பொருளும் இல்லை.

இலங்கை போன்ற ஒரு நாட்டுக்கு சமத்துவமின்மை, வருமானம் மற்றும் செல்வ ஏற்றத்தாழ்வுகள் ஏற்கனவே மிக அதிகமாகவுள்ள அளவிலுள்ள நிலையில், ஐ.எம்.எவ். வழிபட்ட மீட்சியானது பேரழிவுகரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். வறுமைக்கோட்டின் கீழ் விரிவடையும் இலங்கையர்களின் எண்ணிக்கையானது எந்தவொரு வளரும் பொருளாதாரத்தின் முதுகெலும்பான நடுத்தர வர்க்கத்தின் சீரழிவையும் குறிக்கிறது. அதற்குப் பதிலாக, மோட்டார் வாகனங்களுக்கான தேவை மற்றும் வாகன இறக்குமதி கட்டுப்பாடுகள் மீதான அனைத்து கட்டுப்பாடுகளையும் நீக்குவதற்கு குறிப்பிட்ட உயர்வர்க்கம், உருவாக்கிய அழுத்தம் ஆகியவை கவனிப்புக்குரியவை. இலங்கையின் கணிசமான நகர்ப்புறக் குழுவானது தேய்மானம் பெறும் சொத்தான வாகனங்கள் மீது 200-300% வரிகளைச் செலுத்தத் தயாராக இருப்பது, ஒரு பொருளாதாரத்தில் தலைகீழான ஊக்கங்கள் மற்றும் ஏற்றத்தாழ்வுகளின் மறுக்க முடியாத அறிகுறியாகும்.

1970களின் நிலச் சீர்திருத்தங்களுக்கு வழிவகுத்த வருமானம் மற்றும் செல்வத்தின் விநியோகம் தொடர்பான கட்டமைப்புப் பிரச்சினை இலங்கையில் இன்னமும் உள்ளது. பல நூற்றாண்டுகளாக ஒருசிலரின் கைகளில் செல்வம் குவிந்த காலனித்துவத்துக்குப் பிந்தைய சமூகங்களில் இது அசாதாரணமானது அல்ல.

இதுவரை, புதிய அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சிக்கன நடவடிக்கை திட்டத்திலிருந்து குறிப்பிடத்தக்க விலகல்கள் எதையும் சமிக்ஞை செய்யவில்லை. அவர்களே மிகவும் கடுமையாக விமர்சித்த பாதையில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பயணம் செய்யுமாயின் அது கருத்தியல் தளத்தின் சரணடைதல் மற்றும் அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்காகாக கொள்கைகளிலிருந்து பின்வாங்குவதைப் பிரதிபலிக்கிறது.

# ★ சீனாவில் அநுர – அதிருப்தியில் இந்தியா

# ★ எதிர்க்கட்சிப் பிரமுகர்களுடன் இந்தியத் தூதுவர் அவசர சந்திப்பு

# ★ ரணில் – சஜித் இணைய பேச்சு – விசேட குழுவும் நியமனம்




சிவா இராமசாமி
mesivaraj@yahoo.com

சீன ஜனாதிபதி சீ ஜின்பிங்கின் (Xi Jinping) அழைப்பின்பேரில் சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, கடந்த செவ்வாய்க்கிழமை (14) சீன நேரப்படி காலை 10.25 மணியளவில் சீனாவின் பீஜிங் சர்வதேச விமான நிலையத்தைச் சென்றடைந்தார்.

அங்கு, சீன பிரதி வெளியுறவு அமைச்சர் சென் சியாடொன் வரவேற்றதோடு, சீன இராணுவத்தின் முழு இராணுவ மரியாதையுடன் ஜனாதிபதிக்கு வரவேற்பளிக்கப்பட்டது. ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பயணித்த பாதையின் இருமருங்கும் இரு நாடுகளின் தேசியக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ ஜென்ஹொன்ங், சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் மஹிந்த ஜயசிங்க ஆகியோரும் இந்த விஜயத்தில் பங்கேற்றனர்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மறுநாள் புதன்கிழமை (15) காலை சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறு அடங்கலான கண்காட்சியைப் பார்வையிட்டார். பின்னர், சீன வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமான குங் அரண்மனை அருங்காட்சியகத்தையும் பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து சீன மக்கள் குடியரசின் ஸ்தாபகத் தலைவர் மாவோ சேதுங் நினைவிடத்துக்குச் சென்று மலர் அஞ்சலி செலுத்தினார்.

### சீன ஜனாதிபதியுடன் சந்திப்பு

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் சீன ஜனாதிபதி சீ ஜின்பிங்குக்கும் (Xi Jinping) இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு கடந்த புதன்கிழமை (15) பிற்பகல் சீன மக்கள் மண்டபத்தில் நடைபெற்றது.

சீன மக்கள் மண்டபத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு சீன ஜனாதிபதி சீ ஜின்பிங் அமோக வரவேற்பளித்தார். மரியாதை வேட்டுக்களுடன் மிகுந்த கௌரவமான முறையில் வரவேற்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து இருதரப்பு அரச தலைவர்களுக்குமிடையில் சுமுகமான கலந்துரையாடல் நடைபெற்றதோடு, அடுத்து இரு தரப்புக் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டன. அபிவிருத்தியின் புதிய யுகத்துக்காக இலங்கையுடன் இணைந்து பணியாற்றத் தயாராகவிருப்பதாக சீன ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தினார்.

அத்தோடு நெருங்கிய நட்பு நாடுகள் என்ற வகையில் சீனாவுக்கும் இலங்கைக்குமிடையிலான நீண்டகால உறவை நினைவுகூர்ந்த சீன ஜனாதிபதி சீ ஜிங்பிங், எதிர்காலத்தில் இலங்கையுடன் தொடர்ந்து ஒத்துழைக்கத் தயாராகவிருப்பதாகவும் தெரிவித்தார்.


இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பைத் தொடர்ந்து இரு நாடுகளுக்குமிடையில் பொருளாதார, சமூக மற்றும் கைத்தொழிற்றுறை சார்ந்த பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

### முதலீட்டாளர்களுக்கும் அழைப்பு – ஜனாதிபதி சீன முதலீட்டாளர்களைச் சந்தித்தார்

சீன அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைந்து ஏற்பாடுசெய்திருந்த முதலீட்டு அமர்வு கடந்த வியாழன் இடம்பெற்றது. ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் விஜயத்தின் மூன்றாம் நாளுடன் இணைந்ததாக இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சீன டியான்யிங் இன்கோப்பரேசன் (CNTY- China Tianying Inc), சீன ஹார்பர் பொறியியல் நிறுவனம் (China Harbour Engineering Company Ltd), சீன தொலைத்தொடர்பு நிர்மாண கம்பெனி லிமிடெட் (China Communications Construction Company Ltd), சீன பெட்ரோகெமிக்கல் கூட்டுத்தாபனம் (China Petrochemical Corporation- SINOPEC Group), மெடலர்ஜிகல் கோபரேசன் ஒவ் சைனா நிறுவனம் (Metallurgical Corporation of China Ltd), சீன சிவில் பொறியியல் நிர்மாணக் கூட்டுத்தாபனம் (China Civil Engineering Construction Corporation), சீன எனர்ஜி இன்டர்நெசனல் குழும நிறுவனம் (China Energy International Group Company Ltd), குவாங்சு பொதுப் போக்குவரத்து குழுமம் (The Guangzhou Public Transport Group) உட்பட பல முன்னணி சீன நிறுவனங்கள் இந்த முதலீட்டு அமர்வில் பங்கேற்றன.

அந்த நிறுவனங்களின் தலைவர்களுடன் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.



### ஒப்பந்தம் கைச்சாத்து

ஜனாதிபதியின் முதலாவது சீன விஜயத்தின் பலனாக 3.7 பில்லியன் டொலர் பாரிய வெளிநாட்டு நேரடி முதலீடு கிடைத்த செய்தி வியாழன் அறிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தின்போது இலங்கைக்குக் கிடைத்த பாரிய முதலீட்டைக் குறிக்கும் வகையில் இலங்கை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சுக்கும் சீனாவின் சினோபெக் முன்னணி சர்வதேச பெற்றோலிய நிறுவனத்துக்குமிடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு கடந்த வியாழன் (16) காலை இடம்பெற்றது.

இந்த 3.7 பில்லியன் டொலர் வெளிநாட்டு நேரடி முதலீட்டின்கீழ் அம்பாந்தோட்டையில் நிர்மாணிக்கப்படும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் 02 இலட்சம் கொள்ளளவுடைய எண்ணெய்த் தாங்கிகளைக் கொண்டுள்ளதுடன், அவற்றில் பெருமளவான தொகையை ஏற்றுமதிசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

சீனாவிடமிருந்து இலங்கைக்குக் கிடைத்த இந்தப் புதிய முதலீடு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை வலுப்படுத்துவதுடன், அம்பாந்தோட்டையின் குறைந்த வருமானம் பெறும் மக்களின் வாழ்வாதாரத்தையும் பலப்படுத்தும். அத்துடன், முழு இலங்கை மக்களுக்கும் இதன் பலன் மிக விரைவில் கிடைக்கப்பெறுமென்று அரசாங்கம் கூறுகிறது.

### கூட்டறிக்கை

சீன – இலங்கை ஜனாதிபதிமார் நடத்திய சந்திப்பின் பின்னர் கூட்டறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

### அந்தக் கூட்டறிக்கை பின்வருமாறு:

01. சீன மக்கள் குடியரசுத் தலைவர் ஷீ ஜின்பிங்கின் அழைப்பின்பேரில், இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க, 2025, ஜனவரி 14 முதல் 17 வரையில் சீன மக்கள் குடியரசுக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

02. இவ்விஜயத்தின்போது, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, ஜனாதிபதி ஷீ ஜின்பிங்குடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டதுடன், அரச சபைப் பிரதமர் லீ சியாங் மற்றும் தேசிய மக்கள் காங்கிரஸின் நிலைக்குழுத் தலைவர் ஜாஓ லெர்ஜி ஆகியோரைச் சந்தித்தார். ஒரு சுமுகமான மற்றும் நட்பு சூழ்நிலையில், இரு தரப்பினரும் பாரம்பரிய நட்பை மேலும் வலுப்படுத்துதல், சீனாவுக்கும் இலங்கைக்குமிடையே உயர்தர பெல்ட் அண்ட் ரோட் ஒத்துழைப்பை மேம்படுத்துதல் (ஒரே எண்ணக்கருவுடனான ஒரே பாதை), பல்துறை நடைமுறை ஒத்துழைப்பை மேம்படுத்துதல் மற்றும் பரஸ்பர ஆர்வமுள்ள பிராந்திய மற்றும் சர்வதேச பிரச்சினைகள் குறித்து ஆழமான கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொண்டதுடன், அவை தொடர்பில் விரிவானதும் பொதுவானதுமான புரிதல்களை எட்டினர்.

03. வெவ்வேறு அளவிலான பரிமாணங்களைக்கொண்ட நாடுகளான சீனாவும் இலங்கையும் 68 ஆண்டுகால இராஜதந்திர உறவுகளில் தொடர்ந்து ஒருவரையொருவர் மதித்து, ஒருவரையொருவர் சமமாக நடத்தி, ஒருவருக்கொருவர் ஆதரவாக இருந்துள்ளதுடன், நட்புரீதியான தொடர்புகள் மற்றும் பரஸ்பர நன்மை பயக்கும் ஒத்துழைப்புக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாகத் திகழ்கின்றன எனும் பெருமையை இருதரப்பினரும் பகிர்ந்துகொண்டனர். இறப்பர்- அரிசி ஒப்பந்தத்தில் பொதிந்துள்ள சுயாதீனத்துவம், தன்னிறைவு நிலை, கூட்டுணர்வு மற்றும் பரஸ்பர உதவி ஆகியவற்றின் உணர்வை முன்னெடுத்துச் செல்லவும், பரஸ்பர மரியாதை, பரஸ்பர நம்பிக்கை, பரஸ்பர ஆதரவு, இருதரப்பினதும் வெற்றிக்கான ஒத்துழைப்பு மற்றும் பொதுவான வளர்ச்சி ஆகிய கொள்கைகளைப் பின்பற்றவும் நேர்மையான பரஸ்பர உதவி மற்றும் என்றென்றும் நீடிக்கும் நட்பின் அடிப்படையில் சீன – இலங்கை மூலோபாய கூட்டுறவு கூட்டாண்மையை ஆழப்படுத்துவதில் உறுதியாக இருக்கவும் இரு நாடுகளுக்கும் மக்களுக்கும் அதிக நன்மைகளைப் பயக்கும் பகிரப்பட்ட எதிர்காலத்துடன் கூடிய சீன – இலங்கை சமூகத்தைக் கூட்டாகக் கட்டியெழுப்பவும் இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.

04. இருதரப்பு உறவுகள் தொடர்பில் இரு நாடுகளின் தலைவர்களினதும் வலுவான மூலோபாய வழிகாட்டுதலைப் பேணுவதற்கும் இரு அரசுகள், சட்டமன்ற அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கிடையேயான இருதரப்பு பரிமாற்றங்களை மேலும் வலுப்படுத்துவதற்கும் அரசியலில் பரஸ்பர நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கும் ஒருவருக்கொருவர் ஆட்சி மற்றும் அபிவிருத்திக்கான அனுபவத்தைப் பகிர்ந்துகொள்வதற்கும் அவற்றின்மூலம் கற்றுக்கொள்வதற்கும் சீன-இலங்கை உறவுகளை மேம்படுத்த அர்ப்பணிப்புடன் முயற்சிகளை மேற்கொள்வதற்கும் இரு தரப்பினரும் இணங்கினர்.

05. இரு தரப்பினரும் தமது முக்கிய நலன்கள் மற்றும் கவனம் செலுத்தவேண்டிய முக்கிய விடயங்கள் தொடர்பான பிரச்சினைகளில் தமது பரஸ்பர ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தினர். ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைத் தீர்மானம் 2758இன் அதிகாரத்தை இரு தரப்பினரும் மீண்டும் உறுதிப்படுத்தியதுடன், சீன மக்கள் குடியரசின் அரசானது, முழு சீனாவையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே சட்டபூர்வ அரசாங்கம் என்பதையும் தாய்வான் சீனப் பிரதேசத்தின் பிரித்தெடுக்க முடியாத பகுதியாகும் என்பதையும் அங்கீகரித்து, ஒரே சீன கொள்கைக்கான தனது வலுவான உறுதிப்பாட்டை இலங்கை மீண்டும் உறுதிப்படுத்தியது. தேசிய மீள் ஒருங்கிணைப்பை அடைவதற்கான சீன அரசின் அனைத்து முயற்சிகளையும் இலங்கை உறுதியாக ஆதரிப்பதுடன், 'சுயாதீன தாய்வான்' எண்ணக்கருவின் எவ்வித நிலையும் எதிர்த்து நிற்கிறது. சீனா தொடர்பான எந்தவொரு எதிர் மற்றும் பிரிவினைவாத நடவடிக்கைகளுக்கும் தனது பிரதேசத்தைப் பயன்படுத்த இலங்கை ஒருபோதும் அனுமதிக்காது என்றும், ஷிசாங் மற்றும் ஷின்ஜியாங் தொடர்பான பிரச்சினைகளில் சீனாவை உறுதியாக ஆதரிக்கும் என்றும் இலங்கை மீண்டும் வலியுறுத்தியது. தேசிய சுதந்திரம், இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதில் இலங்கையை தொடர்ந்து வலுவாக ஆதரிப்பதாகவும் அதன் தேசிய நிலைவரங்களுக்கேற்ற வளர்ச்சிப் பாதையை சுயாதீனமான தெரிவுகளில் இலங்கைக்கு மதிப்பளித்து, அவற்றுக்கு ஆதரிப்பதாகவும் சீனா மீண்டும் வலியுறுத்தியது. சுதந்திரமானதும் அமைதியானதும் வெளியுறவுக் கொள்கைக்கான அதன் உறுதிப்பாட்டை சீனத் தரப்பு மீண்டும் வலியுறுத்தியது. சுயாதீனமான அணிசேரா வெளியுறவுக் கொள்கைக்கான தனது உறுதிப்பாட்டை இலங்கை மீண்டும் வலியுறுத்தியது.

06. 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களை வெற்றிகரமாக நடத்தியமைக்காக இலங்கைக்கு சீனா வாழ்த்துத் தெரிவித்ததோடு, இலங்கையின் புதிய அரசாங்கம், இலங்கை மக்களை பொருளாதார மற்றும் சமூக மேம்பாடு, ஒற்றுமை, ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்பு ஆகியவற்றில் முன்னோக்கி அழைத்துச் சென்றமைக்காக தனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்தது மட்டுமல்லாமல், இலங்கை அரசாங்கம் நாட்டின் நிலையான அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு அயராது உழைக்கும் தருணத்தில், சீனா தனது தீவிர ஆதரவை வழங்கத் தயாராக உள்ளதாகத் தெரிவித்தது. புதிய சகாப்தத்தில் சீனாவின் குறிப்பிடத்தக்க சாதனைகளை இலங்கை பாராட்டியதுடன், அனைத்து வகையிலும் சிறந்து விளங்குகின்ற நவீன சோஷலிச நாடொன்றைக் கட்டியெழுப்பவும் சீன நவீனமயமாக்கல் பாதையின் மூலமான சீன தேசத்தின் புத்துணர்ச்சியை மேம்படுத்தவும் சீனாவுக்கான தனது ஆதரவைத் தெரிவித்தது. சீர்திருத்தங்களை விரிவுபடுத்தவும் மேலும் ஆழப்படுத்தவும் உயர்தரத்திலான வெளிப்படைத்தன்மையை ஊக்குவிக்கவும் சீனாவின் உந்துதல் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு புதிய வாய்ப்புகளைக் கொண்டுவரும் என இலங்கை நம்புகிறது.

07. இரு நாடுகளின் தலைவர்களின் வழிகாட்டுதல் மற்றும் ஊக்குவித்தலின் கீழ், சீனாவும் இலங்கையும் பெல்ட் அண்ட் ரோட் பட்டுப்பாதை ஒத்துழைப்பில் பயனுறுதிமிக்க பெறுபேறுகளை உருவாக்கியுள்ளன. இலங்கை, அதன் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியிலும் தனது மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிலும் பெல்ட் அண்ட் ரோட் ஒத்துழைப்பின் முக்கிய பங்கைப் பாராட்டுகிறது. கொழும்பு துறைமுக நகரம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுக ஒருங்கிணைந்த அபிவிருத்தி உள்ளிட்ட அனைத்து முக்கிய திட்டங்களுக்கும் முன்னுரிமை அளிக்கக்கூடிய செயற்பாட்டு நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதற்கும் பட்டுப்பாதைச் செயற்பாட்டுத்திட்டம் போன்ற தளங்களை முழுமையாகப் பயன்படுத்துவதற்கும் வாழ்வாதாரத்துக்கான நிகழ்ச்சித் திட்டங்களுக்கமைவாக ஒன்றாகத் திட்டமிடுதல், ஒன்றாகக் கட்டியெழுப்புதல் மற்றும் ஒன்றாக பயனடைதல், திறந்ததும் பசுமையானதும் மற்றும் அர்ப்பணிப்புமிக்கதுமான ஒத்துழைப்பு, உயர்தரத்திலான மக்களை மையமாகக்கொண்ட மற்றும் வளங்குன்றாத நிலையான வளர்ச்சியுடன்கூடிய உயர்தர பெல்ட் அண்ட் ரோட் ஒத்துழைப்பை ஆதரிப்பதற்காக ஜனாதிபதி ஷி ஜின்பிங் அறிவித்த எட்டு முக்கிய படிகளைப் பின்பற்றுவதற்கும் இரு தரப்பினரும் இணங்கினர். சீனா – இலங்கை உயர்தர பெல்ட் அண்ட் ரோட் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும் உயர்தர, வலுவான மீள்தன்மை மற்றும் அதிக நிலைத்தன்மையினூடான இருதரப்பினதும் வெற்றியை நோக்காகக்கொண்ட மேம்பாட்டுக்கான புதிய இடத்தை கூட்டாகத் திறப்பதற்கும் பெல்ட் அண்ட் ரோட் ஒத்துழைப்புத் திட்டத்தில் கைச்சாத்திடுவதில் இரு தரப்பினரும் மகிழ்ச்சியடைந்தனர்.

08. கடன் பிரச்சினையைத் திறம்பட கையாள்வதில் இலங்கைக்கு வலுவான ஆதரவாக விளங்கிய சீனா, கடன்களை மறுசீரமைப்பதில் வழங்கிய முக்கிய உதவி உட்பட நிதிசார் நெருக்கடி மிகுந்த காலங்களில் சீனாவிடமிருந்து இலங்கை பெற்ற பெறுமதிமிக்க ஆதரவுக்கு இலங்கை தனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்தது. இலங்கை, சீன நிதி நிறுவனங்களுடன் இணைந்து ஒப்புக்கொள்ளப்பட்டவாறு கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை விரைவில் செயற்படுத்துவதற்கான தனது விருப்பத்தை வெளிப்படுத்தியது. சர்வதேச நாணய நிதியத்தில் சீனா தொடர்ந்து நேர்மறையான பங்கை வகிப்பதுடன், இலங்கையின் நிதிச் சிக்கல்களைத் தணிக்கவும் கடன்படு நிலையில் நீடிப்புத்திறனைப் பேணவும் உதவும் வகையில் ஏனைய கடன் வழங்குநர்களுடன் நட்புரீதியான தொடர்பைப் பேணுகிறது. இலங்கை மத்திய வங்கியும் சீன மக்கள் வங்கியும் தங்கள் நாணயமாற்று ஒப்பந்தத்தைப் புதுப்பித்துள்ளதுடன், நிதிசார் ஒத்துழைப்பைத் தொடர்ந்து மேற்கொள்ளவுள்ளன.

09. பொருளாதாரம் மற்றும் வர்த்தகத்தில் இருதரப்பு ஒத்துழைப்பின் முன்னேற்றம் குறித்து இரு தரப்பினரும் திருப்தியடைந்துள்ளனர். பல்வேறு வழிகளில் இலங்கையிலிருந்தான இறக்குமதியை ஊக்குவிப்பதற்காக சீனா மேற்கொண்டுள்ள முயற்சிக்கு இலங்கை நன்றி தெரிவித்தது. தேயிலை, இரத்தினக்கல் மற்றும் பிற தொழில்களில் ஈடுபட்டுள்ள இலங்கை நிறுவனங்களுக்கு சீன இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் சங்கங்களுடன் உறவுகளை ஏற்படுத்துவதில் தொடர்ந்து ஆதரவளிக்கவும் சீன சர்வதேச இறக்குமதி கண்காட்சி, சீன இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கண்காட்சி, சீன- தெற்காசிய கண்காட்சி மற்றும் இலத்திரனியல் வணிகத் தளங்கள் போன்றவற்றில் இலங்கை பங்கேற்பதை எளிதாக்கவும் பரஸ்பர நன்மை மற்றும் இருதரப்பினரதும் வெற்றிக்கான பெறுபேற்று அடிப்படையில் இரு நாடுகளின் நிறுவனங்களுக்கிடையேயான ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்தவும் சீனா தனது தயார்நிலையை வெளிப்படுத்தியது. சமத்துவம், பரஸ்பர நன்மை மற்றும் இருதரப்பினதும் வெற்றியை நோக்காகக்கொண்ட கொள்கைகளுக்கிணங்க, சகலதும் அடங்கிய தொகுப்பொன்றில் விரிவான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை முன்கூட்டியே முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.

சீனாவிலிருந்து அதிக வணிக முதலீட்டை இலங்கை வரவேற்பதுடன், இந்நோக்கத்துக்காக உகந்ததொரு முதலீடு மற்றும் வணிக சூழலை வழங்கும். இலங்கையில் பொருளாதார மாற்றம் மற்றும் நிலையான அபிவிருத்தியை எளிதாக்குவதற்காக இலங்கையில் முதலீடு செய்வதில் சீனாவானது அதன் நிறுவனங்களை தொடர்ந்து ஊக்குவிக்கும். உயர்தர மற்றும் பரஸ்பர நன்மை பயக்குகின்ற செயற்பாட்டு ரீதியிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக ஏற்பாட்டியல், வளங்குன்றாத அபிவிருத்தி மற்றும் இலத்திரனியல் பொருளாதாரம் போன்ற துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்த இரு தரப்பினரும் இணங்கினர்.

10. விவசாயம் தொடர்பான பரந்தளவிலான ஒத்துழைப்பு மற்றும் ஆழமான பரிமாற்றங்கள் குறித்த நேர்மறையான மதிப்பீடுகளை இரு தரப்பினரும் பகிர்ந்துகொண்டனர்.

(தொடர்ச்சி 08ஆம் பக்கம்)

# இடைத்தேர்தலைப் புறக்கணித்த எதிர்க்கட்சிகள்:

# தேர்தலுக்கு முன்பே வெற்றிபெற்ற தி.மு.க!



ரமணி

ஈரோடு கிழக்குத் தொகுதியின் உறுப்பினரான கே.வி.எஸ்.இளங்கோவன் மரணமானதால் பெப்ரவரி 05ஆம் திகதி இடைத் தேர்தல் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இடைத் தேர்தலில் ஆளும் கட்சியே வெற்றிபெறுவதென்பது எழுதப்படாத சட்டமாக உள்ளது. ஆளும் கட்சியின் மீது வெறுப்பிருக்கும் சில சந்தர்ப்பங்களில் எதிர்க்கட்சி வெற்றிபெற்ற வரலாறும் உள்ளது.

இடைத் தேர்தலில் ஆளும் கட்சியை எடைபோட சந்தர்ப்பம் கிடைக்கும். கடந்த தேர்தலில் ஆளும் கட்சி பெற்ற வாக்கு, சதவீதம் குறைவடைந்தால் எதிர்க்கட்சிகள் சற்று உஷாராகிவிடும். தமிழகத்தின் பிரதான எதிர்க்கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் தமிழகத்தின் பிரதான எதிர்க்கட்சி என்ற நினைப்பிலுள்ள பாரதீய ஜனதாக் கட்சியும் ஈரோடு கிழக்கு இடைத் தேர்தலைப் புறக்கணிப்பதாக அறிவித்துள்ளன.

தமிழக சட்டமன்றத் தேர்தல் நடைபெறுவதற்கு ஒரு வருட காலமே இருப்பதனால் திராவிட முன்னேற்றக் கழகத்தை எடை பார்க்கும் சந்தர்ப்பம் நழுவிவிட்டது. இடைத் தேர்தலைப் புறக்கணித்தன எதிர்க்கட்சிகள்.

ஈரோடு கிழக்குத் தொகுதியின் உறுப்பினரான கே.வி.எஸ்.இளங்கோவன் மரணமானதால் பெப்ரவரி 05ஆம் திகதி இடைத் தேர்தல் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சியின் வசமிருந்த ஈரோடு தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகம் களமிறங்கவுள்ளது. தமிழக சட்டசபைத் தேர்தலுக்கு இன்னமும் ஒரு வருடமே உள்ள நிலையில், அங்கு போட்டியிடுவதை காங்கிரஸ் தவிர்த்துள்ளது.

தமிழக மக்களிடம் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு இருக்கும் செல்வாக்கை ஈரோடு இடைத் தேர்தல் வெளிப்படுத்தவுள்ளது. அரசாங்கத்தின் எதிர்ப்பு வாக்குகளை



அறுவடைசெய்யும் வாய்ப்பை எதிர்க்கட்சிகள் இழந்துள்ளன.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், பாரதீய ஜனதாக் கட்சி, விஜயகாந்தின் கட்சி ஆகியன தேர்தலைப் புறக்கணிப்பதாக அறிவித்துள்ளன. பாட்டாளி மக்கள் கட்சி போட்டியிட விரும்பவில்லை. 2026 என்ற தொலைதூர இலக்குடன் விஜய் அமைதியாக இருக்கிறார்.

வி.சி.சந்திரகுமாரை வேட்பாளராக திராவிட முன்னேற்றக் கழகம் அறிவித்துள்ளது. நாம் தமிழர் கட்சி தேர்தலில் போட்டியிடப்போவதாக அறிவித்துள்ளது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் எதிர்ப்பு வாக்குகள் அனைத்தையும் அறுவடைசெய்யும் தகுதி சீமானுக்கு இல்லை. தனது கட்சி வேட்பாளரை பொது வேட்பாளராக்க சீமான் முயற்சி செய்கிறார். எடப்பாடி, ராமதாஸ், அண்ணாமலை ஆகியோர் சீமானுக்கு வெளிப்படையாக ஆதரவு தெரிவிக்கமாட்டார்கள்.

அண்ணா பல்கலைக்கழக விவகாரம் உள்ளிட்ட பல விடயங்களில் ஸ்டாலினையும் திராவிட முன்னேற்றக் கழக அரசையும் கடுமையாக விமர்சனம் செய்யும் அண்ணாமலை, தேர்தல் என்றால் பம்முவது வழமையான செய்திதான். திராவிட முன்னேற்றக் கழக அரசை அகற்றும் வரை செருப்பு அணியமாட்டேன் எனச் சபதம் செய்த அண்ணாமலை, அதற்குரிய சந்தர்ப்பம் இருக்குமா என ஆராயும் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டுள்ளார்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முதலில் தேர்தல் புறக்கணிப்பை அறிவித்தது. இது எதிர்பார்த்த ஒன்றுதான் என்றாலும் கூட கொங்கு மண்டலத்தில் தங்களுக்குப் பலம் உள்ளதாகக் கூறிவரும் நிலையில் அங்கு நடைபெறும் இடைத் தேர்தலைப் புறக்கணித்தது ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியது.

இப்படித்தான் விக்கிரவாண்டி இடைத் தேர்தலையும் அ.தி.மு.க. புறக்கணித்திருந்தது.

அ.தி.மு.கவைத் தொடர்ந்து தே.மு.தி.கவும் தேர்தல் புறக்கணிப்பை அறிவித்தது. விக்கிரவாண்டி தேர்தலையும் தே.மு.தி.க. புறக்கணித்திருந்தது.

அதேசமயம், பா.ஜ.க. இத்தேர்தலில் போட்டியிடக்கூடும் என்று எதிர்பார்க்கப் பட்டது. தி.மு.கவுடன் போட்டியிட்டு 2ஆவது இடத்தைப் பிடித்து தனது நிலையை ஸ்திரப்படுத்த முயலும் என்றும் பரவலாகப் பேசப்பட்டது. ஆனால், பா.ஜ.கவும் தற்போது தேர்தல் புறக்கணிப்பை அறிவித்துள்ளது. தமிழகத்தின் எதிர்க்கட்சி எனக் கூறிக்கொள்ளும் பாரதீய ஜனதாக் கட்சிக்கு தமிழகத்தில் தேர்தல் என்றால் அச்சம் ஏற்படுவது வழமையே.

கடந்த நான்கு ஆண்டுகளாக தமிழகத்தில் நடைபெற்றுவரும் மக்கள் விரோத ஆட்சியைப் பார்த்து வருகிறோம். எல்லா துறைகளிலும் ஊழல், சட்டம் ஒழுங்கு சீர்குலைவு, வேலைவாய்ப்பின்மை, பெண்கள், குழந்தைகள், முதியவர்கள், அரசு அதிகாரிகள், காவல்துறையினர் என யாருக்குமே பாதுகாப்பின்மை என தமிழகம் ஓர் இருண்ட காலத்துக்குத் தள்ளப்பட்டிருக்கிறது எனக் கூறும் அண்ணாமலை, அது உண்மை எனக் கூறும் வாய்ப்பைத் தவறவிட்டுள்ளார்.

ஜனநாயகக் கூட்டணியும் தேர்தலைப் புறக்கணிப்பதாக அறிவித்துள்ளதால் ஈரோடு கிழக்குத் தொகுதியில் தி.மு.கவும், நாம் தமிழர் கட்சியும் மட்டுமே பிரதான கட்சிகளாகப் போட்டியிடும் சூழல் உருவாகியுள்ளது. தி.மு.கவுக்கு நாம் தமிழர் கட்சி நெருக்கடி தருமா என்பது சந்தேகம்தான். அதேசமயம், பெரியாரை கடுமையாக சீமான் விமர்சித்துவரும் சூழலில் அவர் பிறந்த ஈரோட்டில் நடைபெறும் இடைத் தேர்தலில் கணிசமான வாக்குகளைப் பெற நாம் தமிழர் கட்சி முயலக்கூடும்.

பெரிய கட்சிகள் அனைத்தும் தேர்தலைப் புறக்கணித்துவிட்டதால் ஈரோடு கிழக்குத் தொகுதியிலும், விக்கிரவாண்டி இடைத் தேர்தலைப்போல மிகப் பெரிய வெற்றியை தி.மு.க. பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அதேசமயம், பிரதான கட்சிகள் இப்படி தேர்தலைப் புறக்கணிப்பது ஜனநாயகத்துக்கு நல்லதல்ல என்ற கருத்தும் எழுந்துள்ளது.

---

# இஸ்ரேல் - ஹமாஸ்

# போர் நிறுத்த ஒப்பந்தம்

காஸாவிலிருந்து பணயக் கைதிகளை விடுவிக்கும் இஸ்ரேல் - ஹமாஸ் ஒப்பந்தம் எட்டப்பட்டதென்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அரசியல் பாதுகாப்பு அமைச்சரவையைக் கூட்டியுள்ளதாகவும் நெதன்யாஹு தெரிவித்துள்ளார்.

காஸா பணயக் கைதிகளை விடுவிக்கும் இஸ்ரேல் - ஹமாஸ் ஒப்பந்தம் கட்டார் தலைநகர் டோஹாவில் எட்டப்பட்டுள்ளது. முன்னதாக, போர் நிறுத்தத்துக்கான மத்தியஸ்த பணியில் அமெரிக்கா மற்றும் கட்டார் நாடுகள் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திட்டதன் மூலம் 15 மாதங்களாக நடந்துவந்த போர் முடிவுக்கு வந்துள்ளது. இந்நிலையில், காஸாவிலிருந்து பணயக் கைதிகளை விடுவிக்கும் ஒப்பந்தம் எட்டப்பட்டதை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு உறுதிசெய்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "காஸாவிலிருந்து பணயக் கைதிகளை விடுவிக்கும் ஒப்பந்தம் எட்டப்பட்டது. பணயக் கைதிகள் (உயிருடன் இருப்போர், இறந்தோர்) திரும்புதலை உறுதிசெய்தல் உள்ளிட்ட போர் இலக்குகள் அனைத்திலும் இஸ்ரேல் உறுதியாக இருக்கிறது. இந்த ஒப்பந்தம் மூலம் இடம்பெயர்ந்த பலஸ்தீனியர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப அனுமதிக்கப்படுவார்கள்" என்று தெரிவித்துள்ளது.

### 15 மாத கால போர்; 46,000 பலி

கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 07ஆம் திகதி, இஸ்ரேலுக்குள் நுழைந்த ஹமாஸ் அமைப்பு நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் சுமார் 1,200 பேர் கொல்லப்பட்டனர். 251 பேர் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர். இதையடுத்து, ஹமாஸ் அமைப்புக்கு எதிராக இஸ்ரேல் இராணுவ நடவடிக்கையை எடுத்தது. இதில், காஸாவில் 46,700க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக ஹமாஸ் நடத்தும் சுகாதார அமைச்சு தெரிவித்திருந்தது. 23 இலட்சம் மக்களில் பெரும்பாலோர் இடம்பெயர்ந்துள்ளனர். காஸாவில் பரவலான அழிவு ஏற்பட்டுள்ளது. உணவு, எரிபொருள், மருந்து மற்றும் தங்குமிடம் ஆகியவற்றின் கடுமையான பற்றாக்குறை காரணமாக மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர்.

இதற்கிடையில் போர் நிறுத்த ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகள் ஒருபுறம் நடக்க, வியாழனன்று இஸ்ரேல் வான்வழித் தாக்குதலில் காஸாவில் 72 பேர் கொல்லப்பட்டனர். கடைசிநேரத்தில் ஹமாஸ் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் சுணக்கம் காட்டியதாகவும் இஸ்ரேல் குற்றஞ்சாட்டியது.

### அனைவருக்குமான ஒரு 'டீல்'

இந்நிலையில், போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்ததும் முதல் ஆறு வாரம் இரு தரப்பினரும் 'அமைதியாக' இருக்க வேண்டும் என்று கட்டார் பிரதமர் வலியுறுத்தியுள்ளார். இத்தகைய சூழலில் ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளமை காஸா மக்களை நிம்மதியடையச் செய்துள்ளது. காஸா மக்கள் மட்டுமல்ல, இஸ்ரேல், அமெரிக்கா எனப் பல்வேறு தரப்பிலிருந்தும் இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தம் ஆதரவைப் பெற்றுள்ளது.

இருப்பினும், இஸ்ரேலில் சிலர் இந்த ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புக் குரல் எழுப்பியுள்ளனர். ஹமாஸை முழுமையாக அழித்தொழிக்கும் வரை நெதன்யாஹு போர் நிறுத்தத்தை செயற்படுத்தக் கூடாது என்று அந்த அமைப்பினர் முழங்கி வருகின்றனர்.

### அமெரிக்கா நம்பிக்கை

இஸ்ரேலிய அமைச்சரவையில் வாக்களிப்பு தாமதமானபோது, அமெரிக்க வெளியுறவுத் துறை செயலாளர் ஆண்டனி பிளிங்கன், சில தீர்வு காணப்படாத அம்சங்கள் மீது கவனம் செலுத்தப்படுவதாகத் தெரிவித்தார். மேலும், திட்டமிட்டபடி ஞாயிற்றுக்கிழமை முதல் போர் நிறுத்தம் தொடங்குமென்று தான் நம்புவதாகவும் கூறினார்.

இந்த போர் நிறுத்த ஒப்பந்தத்தில் உறுதியாக இருப்பதாக ஹமாஸ் கூறுகிறது. ஆனால், ஒப்பந்தத்தின் கீழ் விடுவிக்கப்படும் பலஸ்தீன கைதிகளின் பட்டியலில் ஹமாஸ் அமைப்பு அதன் சில உறுப்பினர்களைச் சேர்க்க முயற்சி எடுத்தது.

புதன்கிழமையன்று போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்பான அறிவிப்பு வெளியானது. அதன் பிறகும், காஸா மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதலை நடத்தியது. இதில் 80க்கும் மேலானோர் உயிரிழந்துள்ளனர் என்று ஹமாஸ் நடத்தும் சுகாதாரத் துறை அறிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலுக்குப் பிறகு போர் நிறுத்தம் தொடர்பான வாக்களிப்பு தாமதப்படுத்தப்பட்டது. வியாழனன்று அமைச்சரவைக் கூட்டம் நடைபெறுவதற்கு சில மணிநேரங்களுக்கு முன்பு, இறுதி நிமிடத்தில் சலுகைகளைப் பெற ஹமாஸ் முயற்சி செய்கிறது என்று நெதன்யாஹு குற்றஞ்சாட்டினார்.

ஒப்பந்தத்தின் அனைத்து அம்சங்களையும் ஹமாஸ் ஏற்றுக்கொள்ளும் வரை அமைச்சரவையை இஸ்ரேலிய அரசு கூட்டாது என்றும் நெதன்யாஹு அறிக்கை வெளியிட்டிருந்தார்.



இதுபோன்ற ஒரு சவாலான சூழலில் இத்தகைய தாமதத்தை எதிர்பார்த்ததாக பிளிங்டன் அறிவித்தார்.

வாஷிங்டனில் செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய பிளிங்டன் இது குறித்து பேசும்போது, "இதுபோன்ற பேச்சுவார்த்தையில் சவாலான, தீர்வு காண இயலாத அம்சங்கள் இருப்பது



ஆச்சரியமளிக்கவில்லை" என்று குறிப்பிட்டார்.

"அதனை நாங்கள் சரிசெய்ய முயற்சி செய்கின்றோம். எனவே, திட்டமிட்டபடி ஞாயிறன்று ஒப்பந்தம் அமுலுக்கு வரும் என்றும், போர் நிறுத்தம் தொடரும் என்றும் அமெரிக்கா நம்புகிறது" என்றும் அவர் கூறியுள்ளார்.

### எச்சரிக்கை விடுக்கும் கூட்டணிக் கட்சிகள்

பெரும்பான்மையான இஸ்ரேலிய அமைச்சர்கள் இந்த ஒப்பந்தத்துக்கு ஆதரவு வழங்குவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. பாதுகாப்புத் துறை அமைச்சர் இட்டாமர் பென்-கவிர், இந்த ஒப்பந்தத்துக்கு ஒப்புதல் வழங்கப்பட்டால், நெதன்யாஹுவின் கூட்டணி அரசிலி ருந்து தங்களின் வலதுசாரிக் கட்சி வெளி யேறுமென வியாழக்கிழமை கூறியுள்ளார்.

"தற்போது தயாராகிவரும் ஒப்பந்தமானது ஒரு பொறுப்பற்ற ஒப்பந்தம்" என்றும் பென்-கவிர் விமர்சனம் செய்துள்ளார். செய்தியாளர்கள் சந்திப்பில் இவ்வாறு கூறிய அவர், இந்த ஒப்பந்தம் "போர் நிகழ்த்திய சாதனைகளை ஒன்றுமற்றதாக மாற்றும்" என்று குறிப்பிட்டார்.

இருப்பினும், ஒப்பந்தம் அங்கீகரிக்கப் பட்டால், அவரது ஒட்ஸ்மா யெஹுடிட் (யூத சக்தி) கட்சி அரசாங்கத்தைக் கவிழ்க்க முயலாது என்றும் அவர் கூறினார்.

இந்தக் கூட்டணியிலுள்ள மற்றொரு தீவிர வலதுசாரிக் கட்சியின் தலைவரும் நிதியமைச்சருமான ரிலிஜியஸ் சியோனிஸ்ட் கட்சியின் பெசலெல் ஸ்மோட்ரிச்சையும் இந்த முடிவில் தன்னோடு இணையுமாறு பென்-கவிர் வேண்டுகோள் விடுவித்தார்.

இஸ்ரேல் பாராளுமன்றத்தில், அக்கட்சியின் தலைவராக அங்கம் வகிக்கும் ஓஹாட் தால், பிபிசி ரேடியோ 4 நிகழ்வில் பேசியபோது, நெதன்யாஹுவின் அரசை விட்டு வெளியேறுவது குறித்து அக்கட்சியினருடன் விவாதித்து வருவதாகக் கூறினார்.

### அடுத்து நடக்க இருப்பது என்ன?

இந்தச் சூழலில், அமைதி பேச்சுவார்த்தை நடத்தியவர்கள் அறிவித்த ஒப்பந்தத்தை செயற்படுத்த முழு உறுதியுடன் இருப்பதாக ஹமாஸ் அமைப்பின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்கொண்டு பேசிய அவர், ஹமாஸ் தரப்பில் பேச்சுவார்த்தை நடத்திய குழுவின் தலைவர் கலீல் அல்-ஹய்யா, போர் நிறுத்த ஒப்பந்தத்தில் பட்டியலிடப்பட்ட அனைத்து விதிமுறைகளுக்கும் ஒப்புதலளிப்பதாக, கட்டார் மற்றும் எகிப்திடம் அறிவித்தாரென்று அதிகாரபூவமாக தெரிவித்தார்.

ஒப்பந்தத்தின் கீழ் சிறைகளிலிருந்து விடுவிக்கப்படும் கைதிகளின் பட்டியலில் ஹமாஸ் அமைப்பு அவர்களின் ஒன்று அல்லது இரண்டு முக்கிய உறுப்பினர்களின் பெயர்களையும் இணைக்க முயற்சி செய்கிறதென்று, பி.பி.சி. காஸா நிருபர் ருஷ்டி அபுவலூஃப் அறிந்துகொண்டார்.

ஒப்பந்தத்தின் முதல் ஆறு வாரத்தில் இஸ்ரேலிய சிறைகளிலுள்ள பலஸ்தீன கைதிகளை வெளிவிடுவதற்கு மாற்றாக, பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் உட்பட 33 பணயக் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள்.

காஸாவின் மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளிலிருந்து இஸ்ரேலிய துருப்புகள் கிழக்கு நோக்கித் திரும்பும். போரால் இடம்பெயர்ந்த பலஸ்தீனர்கள் தங்களின் சொந்த ஊர்களிலுள்ள வீடுகளுக்குத் திரும்புவார்கள். மேலும், ஒவ்வொரு நாளும் நிவாரணப் பொருட்களுடன் வரும் நூற்றுக்கணக்கான லொறிகள் காஸாவுக்குள் அனுமதிக்கப்படும்.இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை, போர் நிறுத்தம் அமுலுக்கு வந்த 16ஆவது நாளில் தொடங்கும். அப்போது, மீதமுள்ள பணயக் கைதிகளை விடுவிப்பது, இஸ்ரேலிய துருப்புகளை திரும்பப் பெறுவது, நிலையான அமைதிக்குத் திரும்புவது தொடர்பான விவகாரங்கள் ஆலோசிக்கப்படும்.

மூன்றாம் மற்றும் இறுதிக்கட்டப் போர் நிறுத்த நடவடிக்கைகளின்போது, பணயக் கைதிகளின் உடல்கள் ஏதேனும் திரும்பி வழங்காமல் இருந்தால், அதனை திருப்பியளிக்கவும் காஸாவின் மறுகட்டுமானம் குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்தப் புனரமைப்புப் பணிகள் நடைபெற நீண்ட காலமாகும்.

புதன்கிழமையன்று ஒப்பந்தம் அறிவிக்கப்பட்ட பிறகும் கூட, இஸ்ரேல் வான்வழித் தாக்குதலைத் தொடர்ந்தது. அந்தத் தாக்குதலில் காஸாவில் 12 பேர் கொல்லப்பட்டனர். பி.பி.சி. செய்தியாளரிடம் பேசிய மருத்துவர், அந்த இரவில் ஒரு நிமிடம் கூட அமைதியில்லை என்று கூறினார்.

இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகளும் பாதுகாப்பு முகமையும் வெளியிட்ட அறிக்கையில், ஒப்பந்தம் தொடர்பான அறிவிப்பு வெளியான நாளிலிருந்து, காஸாவில் 50 இடங்களில் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று குறிப்பிட்டுள்ளது.

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் முதல் ஆறு வார கட்டம் தொடங்குவதற்கு முன்பு இரு தரப்பினரும் அமைதியைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று போர் நிறுத்த பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட கட்டாரின் பிரதமர் அறிவித்துள்ளார்.

கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 07ஆம் திகதியன்று முன்னெப்போதும் இல்லாத வகையில் இஸ்ரேல் மீது எல்லைத் தாண்டி தாக்குதல் நடத்தியது ஹமாஸ். இதில், 1,200 பேர் கொல்லப்பட்டனர். 251 பேர் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர். இதற்குப் பதிலடி தரும் நோக்கில், ஹமாஸை அழிக்க உறுதிபூண்டது இஸ்ரேல். இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் இதர பல நாடுகள் ஹமாஸை பயங்கரவாத அமைப்பு என்று கூறி தடைசெய்துள்ளன.

காஸாவில் இதுவரை 46,788 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று ஹமாஸின் சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

2.3 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட காஸாவிலிருந்து அநேக மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். தாக்குதலில் பல இடங்கள் அழிவைச் சந்தித்துள்ளன. உணவு, எரிபொருள், மருத்துவம் மற்றும் தங்குமிடம் போன்றவற்றுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அங்குள்ள மக்களுக்குத் தேவையான உதவிகளைப் பெற்றுத்தர பல நிறுவனங்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

பணயக் கைதிகளில் ஏற்கனவே 94 பேர் இன்னும் ஹமாஸ் வசமுள்ளனர் என்றும் அவர்களில் 34 பேர் ஏற்கனவே இறந்திருக்கக்கூடும் என்றும் இஸ்ரேல் கூறுகிறது. போருக்குப் முன்னர் நான்கு இஸ்ரேலியர்கள் கடத்தப்பட்டனர். அவர்களுள் இருவர் இறந்துவிட்டனர்.

- பி.பி.சி -

# mogo
MEDIA ACADEMY

POWERED BY DERANA



# REGISTRATIONS ARE NOW OPEN!

YOUR PATHWAY TO GETTING A JOB IN MEDIA

## OUR OFFERINGS: DIPLOMA PROGRAMS

- VFX
- Animation
- Game Development
- Modeling & Texturing
- Concept Art
- Radio & Television Production
- News Journalism and Production
- Television Post-Production

## WHY CHOOSE US?

- **Global Recognition:** Certification recognized in 18 countries.
- **Industry-Focused:** Programs developed with input from leading media professionals.
- **Hands-On Training:** State-of-the-art Motion Capture Studio & live projects at Mogo Studio and Mogo Games
- **Guaranteed Jobs:** 40% of graduates secure positions at Derana.
- **Expert Faculty:** International experts dedicated to your success.
- **Flexible Plans:** Bank Loan & Credit Card Installments

JANUARY 2025

EDEX Expo 17 18 19 BMICH/25 26 KANDY KCC MEET US.

Receive a Rs.50,000 reward when you attend the EDEX Expo .

## START YOUR JOURNEY IN MEDIA ARTS TODAY!

Hotline: 011 728 8300 Email: reach@mogocademy.lk Visit: mogoacademy.lk

205 De Saram Pl, Colombo 10

Mogo Media Academy is a part of the Derana Macroentertainment Family.

# சாம்பார் தொடர்ச்சி.....

இலங்கையின் நிலையானதும் வளங்குன்றாததுமான விவசாய வளர்ச்சிக்கான திறனை மேம்படுத்த உதவும் வகையில் வெப்பமண்டலப் பயிர்களுக்கான உயிரியற் தொழில்நுட்பங்கள், தாவரப் பெருக்கம், பயிர்ச்செய்கை மற்றும் மீன்வளர்ப்பு உள்ளிட்ட துறைகளில் இலங்கையுடன் பயிற்சி மற்றும் செயல் விளக்கத் திட்டங்களை மேற்கொள்வதற்கான தனது தயார்நிலையை சீனா தெரிவித்தது. மேலும் தேயிலை, பழங்கள், இலவங்கப்பட்டை மற்றும் நீர்வள உற்பத்திப் பொருட்கள் உள்ளிட்ட தனித்துவமான பொருட்களை சீனாவுக்கு ஏற்றுமதி செய்வதை இலங்கை மேலும் விரிவுபடுத்துவதை வரவேற்றது. வறுமைக் குறைப்பு மற்றும் கிராமப்புற மறுமலர்ச்சியில் உன்னிப்பாகக் கவனம் செலுத்துவதன் மூலம் பரிமாற்றங்கள் மற்றும் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கான தயார்நிலையை இரு தரப்பினரும் பகிர்ந்துகொண்டனர். தொடர்புடைய துறைகளில் பணியாளர்களின் திறனை வலுப்படுத்த இலங்கைக்கு உதவ சீனா தனது தயார்நிலையை வெளிப்படுத்தியது.

11. இரு தரப்பினரும் காலநிலை மாற்றத்தை மனித சமூகத்தின் மிகப்பெரிய சவால்களில் ஒன்றாகவும் சீனா மற்றும் இலங்கை உள்ளிட்ட வளரும் நாடுகளின் நிலையான வளர்ச்சிக்கு அச்சுறுத்தலாகவும் விளங்குகின்றது என்பதை ஏற்றுக் கொண்டனர். காலநிலை மாற்றத்தில் தொடர்ந்தும் தீவிரமாக இணைந்து பணியாற்ற இணங்கினர். கடுமையான வெள்ளப்பெருக்கின்போதான மனிதாபிமான நிவாரணத்துக்காக இலங்கை நன்றி தெரிவித்தது. பேரிடர் தடுப்பு, அனர்த்தங்களுக்கெதிரான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் அவசரகால மீட்பு போன்ற துறைகளில் இலங்கையுடன் ஒத்துழைப்பை மேம்படுத்தவும் அதன் தொழில்நுட்பங்களைப் பகிர்ந்துகொள்ளவும் இலங்கையின் அவசரகால முகாமைத்துவத் திறன்களை மேம்படுத்துவதில் பயிற்சியளிக்கவும் சீனா தயாராக இருப்பதாகத் தெரிவித்தது. ஐக்கிய நாடுகளின் 2030இற்கான நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான கூட்டு முயற்சியின் பகுதியொன்றாக, பெல்ட் அண்ட் ரோட் சர்வதேச வளங்குன்றாத நிலையான அபிவிருத்திக் கூட்டணி மற்றும் ஏனைய தளங்களின் தொடர்புடைய நடவடிக்கைகளில் இலங்கையின் பங்களிப்பை சீனா வரவேற்கிறது.

12. சமத்துவம், பரஸ்பர நம்பிக்கை, வெளிப்படைத்தன்மை மற்றும் பரஸ்பர நன்மை ஆகியவற்றின் அடிப்படையில் கடல்சார் ஒத்துழைப்பைத் தொடரவும், கடல்சார் விவகாரங்களில் தொடர்ந்து இருதரப்பு ஆலோசனைகளை நடத்தவும் இருதரப்பினரும் விரும்புகின்றனர். கடல்சார் சுற்றுச்சூழல், கடல்சார் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாத்தல் மற்றும் மறுசீரமைத்தல், கடல்சார் கள விழிப்புணர்வு, கடல்சார் மீட்பு மற்றும் பேரிடர் நிவாரணம், கடல்சார் பணியாளர்களுக்கான பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு போன்ற துறைகளில் ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்தவும் பகிரப்பட்ட எதிர்காலத்துடன் கூடிய கடல்சார் சமூகத்தை உருவாக்க தங்கள் பலத்தை திரட்டவும் இரு தரப்பினரும் தயாராக உள்ளனர். நீல (கடல்சார்) கூட்டாண்மைக்கான கடல்சார் ஒத்துழைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட இரு தரப்பினரும் இணங்கினர்.

13. கல்வித்துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்த இரு தரப்பினரும் தயாராக உள்ளனர். புரிதல் மற்றும் நட்பை அதிகரிப்பதற்கு கல்வித்துறையிலான பரிமாற்றங்களின் முக்கியத்துவத்தை இரு தரப்பினரும் முழுமையாக அங்கீகரித்ததுடன், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் பரிமாற்றங்களை மேலும் மேம்படுத்துவதற்கான தயார்நிலையை இருதரப்பினரும் வெளிப்படுத்தினர். மேலும் அர்ப்பணிப்புள்ள மாணவர்கள் சீனாவில் மேற்படிப்பைத் தொடர்வதை சீனா வரவேற்று, ஊக்குவிப்பதுடன், அவர்களுக்கு அரசாங்க புலமைப்பரிசில்களுடன்கூடிய ஆதரவை அளிக்கத் தயாராக உள்ளது. லூபன் செயற்பாட்டு அமர்வினூடே சிறப்பான பலனை அளிக்கவும் இலங்கைக்கு தொழிற் பயிற்சி மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி மூலம் அதிகப்படியான தொழில்வாண்மையாளர்களை வளர்க்கவும் சீனா இலங்கையுடன் இணைந்து செயற்படும். கல்வித்துறையில் சீனாவின் உதவியை இலங்கை பாராட்டுவதுடன், சீனாவுடன் இணைந்து டிஜிட்டல் வகுப்பறை செயற்றிட்டத்தின் வெற்றிக்காகச் செயற்படும். இலங்கையில் சீன மொழிக் கல்வியை ஊக்குவிக்கவும் இலங்கையிலுள்ள சீன கலாசார மையத்தின் மூலம் இரு நாடுகளுக்குமிடையே கலாசார பரிமாற்றங்கள் மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்தவும் இரு தரப்பினரும் தயார்நிலையில் உள்ளனர். சீன அறிவியல் கல்வி நிறுவனத்தின் கீழுள்ள



சீன - இலங்கை கூட்டுக் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் இரு தரப்பினரும் தொடர்ந்து பணியாற்றுவது மட்டுமன்றி, அதனை மேம்படுத்துவதுடன், இரு நாடுகளின் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றங்கள், ஒத்துழைப்பு மற்றும் கல்வித்துறையை வலுப்படுத்துவதில் ஈடுபாட்டுடன் செயற்படுவர்.

14. இரு தரப்பும் தமது நீண்டகால நட்பை முன்னெடுத்துச் செல்லவும் தங்கள் மக்களை நெருக்கமாகக் கொண்டுவரவும் தயாராகவுள்ளனர். பரஸ்பர சுற்றுலா மற்றும் விமான மார்க்கத் தொடர்புகளை ஊக்குவிக்க இரு தரப்பினரும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர். பட்டுப்பாதை நகரங்களின் சர்வதேச சுற்றுலா கூட்டணியில் இணைத்துள்ள இலங்கை நகரங்களை சீனா வரவேற்கிறது. சீனா மற்றும் இலங்கையில் சுற்றுலா மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இரு தரப்பினரும் தொடர்ந்து ஒருவருக்கொருவர் ஆதரவளிப்பர்.

15. இளைஞர்கள், சிந்தனையாளர்கள், விளையாட்டு மற்றும் ஊடகங்கள் போன்ற துறைகளில் பரிமாற்றங்கள் மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்தவும் பௌத்த மதப் பரிமாற்றங்களின் பிணைப்பைக் கட்டமைக்கவும் மக்களிடையேயும் சகோதர நகரங்களுக்கிடையிலான பரிமாற்றங்களை ஆழப்படுத்தவும் இரு தரப்பினரும் தயாராக உள்ளனர்.

16. இலங்கையில் சுகாதாரத் துறையின் வளர்ச்சிக்கு சீனா தொடர்ந்து ஆதரவளிக்கும். சீனாவின் யூனான் மாகாணம், ப்ரைட்னஸ் ஆக்ஷன் திட்டத்தை செயற்படுத்த இலங்கைக்கு மருத்துவக் குழுக்களை தொடர்ந்து அனுப்பும்.



17. ஜனாதிபதி ஷி ஜின்பிங்கின் கலாசார பாரம்பரியப் பாதுகாப்புக்கான ஆசிய முன்முயற்சி மற்றும் ஆசியாவில் கலாசார பாரம்பரியத்துக்கான கூட்டணி போன்றவற்றில் பங்கேற்பதற்கான இலங்கையின் நேர்மறையான பதிலை சீனத் தரப்பு பாராட்டுகிறது. இக்கூட்டணியின் கீழ் இலங்கையுடன் இருதரப்பு கலாசார பாரம்பரிய ஒத்துழைப்பை சீனா மென்மேலும் ஊக்குவிக்கும்.

18. நீதித்துறை, சட்ட அமுலாக்கம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஆகியவை இருதரப்பு ஒத்துழைப்பின் ஒரு முக்கிய அங்கம் என்பதை இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்வதுடன், தொலைத்தொடர்பு மோசடிகள் மற்றும் இணையத்தள சூதாட்டம் போன்ற நாடுகள் கடந்த குற்றங்களைக் கூட்டாகக் கட்டுப்படுத்தத் தயாராகவுள்ளன. இலங்கையின் நீதித்துறை, சட்ட அமுலாக்கம் மற்றும் பாதுகாப்புத் துறைகளில் திறன் மேம்பாட்டை ஆதரிக்கவும் காவல் துறைக்கு உதவி வழங்கவும் சீனா தன்னால் இயலுமான அனைத்தையும் செய்யத் தயாராகவுள்ளது.

19. ஜனாதிபதி ஷீ ஜின்பிங் முன்மொழிந்த உலகளாவிய அபிவிருத்திக்கான முயற்சி, உலகளாவிய பாதுகாப்பு முயற்சி மற்றும் உலகளாவிய நாகரிக முயற்சி ஆகிய மனிதகுலத்துக்கான பகிரப்பட்ட எதிர்காலத்தைக்கொண்ட ஒரு சமூகத்தின் வளர்ச்சியை ஆதரிப்பதற்கும் அவ்வளர்ச்சியில் தீவிரமாக பங்கேற்பதற்கும் இலங்கை தனது உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியது. இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த காலகட்டத்தில் நிறுவப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையானது, 2025 ஆகிய இவ்வாண்டில் தனது 80ஆவது ஆண்டு நிறைவைக் குறித்து நிற்கிறது. ஐக்கிய நாடுகள் சபையை மையமாகக்கொண்ட சர்வதேச முறைமை, சர்வதேச சட்டத்தால் ஆதரிக்கப்படும் சர்வதேச ஒழுங்கு மற்றும் ஐக்கிய நாடுகள் சாசனத்தின் நோக்கங்கள் மற்றும் கொள்கைகளின் அடிப்படையில் சர்வதேச உறவுகளை நிர்வகிக்கும் அடிப்படை விதிமுறைகளுகிணங்க சர்வதேச முறைமையொன்றை நிலைநிறுத்துவதற்கான தனது இணைந்த உறுதிப்பாட்டை இரு தரப்பினரும் மீண்டும் உறுதிப்படுத்தினர். இரு தரப்பினரும் அமைதியான சகவாழ்வுக்கான ஐந்து கொள்கைகளைக் கடைப்பிடிப்பதுடன், சமமான மற்றும் சீரான பன்முக உலகம் மற்றும் உலகளாவிய அடிப்படையில் நன்மை பயக்கும் மற்றும் அனைத்தும் உள்ளடங்கலான பொருளாதார உலகமயமாக்கலை கூட்டாக ஆதரிப்பது மட்டுமன்றி, உலகின் அனைத்து நாடுகளுக்கும் அமைதி, பாதுகாப்பு, செழுமை மற்றும் முன்னேற்றத்துடனான பிரகாசமான எதிர்காலத்தை நோக்கிச் செயற்படுவர்.

20. இவ்விஜயத்தின்போது, விவசாயம், சுற்றுலா, வாழ்வாதார உதவி, ஊடகம் மற்றும் ஏனைய துறைகளில் இரு தரப்பினரும் ஒத்துழைப்பு ஆவணங்களில் கைச்சாத்திட்டனர்.

21. ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, தனக்கும் இலங்கை தூதுக்குழுவுக்கும் வழங்கப்பட்ட அன்பான விருந்தோம்பலுக்காக சீன அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் நன்றி தெரிவித்ததுடன், சீனத் தலைமையை இலங்கைக்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்தார். சீன ஜனாதிபதி, இலங்கை ஜனாதிபதி விடுத்த அன்பான அழைப்புக்கு நன்றி தெரிவித்ததைத் தொடர்ந்து, இரு தரப்பினரும் இராஜதந்திர ரீதியில் சிறப்பான தொடர்புகளைத் தொடர்ந்தும் சிறப்பாகப் பேண இணங்கினர் - என்று அந்த கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சீன தேசிய காங்கிரஸ் நிலைக்குழுவின் தலைவர் ஜாவோ லெஜி - அநுர சந்திப்பு

இலங்கையின் சுயாதீனத் தன்மை, ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மைக்காக சீனா அர்ப்பணிப்புடன் உள்ளதென சீன தேசிய காங்கிரஸ் நிலைக்குழுவின் தலைவர் ஜாவோ லெஜி (Zhao Leji) தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் சீன தேசிய காங்கிரஸ் நிலைக்குழுவின் தலைவர் ஜாவோ லெஜி ஆகியோருக்கிடையில் கடந்த வியாழன் (16) காலை இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு சீன தேசிய காங்கிரஸ் நிலைக்குழுவின் தலைவர் சிநேகபூர்வமாக வரவேற்பளித்தார்.

மேலும், கருத்துத் தெரிவித்த ஜாவோ லெஜி, இலங்கையுடன் தொடர்ந்து ஒத்துழைத்துச் செயற்பட வேண்டுமென்பதே சீன தேசிய காங்கிரஸின் எதிர்பார்ப்பாகும் எனவும் கூறினார்.

## சீனப் பிரதமர் லி சியாங் ஜனாதிபதி அநுர சந்திப்பு

“வளமான நாடு - அழகான வாழ்க்கை” உருவாக்குவதற்காக அரசாங்கம் முன்னெடுக்கும் திட்டத்துக்கு ஆதரவளிப்பதாக சீனப் பிரதமர் லீ சியாங் தெரிவித்தார்.

பீஜிங்கில் கடந்த வியாழன் (16) பிற்பகல் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடியபோதே சீனப் பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சீனப் பிரதமர் லி சியாங் சிநேகபூர்வமாக வரவேற்றார்.

மேலும், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு சீனா அதிகபட்ச ஆதரவை வழங்கும் என்றும் சீனப் பிரதமர் லி சியாங் உறுதியளித்தார்.

ஊழலற்ற நாட்டை உருவாக்கும் தற்போதைய அரசாங்கத்தின் வேலைத் திட்டத்துக்கு சீனப் பிரதமர் பாராட்டுத் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, பாஹியன் பிக்குவின் காலத்துக்கு முன்பிருந்தே சீனாவுக்கும் இலங்கைக்குமிடையிலான நட்புறவு காணப்பட்டதெனக் கூறினார்.

அதேபோல் வறுமையை ஒழித்து இலங்கையை டிஜிட்டல் மயமாக்குவதற்கான தற்போதைய அரசாங்கத்தின் வேலைத்திட்டத்துக்கு ஆதரவு வழங்குமாறும் சீனப் பிரதமரிடம் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

தற்போதும் இலங்கைக்கு சீன அரசாங்கம் வழங்கிவரும் உதவிகளை நினைவுகூர்ந்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, அதற்காக சீன அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

மேலும் இதன்போது இரு நாடுகளுக்கு மிடையிலான நீண்டகால நட்புறவை மேம்படுத்தல் மற்றும் முதலீட்டை ஊக்குவித்தல் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் கலாசார பரிமாற்றம், வர்த்தகம் மற்றும் அரசியல் ஒத்துழைப்பு குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

## சீன கம்யூனிஸ்ட் கட்சி செயலாளருடன் சந்திப்பு

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் சிச்சுவான் மாகாண சீன கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் வேங்க் சியூஹுய்க்கும் (Wang Xiaohui) இடையிலான சந்திப்பு வெள்ளிக்கிழமை (17) காலை நடைபெற்றது.

வரலாற்று மற்றும் கலாசார பாரம்பரியத்தைப் பாதுகாத்து, அபிவிருத்தியின் விடியலைக் கண்டுள்ள சிச்சுவான் மாகாணத்தின் செங்டு நகரம், சீனாவில் மகிழ்ச்சியான மக்களைக்கொண்ட நகரங்களில் ஒன்றாக முன்னணி இடத்தைப் பிடித்துள்ளது.

பொருளாதார அபிவிருத்தியில் முன்னணியில் இருக்கும் சிச்சுவான்



மாகாணத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதாரம், வர்த்தகம், கலாசாரம், சுற்றுலாத்துறை மட்டுமன்றி அரசுகளுக்கிடையிலான உறவுகளை வலுப்படுத்துவது மற்றும் அவற்றை புதிய நிலைக்கு உயர்த்துவது குறித்து இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

எரிசக்தி உட்பட பல துறைகளில் சிச்சுவான் மாகாணம் அடைந்துள்ள சாதனைகளை இலங்கையுடன் பகிர்ந்து கொள்ளுமாறு மாகாண செயலாளருக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார். இலங்கை தற்போது பொருளாதார ரீதியாக ஸ்தீரமடைந்து வருவதாகவும் வெளிப்படையான ஆட்சியின் கீழ் முதலீட்டுக்கு மிகவும் சாதகமான சூழல் தற்போது நாட்டில் இருப்பதாகவும் ஜனாதிபதி கூறினார்.

இலங்கை தற்போது அரசியலில் ஒரு திருப்புமுனையில் இருப்பதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, வடக்கு, கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு மக்கள் ஒன்றிணைந்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கி தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டுவந்துள்ளதாகவும் அந்த ஆணையினூடாக மக்கள் தங்கள் மீது வைத்திருக்கும் எதிர்பார்ப்புகளை முழுமையாக நிறைவேற்ற அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சீன சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கை ஒரு சிறந்த தளம் என்று கூறிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, சிறந்த விருந்தோம்பலுடன் கூடிய இலங்கைக்கு வருகை தருமாறு சிச்சுவான் மக்களுக்கு



அழைப்பு விடுத்தார்.

## சீனாவும் இந்தியாவும் இலங்கையும்

ஜனாதிபதி அநுரகுமார சீனாவுக்கு மேற்கொண்ட விஜயம் குறித்து இலங்கையின் அண்டைநாடான இந்தியா கூர்மையாக அவதானித்து வந்தது. குறிப்பாக அங்கு செய்யப்படும் ஒப்பந்தங்கள் தொடர்பில் கூடுதல் கரிசனையை புதுடில்லி கொண்டிருந்தது. கடல்சார் ஒப்பந்தங்களும் எண்ணெய் சுத்திகரிப்பு ஒப்பந்தங்களும் இலங்கையால் சீனாவுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளமை தொடர்பில் இந்தியா அதிருப்திக்குள்ளாகியுள்ளதாக அறியமுடிகிறது.

ஜனாதிபதி அநுரகுமார சீனாவின் பக்கம் நிற்பது புதுடில்லிக்குத் தெரியும் என்றாலும் அவரின் சீன ஆதரவு எந்தளவு தூரம் ஆழமானதென்பதை அறியும் வாய்ப்பை இந்தியா எதிர்பார்த்திருந்தது. அநுரகுமாரவின் இந்தச் சீன விஜயம் தேசிய மக்கள் சக்தியின் சீன ஆதரவை வெளிச்சமிட்டிருக்கிறது.

ஜனாதிபதியின் இந்தப் போக்கு எதிர்காலத்தில் இந்தியாவுக்குத் தாக்கத்தைக் கொடுக்கலாம் என்று கருதும் புதுடில்லி, அது தொடர்பில் முன்கூட்டியே தற்பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க ஆரம்பித்துள்ளதாகத் தெரிகிறது. இதனால் இலங்கை அரசின் ஏகபோக செயற்பாடுகளை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்பதை புதுடில்லி தீவிரமாக ஆராய்ந்து வருவதாக அறியமுடிகின்றது.

ஜனாதிபதி அநுரகுமார சீனாவுக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள நிலையில், கொழும்பில் கடந்த சில தினங்களாகவே எதிர்க்கட்சி வரிசையிலுள்ள அரசியல் தலைவர்களை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா சந்தித்துப் பேசி வருகிறார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ, முன்னாள் எம்.பி. சம்பிக்க ரணவக்க ஆகியோரை தூதுவர் ஜா சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார். இந்தியாவில் நடைபெறும் கும்பமேளா நிகழ்வில் கலந்துகொள்ள நாமல் ராஜபக்ஷ எதிர்வரும் 22ஆம் திகதி இந்தியா செல்ல ஏற்பாடாகியுள்ளது. அதுபற்றி மட்டுமல்லாமல், அதற்கப்பால் பல அரசியல் விடயங்கள் நாமல் - இந்தியத் தூதுவர் சந்திப்பில் பேசப்பட்டுள்ளன.

இலங்கையில் அண்மைக்காலமாக நடைபெற்ற கடந்த தேர்தல்களில் சஜித் பிரேமதாச வெற்றிபெறுவார் என்று புதுடில்லி தீவிர எதிர்பார்ப்பில் இருந்தது. அதேசமயம், ரணில் ஆட்சி தொடர்பில் விமர்சனங்களும் இருந்தன. ஆனால், இப்போது சீன ஆதரவு கட்சி ஆட்சிக்கு வந்து தலைக்கு மேல் வெள்ளம்போன கதையாய் சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் தடுமாறுகிறது இந்தியா. இதனால் எதிர்க்கட்சிகளைப் பலப்படுத்துவதன்மூலம் இலங்கையில் இந்தியாவுக்கு எதிரான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தலாமென்று புதுடில்லி கருதுவதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

## ரணில் - சஜித் இணைக்க பேச்சு

ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து புதிய அரசியல் கூட்டணியொன்றை அமைக்க பேச்சு நடத்தப்பட்டு வருகிறது. ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு இதற்காக குழுவொன்றை நியமித்துள்ளது. ரஞ்சித் மத்தும பண்டார, ஹர்ஷன் ராஜகருணா, திஸ்ஸ அத்தநாயக்க, கபீர் ஹாசிம் உட்பட்டோர் அந்தக் குழுவில் அடங்குகின்றனர். புதிய அரசியல் கூட்டணி தொலைபேசி சின்னத்தின் கீழ் போட்டியிட வேண்டுமென சஜித் பிரேமதாச விடாப்பிடியாய் நிற்கிறார். ஆனால், சின்னம் விடயத்தில் விட்டுக்கொடுப்புகள் முக்கியமென்று ஐக்கிய மக்கள் சக்திக்குள் கருத்து தீவிரமாக எழுந்துள்ளது. இதற்கிடையில் ஐக்கிய மக்கள் சக்திக்குள் இருக்கும் சிறுபான்மைக் கட்சிகள் தங்களுக்குள் கூட்டிணைவை ஏற்படுத்திக்கொள்ள நடவடிக்கைகள் எடுத்துள்ளன. எப்போதுமே பிரதான அரசியல் கட்சிகளின் நிகழ்ச்சி நிரலுக்குள் சிறுபான்மை இன பிரதிநிதித்துவம் சிக்கிக்கொள்வதால் இம்முறை அப்படி நடந்துவிடாமல் இருப்பதற்காக இந்த கூட்டு அவசியமென தமிழ், முஸ்லிம் எம்.பிமார் கருதுவதாகத் தெரிகிறது.

## பழைய வீட்டுக்குள் ஜீ.எல்.

முன்னாள் எம்.பி. ஜீ.எல்.பீரிஸ் மீண்டும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்குள் வருவதற்குத் தீர்மானித்து அதற்கான பேச்சுகளை நடத்தியுள்ளார். கடந்த தைப்பொங்கல் தினமன்று அவர் கொழும்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

## கோட்டாபய கைதாவாரா?

கதிர்காமத்தில் காணி விவகாரமொன்று தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த வெள்ளிக்கிழமை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைக்குள்ளானார். அவரை கைதுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பது குறித்து உடனடியாகத் தகவல் வெளியாகவில்லை. ஆனாலும் கோட்டாவுக்கு இலங்கை படைத்தரப்பில் சற்று ஆதரவு இருப்பதால் அவரை கைதுசெய்தால் அது அனுதாப அலையை ஏற்படுத்தி விடுமா என்பது பற்றி அரச மேலிடம் யோசித்து வருவதாகத் தெரிகிறது.

## ஒருநாள் போவார் ஒருநாள் வருவார்

## ஒவ்வொரு நாளும் துயரம்

# இந்திய மீனவர் பிரச்சினைக்கு தீர்வு எப்போது?

அக்கினியான்

தமிழக மீனவர் பிரச்சினையென்பது தீர்க்கப்படாத தமிழர்களின் அரசியல் தீர்வு விவகாரம்போல் நீண்டுகொண்டு போவதைப் பார்க்கிறபோது தமிழக மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்குமிடையேயுள்ள பிரச்சினையானது இன்னுமொரு நூற்றாண்டு சென்றாலும் தீராத பிரச்சினை யாகவே இருக்கப்போகிறதென்பதை புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது.

தமிழக மீனவர்களின் அத்துமீறல் தொடர்பில் வடபுல மீனவர்கள் தமது ஆத்திரத்தையும் எதிர்ப்பையும் தொடர்ந்து காட்டிக்கொண்டிருப்பதையும் இதேவேளை, நாளாந்தம் அத்துமீறும் தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைதுசெய்வதும் அவர்களை விடுவிக்கும்படி தமிழக முதலமைச்சர்கள் மத்திய அரசைக் கோருவதும் தொடர் நாடகமாகவே இடம்பெற்று வருகிறது.

இந்தியாவுக்கு அண்மையில் விஜயம்செய்த இலங்கை ஜனாதிபதி அநுர இது தொடர்பாக கரிசனை காட்டவில்லை என்றும் அதேபோல் தமிழகத்தில் நடைபெற்ற மாநாட்டுக்குச் சென்ற தமிழ் அரசியல்வாதிகள் இதுபற்றி தமிழ்நாட்டு முதலமைச்சரோடு கலந்துரையாடாமல் செல்பி எடுப்பதிலும் மாலை அணிவிப்பதிலும் அக்கறை காட்டிய அளவுக்கு மீனவர் பிரச்சினையில் கரிசனை காட்டவில்லை எனவும் கடுமையாக தமது விசனங்களைத் தெரிவித்துவருகிறார்கள்.

தமிழ் நாட்டில் நடந்த நிகழ்வொன்றுக்குச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், இரா.சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் தமிழக முதலமைச்சர் ஸ்டாலினை சந்தித்துள்ளனர். இதன்போது இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பாக பேசாமல் முதலமைச்சரோடு சிரித்து சல்லாபித்து செல்பி எடுத்து குதுகலித்தார்களே தவிர, எங்கள் பிரச்சினை தொடர்பாக அவர்கள் பேசுவதற்கு முயற்சி எடுக்கவில்லையென யாழ்ப்பாண மாவட்ட மீனவர் சங்க சமாஜத்தினர், தங்கள் வருத்தத்தைத் தெரிவித்திருந்தார்கள்.

இதேநேரம் இதே மாநாட்டுக்குச் சென்று வந்திருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், ''இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பாக தமிழக முதலமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு சந்தர்ப்பம் கேட்டுள்ளேன். மிக விரைவில் இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பான சந்திப்பு இடம்பெறும். அப்போது முழு விடயங்களும் கலந்துரையாடி சாதகமான ஒரு முடிவு எடுக்கப்படும்'' எனத் தெரிவித்திருக்கிறார்.

இந்திய மீனவர் தொடர்பான பிரச்சினை மிக நீண்டகாலமாக தொடர்கதையாக மாறிக் கொண்டிருப்பது மாத்திரமல்ல, முடிவு காணமுடியாத தொடர் பிரச்சினையாக வளர்ந்துகொண்டிருப்பதுடன், இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான இராஜதந்திர உறவுகளில் பாதிப்பை ஏற்படுத்தும் விவகாரமாக மாறிவிடுமோ என்று சந்தேகிக்கும் வகையில் பிரச்சினை கூர்மைப்பட்டு செல்வதையும் அவதானிக்க முடிகிறது.

இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கைக் கடற்பரப்புக்குள் வந்து நுழைவதனால் அவர்கள் தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்படுவதும் இந்த விவகாரத்தை சாட்டாக வைத்துக்கொண்டு தமிழக அரசியல்வாதிகள் கச்சதீவுப் பிரச்சினைக்குப் புதிய வடிவம் கொடுத்து ஊதிப் பெரிதாக்க நினைப்பதும் வளர்ந்துகொண்டிருக்கும் பிரச்சினையாகக் காணுகிறோம்.

இந்திய மீனவர் கைது விவகாரமென்பது இந்து பாக்குநீரிணை கடற்பரப்பில் அடிக்கடி நடைபெறும் ஒரு விவகாரமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது என்பதற்கு அடையாளமாக அண்மையில் மன்னார் கடற்பரப்புக்குள் சட்டவிரோதமாக மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட இரண்டு இந்திய மீன்பிடிப் படகுகளை இலங்கைக் கடற்படையினர் கைப்பற்றியதுடன், தமிழக மீனவர் எட்டுப்பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினரின் அறிக்கையின்படி இவ்வருடம் (2025) மாத்திரம் மூன்று இந்திய மீன்பிடிப் படகுகளுடன 18 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டிருப்பதுடன், படகுகளும் சுவீகரிக்கப்பட்டுள்ளன. இவை மட்டுமன்றி, கடந்த டிசம்பர் மாதம் 10ஆம் திகதியளவில் இந்திய மீனவர்கள் 14 பேரையும் அதேபோன்று காரைநகர் கடற்பரப்பில் அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபட்ட தமிழக மீனவர்கள் 10 பேரையும் இலங்கைக் கடற்படையினர் கைதுசெய்துள்ளதுடன், அவர்களிடமிருந்து பெருந்தொகையான மீன்களையும் கைப்பற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது. சராசரியாகப் பார்க்கப்போனால் இந்த அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்கள் மாதந்தோறும் இருபது, முப்பதுக்கு மேற்பட்டவர்கள் கைதுசெய்யப்படுவதும் 5க்கு மேற்பட்ட மீன்பிடிப் படகுகள் கைப்பற்றப்படுவதும் ஒரு தொடர்கதை யாகவே இடம்பெற்று வருகிறது.

இந்த விவகாரத்தில் இலங்கை மீனவர்கள் தெரிவிக்கும் குற்றச்சாட்டுகள், இந்திய மீனவர்கள் முன்வைக்கும் நியாயங்கள் என்பன தனித்தனியாகவும் ஆராயப்படவேண்டியதுடன் ஒருபுறம் மனிதாபிமான ரீதியாகவும் மீனவர் வாழ்வாதாரம், கடல் வளங்கள் என்ற வகையிலும் நோக்கப்படவேண்டியது அவசியமாகிறது.

இலங்கை மீனவர்கள் தெரிவிக்கும் குற்றச்சாட்டுகள் எவை என்பதை நோக்குவோம்.

வடபுல மற்றும் கிழக்கு கடலோரக் கிராமங்களில் மீன்பிடித் தொழிலை தமது ஜீவனோபாயமாகக்கொண்டு வாழும் இலட்சக்கணக்கான மீனவக் குடும்பங்கள் விலைமதிப்பற்ற வலைகள் இந்திய இழுவைப்படகுகளால் அழித்தொழிக்கப்படுகின்றன,

எமது கடல் விளைமீன்கள் சூறையாடப்படுகின்றன, கடல் வளம் கொள்ளையடிக்கப்படுகின்றன,தடை விதிக்கப்பட்டிருக்கும் மடிவலைகள் இந்தியத் தரப்பினரால் பயன்படுத்தப்படுகின்றன, கச்சதீவுக்குள் தமக்கும் உரிமையுண்டு என்ற தோரணையில் அடிக்கடி புகுந்து தொல்லை தருகிறார்கள், இலங்கையின் ஆதிபத்திய கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் எல்லை மீறி வருகிற காரணத்தால் நாட்டு இறைமை பாதிக்கப்படுகிறது, இதனால் எமது மீனவக் கிராமங்களைச் சேர்ந்த 4 இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன், நாட்டின் தேசிய வருமானத்துக்கு பங்கம் ஏற்படுத்தப்படுகிறதென இந்திய மீனவர்கள் மீது இலங்கை மீனவர்கள் குற்றச்சாட்டுகளை முன்வைக்கிறார்கள்.

இதேநேரம், இந்திய மீனவர்கள் சொல்லும் குற்றச்சாட்டுகளாக, வரலாற்றுக்கு முந்திய காலத்திலிருந்து பாக்குநீரிணையில் தமிழக மீனவர்கள் மீன்பிடித்து பிழைத்து வருகிறோம். மன்னார், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை மற்றும் வடமராட்சி கிழக்கு கிராமங்கள் போன்ற கிராமங்களில் வாழ்வோர் எங்கள் சொந்தங்கள் போன்றவர்கள். யுத்தத்துக்குப்பின் இலங்கைக் கடற்படையினரால் அடிக்கடி தாக்கப்படுகிறோம், கொல்லப்படுகிறோம், வலைகள் அறுத்து எறியப்படுகின்றன, படகுகள் அழிக்கப்படுகின்றன, பிடிக்கும் மீன்கள் கொள்ளையடிக்கப்படுகிறது, எறியப்படுகிறது, மீனவர்கள் நிர்வாணமாக்கப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறார்கள் என இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையின் மீது குற்றம் சுமத்துகிறார்கள்.

இரு தரத்தாராலும் சாட்டப்படும், சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் எந்தெந்த வகையில் அந்தந்த நாடுகளைப் பாதிக்கின்றனவோ இல்லையோ இரு நாடுகளுக்குமான இராஜதந்திர உறவுகளில் விரிசல்களை ஏற்படுத்தும் நிலை உருவாகாமல் பார்த்துக்கொள்ளவேண்டியதும் இதற்கான நிரந்தரத் தீர்வைக் காணவேண்டியதும் இரு நாடுகளின் அரசாங்கத்துக்குப் பொறுப்பான விடயமாகும்.

இலங்கைத் தீவும் இந்திய உபகண்டமும் அண்டைநாடுகளாக இருக்கின்றபோதும் இவ்விரு நாடுகளின் எல்லைகளாக இருப்பது, இந்து சமுத்திரத்தின் பாக்குநீரிணைப் பகுதியாகும். வரலாற்றுக்கு முந்திய காலம் முதல் இவ்விரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் பல்வேறு காரணிகளால் தீர்மானிக் கப்பட்டுள்ளன. அதில் முக்கியமானவையாக கருதப்படுவது, பூகோள ரீதியானதும் வாத்தகம், கலாசாரம் அரசியல் தேசியப் பொருளாதாரம் என்பன ஒன்றுக்கொன்று தொடர்புபட்டதாகவும் காணப்படுகிறது.

இந்திய உபகண்டத்துக்கு அருகே வளம் கொண்ட தீவாக இலங்கை காணப்படுவதுடன், கடல்படு திரவியங்களை அள்ளித்தரும் நீரிணையாக பாக்குநீரிணை காணப்படுவது மாத்திரமல்ல, அத்தீவின் கரையோரங்கள் மீன்பிடிக் கிராமங்கள் பலவற்றைக்கொண்டதாகவும் காணப்படுகிறது. உதாரணமாக, யாழ்குடாவில் நெடுந்தீவு, காரைநகர், மாதகல், தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை கட்டைக்காடு மற்றும் வெற்றிலைக்கேணி போன்ற பிரதேசங்களும் மன்னார் மாவட்டத்தில் தலைமன்னார், பேசாலை, புதுக்குடியிருப்பு, எரிக்கலம்பிட்டி, விடத்தல்தீவு, தால்பாடு, அரிப்பு, சிலாவத்துறை மற்றும் முல்லிக்குளம், திருகோணமலை மாவட்டத்தில் தென்னமரவாடி, புல்மூட்டை, குச்சவெளி, நிலாவெளி, பத்தாம்குறிச்சி, வெருகல் மற்றும் ஈச்சிலம்பற்று கிளிநொச்சி மாவட்டத்தில் பாலத்தீவு, இரணைத்தீவு, நாச்சிக்குடா, பள்ளிக்குடா, பிரதேசங்களுக்குள்ளே சுமார் 4 இலட்சத்துக்கும் மேற்பட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் காக்கும் தொழிலாக மீன்பிடித்தொழில் காணப்படுகிறது. (ஆதாரம் இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடித் தொழில்) அமைச்சர் விஜித ஹேரத், பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை 09.10.2015).

இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கை அரசாங்கத்துக்கும் இந்திய தரப்பினருக்குமிடையே பல சுற்றுப்பேச்சுவாத்தைகள் இடம் பெற்றிருக்கின்றன. இந்திய மீனவர் சங்கங்களுக்கும் இலங்கை மீனவர்களின் தூதுக் குழுக்களுக்கு மிடையில் பேச்சுவார்ததைகள் இடம்பெற்று வந்திருக்கின்றன.

கடந்த அரசாங் கத்தில் கடற்றொழில் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தா இது தொடர்பாக பல பிரயத் தனங்களை மேற்கொண்டு வருவதாக பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்தியிருக்கிறார்.



இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும்படி இரு நாட்டு மீனவர் சங்கங்களும் மக்களும் போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். ஆர்ப்பாட்டங்களை செய்து வந்திருக்கிறார் கள். அண்மைக்காலத்தில் யாழ்குடாநாட்டிலும் மன்னார் மாவட்டத்திலும் மீனவர் சங்கங்கள், பொதுமக்கள் பல்வேறு ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் நடத்தி வந்திருக்கிறார்கள். ஆனால், எந்தத் திசையிலும் தீர்வுக்கான வெளிச்சம் காணப்படவில்லையென்பது அவர்கள் தெரிவிக்கும் ஆதங்கமாகும்.

இதேநேரத்தில் இந்திய மீனவர்கள் வெளிக்கொண்டுவரும் நியாயத்தையும் சிறிது நோக்கவேண்டியது அவசியமாகிறது. இந்திய தமிழகத்தின் கரையோரப் பகுதியான கிழக்கு கரையாக அமைந்திருக்கும் நாகபட்டினம், கோடிக்கரை, தொண்டி இராமேஸ்வரம், கன்னியாகுமரி ஆகிய 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடலோரக் கிராமங்களில் 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடித்தொழிலை ஜீவாதாரத் தொழிலாகக்கொண்டிருக்கிறார்கள். இந்தியப் பொருளாதாரத்துக்கு 50 ஆயிரம் கோடி அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் தொழிலாகவும் 10 இலட்சம் மீனவர்களின் ஜீவாதாரத்தைத் தாங்கிப்பிடித்துக்கொள்ளும் தொழிலாகவும் இது காணப்படுகிறது.

நாங்கள் எங்கள் எல்லைக்குள் மீன்பிடித்தொழிலை நடத்தினாலும் எல்லை தாண்டியவர்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் தாக்கப்படுகிறோம், கைதுசெய்யப்படுகிறோம், கொல்லப்படுகிறோம். நடைபெற்ற சம்பவங்களின் அடிப்படையில் பார்க்கும்போது வருடந்தோறும் பலர் கொல்லப்படுகிறார்கள், 1200க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் காணாமலாக்கப் படுகிறார்கள், 300க்கும் மேற்பட்ட படகுகள் கச்சதீவுக்கு அருகில் வைத்து அழிக்கப்பட்டு வருகின்றன.

வருடந்தோறும், குறிப்பிட்ட மீனவர்கள் காணாமல்போயுள்ளனர், 25 ஆயிரம் கோடிக்கு மேல் நட்டம் ஏற்படுத்தப்படுகிறது. தமிழக மீனவர்கள் என்ற காரணத்தால் நடைபெறும் இந்தக் கொடுமை நிறுத்தப்படவேண்டுமாயின் கச்சதீவு மீளப் பெறப்படவேண்டும். கச்சதீவு இலங்கைக்கு கையளிக்கப்படும்போது (1974 ஜூன் 26) தமிழக மீனவர்களுக்கு மீன் பிடிக்கும் உரிமை, பண்டிகைக்கால சுற்றுலா உரிமை, வலை காயவைக்கும் உரிமை, வழங்கப்பட்டது. இவ்வாறிருந்தபோதும், அது மறுக்கப்படுகிறதென தமது பக்க நியாயங்களைக் கூறிவருகிறார்கள்.

இவ்வாறான நெருக்கடியான நிலையில் இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு உரிய தீர்வு காணப்படவேண்டுமென்று கடந்த பலவருடங்களாக வலியுறுத்தப் பட்டு வருகிறது. ஆனாலும் இதுவரை இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை. யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதற்குப்பின் மஹிந்த தலைமையிலான அரசாங்கம், மைத்ரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கம், கோட்டாபய தலைமையிலான அரசாங்கம், ரணில் விக்கிரமசிங்க தற்போது அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம், ஆட்சிகளை அமைத்துக் கொண்டாலும் இந்திய தரப்பினரோடு பேசி உரிய தீர்வு பெறுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்பதே இலங்கைவாழ் மீனவர்களின் குற்றச்சாட்டுகளாகும். இந்த விவகாரத்தில் தமிழர் பிரதிநிதிகளும் கவனம் செலுத்துவதில்லையென்பது இன்னொருவகையான கோபத்தை ஊட்டிக் கொண்டிருக்கிறது.

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களைக் கட்டுப்படுத்த இலங்கைக் கடற்படையினர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறபோதும் அதை மீறி இந்திய மீனவர்களின் ஊடுருவலானது தொடர்ச்சியாக இடம்பெற்றுக்கொண்டே இருக்கிறது. இதை தடுத்து நிறுத்தும்படி வடபுல மீனவர்கள், மீனவர் சங்கங்கள், பல போராட்டங்களை, ஆர்ப்பாட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்திய மீனவர்களின் செயற்பாடுகளைத் தடுப்பதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு எடுக்க முற்படுகிறபோது இருநாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர உறவுகளில் விரிசலும் விசனங்களும் ஏற்படப்பார்க்கிறது என்ற நிலையும் காணப்படுகிறது.

உதாரணமாக, சில வருடங்களுக்கு முன் இந்திய மீனவர் சங்கங்கள் மதுரை நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்திருந்தன. இலங்கை கடற்படையினரால் தாம் தாக்கப்படுவதாகவும் படகுகள் அழிக்கப்படுவதாகவும் கைதுசெய்யப்படுவதாகவும் இதற்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படவேண்டுமென்று தாக்கல் செய்த வழக்கில் மதுரை நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியிருந்தது. இந்திய கடற்படை எல்லையில் கடற்படையை நிறுத்தி உரிய பாதுகாப்பு வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். எனவே, இந்திய கடல் எல்லைப்பகுதியில் தமிழக கடலோர காவல் படையினரும் இந்திய கடலோர காவல் படையினரும் தீவிர ரோந்து பணியில் ஈடுபடவேண்டு மென கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. இத்தகைய நடவடிக்கைகள் இருநாட்டு இராஜதந்திரங்களிலும் பாதிப்பை உண்டாக்கப்பார்ப்பது புதிய விடயமாக இருக்க முடியாது.

எது எவ்வாறிருப்பினும் 1974, 1976 ஆகிய காலப்பகுதிகளில் வரையறுக்கப்பட்ட இலங்கை - இந்திய கடல் எல்லைப்பரப்பைத் தாண்டி இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைவதும் ஆதிக்க எல்லைகளை மீறுவதும் தவறான விடயம் என்பதற்கப்பால் இந்திய மீனவர்கள் நவீன ரோலர் படகுகளோடு வந்து மீன் பிடிக்க முயலுவதும் இழுவை மடிவலை மீன்பிடியில் ஈடுபடுவதனாலும் இயற்கையின் கொடையாக விளங்கும் கடல் வளம் அழிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, கிளிநொச்சி மாவட்டம் என்பது ஆழம் குறைந்த கடல் பிரதேசத்தைக்கொண்ட பிரதேசமாகும். இப்பிரதேசத்தில் பெருந்தொகையான மீன் வளங்கள் உள்ளன. எமது நாட்டுக்குக் கூடுதலான வருமானத்தை ஈட்டக்கூடிய - ஏற்றுமதி செய்யக்கூடிய இறால், கணவாய், கடலட்டைகள் போன்ற பெறுமதியான கடல் வளங்கள் இப்பிரதேசத்தில் உள்ளன.

இந்தியப் படகுகள் இப்பிரதேசத்திலுள்ள கடல் வளத்தைச் சூறையாடிச் செல்வதாக அப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கிறார்கள். இதை விட மோசமான நிலை என்னவெனில், நீரியல் வளங்கள், ஏனைய உயிரினங்கள், இயற்கை வளங்கள் அனைத்தும் சூறையாடிச் செல்லப்படுகிறதென சொல்லப்படுகிறது. வாழ்வாதாரத்துக்கு உலை வைக்கப்படுகிறது. இலங்கையின் தேசிய பொருளாதாரத்துக்கு பங்கம் விளைவிக்கப்படுகிறது.

குறிப்பாக, வட புலம் கிழக்கு கரையோர மீனவக் கிராமங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மீனவர்கள் பாதிக்கப்படுவதுடன், அவர்கள் தமது தொழிலைத் துறந்து வேற்று நாடுகளுக்கு ஓடவேண்டிய அவலம் ஒருபுறமிருக்க, குறித்த தொழிலை துறந்து மாற்றுத்தொழிலுக்குச் செல்லும் அவலநிலை உருவாகி வருகிற தெனவும் சில மீனவ கிராமங்களைச் சேர்ந்தவர்கள் உள்நாட்டு அத்துமீறல்களால் கூட பாதிக்கப்படுவதாகவும் அக்குடும்பங் களைச் சேர்ந்தவர்கள் கவலை தெரிவிக்கிறார்கள்.



# முஸ்லிம் அரசியலின் நிலைமாறு காலமும் சேகு இஸ்ஸதீனும்

பாகம்: 04

கங்கத்தியப்பா

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு அறிவியல்சார் பார்வைகள் உள்ளன. அவற்றின் ஆழ, அகலங்கள் சில இலங்கை முஸ்லிம் புத்திஜீவிகளின் ஆய்வுப்பரப்புக்கு உள்ளேயும் வேரூன்றி இருந்தன. இதில் பிரதிநிதித்துவ அரசியல் மற்றும் தேர்தல் மையம் கொண்ட அரசியல் ஆகிய செயற்பாடுகளில் அக்கறைகொண்ட புத்திஜீவிகளையும் கூட அடக்கிக்கொள்ள முடியும்.

முஸ்லிம் இனத்துவ அரசியல் முன்னோடிகளுள் அதிகம் கவனயீர்ப்புக்குள்ளான எம்.ஐ.எம்.முஹைதீன் அவர்கள் தத்துவார்த்த ரீதியான அரசியல் பார்வையில் பெரிதும் கூர்மையான அக்கறை கொண்டிருக்கவில்லை. அவர் யதார்த்தமும் வரலாறும் ஒன்றிணைந்த அரசியல் போக்குடன் தம்மை குறுக்கிக்கொண்டார். பொதுஜன போராட்ட அரசியல் எனும்போது இதற்கப்பால் செல்லவேண்டிய அவசியம் இல்லை என்பதே அவரின் பொதுவான பார்வையுமாகும்.

ஆனால், அஷ்ரப் மற்றும் சேகு இஸ்ஸதீன் ஆகியோர் தங்களின் ஆய்வுப்பரப்பில் நவீன உலகில் சர்வதேச மயப்பட்ட மற்றும் சாஸ்த்திரீய (Academical) முக்கியத்துவம் பெற்ற இனத்துவ மற்றும் பின்நவீனத்துவ கோட்பாடுகளின் கொள்ளளவுகளுக்கு உள்ளேயும் தங்கள் தங்கள் கண்ணோட்டங்களைப் பரவ விட்டனர்.

மேலும், பின்நவீன அரசியலின் பிந்திய அணுகுமுறையான அறிவார்ந்த பன்மைத்துவம் (Epistemological Pluralism) பற்றிய தங்கள் பிரக்ஞையையும் அவர்கள் வெளிப்படுத்தியே வந்துள்ளனர். அறிவார்ந்த பன்மைத்துவம் என்பது இஸ்லாமோபோபியா பற்றிய வேர்களைக் கொண்டிருந்தாலும் கூட சிறுபான்மையாக முஸ்லிம்கள் வாழும் நாடுகளில் அவர்களின் பாதுகாப்பு அரணுக்கும் அவசியமானதாகும்.

முஸ்லிம் இனத்துவ அரசியல் பற்றிய குறும்பார்வை நோயுள்ள சிலரால் அஷ்ரப் மற்றும் சேகு இஸ்ஸதீன் ஆகியோர்களுக்கு இனவாதிகள் என்ற பெயர் சூட்டப்பட்டது உண்மையே. ஆனால், இனத்துவ அரசியலின் விஞ்ஞானபூர்வமான பார்வையுள்ள Lanka Guardian பத்திராதிபர் Mervin de Silva மற்றும் நியூட்டன் குணசிங்க முதலிய பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அறிஞர்கள் 'அரசியல் பன்மைத்துவ வாதிகள்' என்ற பார்வையில் இவ்விருவரையும் இனத்துவப் போராளிகளாகவே அங்கீகரித்தனர்.


***அஷ்ரப் மற்றும் சேகு இஸ்ஸதீன் ஆகியோரின் இந்த முக்கியமான அரசியல் பார்வையும் போக்கும் பேரளவில் ஆவணவாக்கமாக செதுக்கப்படவில்லை என்பது உண்மையே. எனினும், புத்திஜீவிகள் மற்றும் புலமைத்துவவாதிகள் முதலியவர்களுடனான அறிவார்ந்த உயர்மட்ட உரையாடல்களிலும் மற்றும் அவைக்கு ஆற்றுகைகளிலும் (Presentation) அவர்கள் pluralism சம்பந்தமான தங்களின் ஆழ்புலமையையும் அக்கறையையும் அனுபவத்தையும் வெளிப்படுத்தியே வந்துள்ளனர்.***


உதாரணமாக, பல்கலைக்கழக புத்திஜீவிகளுடனான உயர்மட்டக் கலந்துரையாடல்களில் அஷ்ரப் மற்றும் சேகு இஸ்ஸதீன் இத்தகைய வியத்தகு நுணுக்கமான அணுகுமுறைகள் பற்றியே உரையாடியுள்ளனர். அஷ்ரப் ஒரு சாதாரண எம்.பியாக இருந்தகாலத்திலேயே பல்கலைக்கழக முஸ்லிம் புத்திஜீவிகளை அழைத்து பாராளுமன்றத்தின் ஒரு மண்டப அறையினுள் ஆற்றிய ஆச்சரியமான அரசறிவியல் உரையையடுத்து இது பொதுப்புத்தி அடையாளப்படுத்தும் இனவாதமல்ல என்ற புதிய கருத்துடன் அந்த புத்திஜீவிகள் மண்டபத்தை விட்டு வெளியேறினர்.

மௌதூதி அவர்கள் கிழக்கத்தேய ஆய்வாளர் என்பதால் மட்டுமன்றி, மேற்கத்தேய நுண்ணறிவுப் படுமுடிச்சியின் ரிஷிமூலங்களையும் சியோனிசத்தின் உலகளாவிய 'அறிவுத் தொழில்நுட்பத்தையும்' ஆய்ந்தறிந்து எழுதியவர். இதனால், மேற்குலகின் விஷக் காற்றுகளைப் பற்றி மட்டுமன்றி, அவர் காலத்திலேயே தோன்றி வளர்ந்த இந்திய விஸ்தரிப்புவாதத்தினதும் விடுதலை இறையியலினதும் கூர்முனைகளையும் அவரால் அலசிப்பார்க்க முடிந்துள்ளது. இந்த அறிவு மூலங்கள் பிரதானமாக அஷ்ரப்பையும் அவர் மூலமாக சேகு இஸ்ஸதீனையும் நெறிப்படுத்தியுள்ளன.


ஆனால், ஈழத்தின் இனவாதச் செயற்பாட்டில் "முட்டை முந்தியா கோழி முந்தியா" என்று சிலர் இன்னும் வாதங்களை எழுப்புகின்றனர். அதாவது, சிறுபான்மையினர்தான் இனவாதம் பேசினார்கள் எனக் கண்ணை மூடிக்கொண்டு பேசுகின்றனர். இது பெரும்பான்மை இனத்தின் அல்லது பேரினவாதத்தின் செல்லப்பிள்ளைகளாக இருக்க ஆசைப்படுபவர்களின் ஆதங்கமேயாகும்.

இக்கூற்று பேரினவாதத்தின் பின்நவீனத்துவச் செல்நெறியில் உள்ளோர்களுக்கும் பொருந்தும். நமது ஆரம்பகால இடதுசாரிகள் 1972ஆம் ஆண்டின் அரசியலமைப்புத் திட்டத்திலுள்ள பௌத்த மதத்துக்கு ஏனைய சமயங்களை விட முன்னுரிமை கொடுத்த ஷரத்தை ஜீரணித்துக்கொண்டு சிங்களத் தேசியவாதத்தை இலங்கைத் தேசியவாதமாக வலிந்து மொழிபெயர்த்துத் தப்புத்தப்பாக விளங்கி பிறரையும் அவ்வாறே நெறிப்படுத்தியமையைக் குறிப்பிடலாம்.














நமது நாட்டில் மட்டுமன்றி இராம ஜென்ம பூமி கருத்தாடல்களில் நிலைகொண்டோரின் 'வாந்தி'களில் இதனைத் தெளிவாகக் காணலாம். இப்படி வலியுறுத்திக் கூறக் காரணம், இது இன்று சர்வதேச மயப்பட்டுள்ள இஸ்லாமோபோபியாவுடன் சம்பந்தப்பட்டது என்பதனாலேயாகும். அண்மையில்கூட நம்மில் சிலர் "இந்தத் தடவை சிங்களவர் இனவாதம் பேசவில்லை; தமிழர்கள் இனவாதம் பேசவில்லை; முஸ்லிம்களாகிய நாங்கள்தான் இனவாதம் பேசினோம்" என வாய் கூசாமல் பேசினர்; பேசிவருகின்றனர்.

இதனால்தான் மனச்சாட்சியின் விளிம்பிலும் கூட அடக்குமுறையின் வலைப்பின்னல்களில் சிக்குண்டு நிற்போர் இந்தப் பயங்கர அரசியல் சுனாமி வீசியதன் பின்னரும் தைரியமாக மக்கள் பக்கம் நின்று கருத்துகளை வெளியிடுகின்றனர்.

***மேலும், இவர்களின் இனத்துவ அரசியல் பற்றிய குறும்பார்வை ஒரு நாட்டின் பன்மைத்துவத்தில் முழுவதுமாக நம்பிக்கை வைத்த முஸ்லிம்களை மாத்திரமன்றி தமிழினத்தின் விடுதலைப் பாதையையும் கூட கொச்சைப்படுத்துகின்ற உள்நோக்கங்கொண்டதுமாகும்.***

அத்தோடு, இது முப்பது ஆண்டுகளாக உயிரைத் துச்சம் என மதித்துப் போராடிய தமிழீழ போராட்டக்காரர்களை அவமதிக்கும் செயற்பாடன்றி வேறில்லை. மேலும், இந்தப்போக்கானது விடுதலைப் போராட்டத்தில் சித்திரவதைப்பட்ட - நேரே போராட்டத்தில் உயிர் துறந்த புண்ணிய ஆத்மாக்களை வக்கிரப்படுத்தும் சுயநல அரசியல் மயப்பட்டதுமாகும்.

***1958, 1977, 1981, 1983 என தீவடங்கலாக தமிழ்ச் சிறுபான்மை நமது கண்ணெதிரே கொடூரமாக கொத்திக் குதறப்பட்டது பெரும்பான்மையின் இனவாதமா? சிறுபான்மையின் இனவாதமா? என்பதைப் பற்றி அவர்கள் பகுத்து உணர்திறனற்றவர்கள் ஆவார்கள்.***

அவர்களின் இக்கூற்று இனத்துவ அரசியலிலும் ஆயுதப் போராட்டங்களிலும் கிஞ்சித்தும் சம்பந்தமே இல்லாமலும் உடன்பாடுகூட இல்லாமலும் மடிந்த உயிர்களையும் அவர்களின் ஏனைய இழப்புகளையும் துர்நோக்கத்துடன் மலினப்படுத்துவதுமாகும். இப்படியான பார்வைகளை பொதுவெளியில் விதைப்பது இளைஞர்கள், முதியவர்கள், இனத்துவமயப்பட்ட புத்திஜீவிகள் முதலானவர்களின் தியாகத்தையும் இழக்க முடியாதனவற்றை இழந்த சோகத்தையும் மூடிமறைக்கின்ற 'சுயமைதுன' ஆதங்கங்களைத் தவிர வேறொன்றும் இல்லை.

இந்த தியாகச் செம்மல்களின் அர்ப்பணிப்பை அஷ்ரஃபும் சேகு இஸ்ஸடீனும் ஆழமாகப் புரிந்துகொண்டனர். அவர்களிடம் அறிவுக் கூர்மையும் தத்துவார்த்த பிரக்ஞையும் மனச்சாட்சியும் மற்றும் தமிழ்பேசும் இனங்கள் என்ற சகோதர வாஞ்சையும் கூடவே இருந்தன. அதுமட்டுமன்றி, அரசியலில் சுயநல முதன்மையூக்கம் அறவே காணப்படாத மனத்தூய்மையும் சமூக ஒழுக்கமும் கொண்ட புதியதோர் அரசியல் சமன்பாடும் அவர்களிடம் அப்போது காணப்பட்டது. ஆகையினால்தான் தமிழ்த் தீவிரவாத இளைஞர்களிடம் அவர்கள் கரிசனை கொண்டிருந்தனர்.

***ஈழ விடுதலைப் போராட்டங்களைப் பொறுத்தவரையில், தத்தம் சுய விம்பகளைக் கட்டமைத்துக் கொள்வதற்காக தனிப்பட்ட சிலரும் சில அரசியல் இயக்கங்களும், ஏன் கட்சிகளும் ஈழ விடுதலையுடன் தொடர்பான விடயங்களை முழுவதுமாகப் பாவித்து சுய அடைவுகளைத் தற்காத்துக் கொண்ட சோகங்கள் இடம்பெற்றமையும் நமது வரலாற்றின் யதார்த்தங்களே. ஆனால், உலக விடுதப்போராட்டங்களில் இவை எங்குமே நடைபெறாமல் புதிதாக ஈழத்தில் மட்டுமே நடைபெற்ற ஒன்றும் அல்ல.***

மேலும், இந்திய விஸ்தரிப்புவாதம், ஏற்கனவே கட்டமைக்கப்பட்டு நன்கு ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த விடுதலை இறையியல், பூகோள அரசியல் என்ற கோட்பாட்டின் செல்லப் பிள்ளைகளாக தூய போராட்டங்களில் ஊடுருவி இயங்கின என்பதும் உண்மையே. மேலும், விடுதலைப் போராளிகளுக்காகவே சர்வதேச மயப்பட்ட - முழுவதுமாகவே வணிகமயமாகிப்போன ஆயுத பேரம் என்பன யாரினதும் சம்மதமும் தேவைபடாது இந்தப் போராட்டங்களின் உள்ளே அழைக்கப்படாத விருந்தாளிகளாக வந்து புகுந்து கொண்டமையும் அதன் இன்னொரு பக்கமே.

கடத்தல் வியாபாரம் (போதைப்பொருள் கடத்தல் உட்பட) தத்தம் இலாபங்களுக்காக இந்த எண்ணக்கருவை கொள்ளை இலாபம் ஈட்டும் துறையாக மாற்றிக்கொண்டன என்பதிலும் அறவே உண்மை இல்லாமலும் இல்லை. விடுதலைப் போராட்டத்தின் சில தத்துவார்த்தப் பிரகிருதிகள் கூட இலட்சியத்தின் வெறி கண்ணை மூடி மறைக்க இயல்பாகவோ அல்லது தவிர்க்கமுடியாமலோ இந்தப்போக்குடன் சங்கமமாகிப் போனதுமுண்டு என்பதும் உண்மையே.

இதுபற்றிய நுணுக்கமான அவதானம் அஷ்ரஃபிடமும் சேகு இஸ்ஸதீனிடமும் நிரம்பவே காணப்பட்டன. அதனால்தான் முஸ்லிம் இளைஞர்களை ஆயுத மோகத்தில் சிக்கவிடாது கண்ணும் கருத்துமாக பாதுகாக்க அவ்விருவரும் ஒருங்கே செயற்பட்டனர். அந்தக் கரிசனையே றாபியிடம் அவர்கள் வலிந்து தொடர்பை ஏற்படுத்தி, ஆயுதத்தில் அவருக்கு நம்பிக்கை ஈனத்தை ஏற்படுத்த பாடுபட்டமையாகும்.

மேலே குறிப்பிட்டவற்றில், இந்திய விஸ்தரிப்பு வாதமும் மேற்கத்தேய பூகோள அரசியலைத் தன் பூரண கட்டுப்பாட்டில் வைத்திருந்த விடுதலை இறையியலும் ஈழத்து மண்ணின் இனத்துவ அரசியலில் அசிங்கமான 'சின்ன வீடுகள்'போல தத்தம் கையாடல்களைச் செய்தன. மேலும், சர்வதேச ஆயுத பேரமும் ஏனைய பேரங்களில் தவிர்க்கமுடியாமல் சிக்கிக் கொண்ட 'தூள் வியாபாரம் அல்லது கடத்தல்' என்பனவும் விடுதலைப் போராட்டத்தின் கொள்கை வகுப்பாளர்களால் கூட சில கட்டங்களில் கட்டுப்படுத்த முடியாமல் எல்லை மீறிச் சென்றன.

ஆனால், இதற்காக விடுதலைப் போராட்டத்தின் ஆதிமூலம் போலியானது என்பது அபத்தமானதாகும்.

இந்த நுட்பமான வேறுபாடுகளைப் புரிந்துகொண்ட முஸ்லிம்களுள் அஷ்ரப்பும் சேகு இஸ்ஸதீனும் முக்கியமானவர்கள். போராட்டம் திசைமாறிச் சென்ற காலங்களில் இதில் அவர்கள் சரியாகவும் தீர்க்கமாகவும் நடை பயில சம்மாந்துறை அலியார் ஹஸ்ரத் அவர்களின் வகிபாகமும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஏனெனில், முஸ்லிம் இளைஞர்களை தனியே ஆயுத இயக்கங்களைத் தொடங்கி நடத்த உற்சாகப்படுத்தியவர்களின் ரிஷிமூலம், இந்தியாவின் பகிரங்கமான வசைப் பெயர்களின் சொந்தக்காரர்களான notorious கடத்தல் மான்னர்களிடம் போய் முடிந்ததை அலியார் ஹஸ்ரத் விளங்கியிருந்ததால் அதுபற்றிய ஆழமான விமர்சனங்களை அஷ்ரப்பிடமும் சேகு இஸ்ஸதீனிடமும் முன்வைத்திருந்தார்.

முன்னர் ஈழத்தின் சாத்வீகமான இன விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட இயக்கங்கள் இலங்கையில் ஏனைய தீவிரவாதப் போராட்டங்கள்போன்று இந்த வணிகமயமாகிப்போன தத்துவார்த்தப் பிரளயங்களுக்குள் சிக்குண்டுபோனது குறைவு. 1970களில் ஜே.வி.பி. மார்க்ஸியத்தின் பக்கவேர்களுக்குள் சிக்குண்டு சல்லடையாகி, தென்கொரிய அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருந்திருந்தமையும் வரலாற்றில் நிகழ்ந்த உண்மையே.

ஆனால், அவர்கள் 1990களில் அவ்வாறு மாரடிக்கவில்லை என்பதும் உண்மையே. 90களில் அவர்களின் இலக்கு இந்திய விஸ்தரிப்புவாதம் என்பது மாத்திரமே. அவர்கள் இடதுசாரிகளாகவும் இருந்தமையால் அவர்களின் தத்துவார்த்த திரிபின் மூலங்களை அப்போதைய இலங்கை அரசால் கண்டுபிடிக்க முடியவில்லை.

***ஜே.வி.பியினர் இந்தியத் தயாரிப்புகளை இலங்கையில் விற்பனை செய்யக் கூடாது என்பதை மறுதலித்த வியாபாரிகளிடம் வன்முறையைப் பிரயோகிக்க இந்தப் பகைமை உணர்ச்சியே காரணமாக இருந்திருக்கலாம். இந்தக் கட்டத்திலும் கூட அவர்கள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கவே இல்லை. மேலும் தொண்டமான் என்ற தனிமனிதப் பகை மூலம் இந்திய வம்சாவளியினர் மீதான பகைமையும் அவர்களிடம் புகைந்துகொண்டே இருந்தது.***

இந்திய விஸ்தரிப்பு வாதமும் வணிகமயமாகிப்போன மேற்கத்தேய விடுதலை இறையியலும் மிக முக்கியமாக ஈழ விடுதலையாளர்களுடன் சங்கமித்து இருந்ததும் அவ்வக் கட்டங்களில் தவிர்க்க முடியாதவையே. ஏனெனில், அனைத்தும் வணிகமயமாகிப்போன ஒரு சூழலில் விடுதலைப் போராட்டங்களைச் சார்ந்தோர் சில விட்டுக்கொடுப்புகளைச் செய்து அவர்களுக்குச் சோரம்போக வேண்டியே இருந்தது. அது அவர்களின் சுய இருப்பின் பாற்பட்டதேயாகும்.

எனினும், ஆரம்பத்தில் ஈழ விடுதலையாளர்களுள் பெரும்பாலானோர் மாக்ஸிஸ்டுகளாகவே இருந்தனர் என்பது வரலாற்றின் விதிவிலக்கன்று. இடதுசாரிச் சிந்தனைகளுடன் களத்துக்கு வந்த TELO, EPRLF, PLOTE முதலியவை காலக்கெதியில் இடதுசாரிப் பொருளாதாரத்தையும் தங்களின் நாடி நரம்புகளில் இரண்டறக் கலந்துவிட்ட இந்திய விஸ்தரிப்புவாதத்தையும் தத்தம் இரு கண்களாகக் கருதவேண்டி ஏற்பட்டது.

மேலே கூறப்பட்ட இயக்கங்களும் மாக்ஸியத்தை முன்னுதாரணமாகக் கொண்ட ஈழப்போராட்டம் மேற்கத்தேய நலன்களை தெற்காசியாவிலிருந்து அகற்றிவிடும் என்று நம்பிக்கை கொண்டன. அதன் வழியில் போய் தங்கள் பிரதான நோக்கமான ஈழத்தை வென்றெடுத்து விடலாம் என்றும் அவை அப்பாவித்தனமாக நம்பிக்கை கொண்டன.

மேற்கத்தேயமும் அவர்களுக்கு இசைவான பூகோள அரசியல் வடிவமைப்பாளர்களும் அவர்களின் பூரண, ஆனால், மூடுண்ட கட்டுப்பாட்டில் இருந்த விடுதலை இறையியலாளர்களும் LTTE யினரைத் தத்தெடுத்துக்கொண்டனர் என்பதும் மறுபக்கத்திலுள்ள உண்மையாகும். இதனால்தான் ஆரம்ப காலங்களில் வெரிற்றாஸ் வானொலியும் BBC தமிழோசையும் உண்மைக்குப் புறம்பான 'உசுப்பேத்தும்' செய்திகளைக் கண்மூடித்தனமாகப் பிரசாரம் பண்ணின.

எதிரும் புதிருமான கோட்பாட்டு முரண்பாடுகளுக்குள் தமிழ் 'அப்புக்காத்து'மார்களை தாராளமாகக்கொண்டிருந்த தமிழர் அரசியல் கட்சிகள் பெரும்பாலும் தள்ளிநின்றே இவற்றை அவதானித்துக் கொண்டிருந்தன. அதற்காக வன்முறைப் போராளிகள் அரசிடம் குற்றவியல் ரீதியாக மாட்டிக்கொண்டபோது அவர்கள் வாளாவிருக்கவுமில்லை என்பதும் மறுபக்கத்திலுள்ள உண்மையாகும்.

அதற்கு இயக்கங்களின் வன்முறைசார் பிடிவாதங்களும் அதனால் ஏற்பட்ட உயிர் அச்சுறுத்தல்களும் காரணமாக இருந்தன என்பதும் உண்மைக்குப் புறம்பானதல்ல.

***ஆனால், அஷ்ரப்பும் சேகு இஸ்ஸதீனும் தங்கள் வெளிவாசலைத் தட்டிக்கொண்டிருந்த வன்முறையைக் கண்டு ஓட்டம் பிடிக்கவில்லை என்பதை இக்கட்டத்தில் நாங்கள் மனங்கொள்ள வேண்டும். இரத்தமும் சதையுமான மக்கள் பிரச்சினைகளில் அவர்கள் முன்னின்று முகங்கொடுத்தனர். இத்தகைய மன ஓர்மத்தை அஷ்ரப்புக்கு ஏற்படுத்த சேகு இஸ்ஸதீன் பக்கத்துணையாக இயங்கினார்.***

அதன் இன்னொரு கட்டம்தான் இலங்கை-இந்திய ஒப்பந்தமும் அதன் இடிமின்னல் போன்று உருவாகிய அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டமும்.

ஆரம்பத்தில் அந்த ஒப்பந்தம் இலங்கை முஸ்லிம்களுக்கான அடிமைச் சாசனம் என அஷ்ரப் பிரகடனம் செய்தாலும் 1987 முதல் 1990 வரையான இலங்கையின் போராட்டச் சூழலும் நமது பிராந்தியத்தின் பூகோள அரசியலின் வகிபாகமும் அதில் மேற்கத்தேய பூகோள அரசியலின் பின்வாங்கலும் எடுத்தெறிந்து விளாசித் தள்ளும் நிலைமையில் இருக்கவில்லை.

அதனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்டபோது முஸ்லிம்களின் கூட்டு உளவியலில் ஊசலாடிய அபிப்பிராயம் "இது போலித்தனமானது" என்பதே. ஏனெனில், விடுதலைப் புலிகளின் எதிர்ப்புகளை ஆசுவாசப்படுத்திக்கொண்டு வரையப்பட்ட இடைக்கால நிர்வாக சபையே நிறுவப்படாமல் தோல்வியைத் தழுவியபோது இது எப்படி வடக்கு, கிழக்கில் சாத்தியம் என்பதே. ஆனால், தீக்ஷித்தும் இந்தியாவும் இதில் பிடிவாதமாய் இருந்தார்கள். எப்படியும் இதைச் சாத்தியமாக்க தீக்ஷித் வரிந்து கட்டிக்கொண்டு நின்றார்.

ஆனால், இலங்கையிலுள்ள ஒட்டுமொத்த அரசியல் கட்சிகள் அனைத்துமே இதனை வன்மையாக எதிர்த்தன. இதில் முரண்பட்ட ஆளும் கட்சியாகிய ஐ.தே.கவின் எல்லா அணிகளுமே ஒன்றுபட்டு எதிர்த்தன. இத்தகைய பிராந்திய அரசியல் மற்றும் பூகோள அரசியல் சூழலில் இந்திய விஸ்தரிப்புவாதமும் தீக்ஷித்தும் அதன் வழியே ராஜீவ் காந்தியும் நகைப்புக்கிடமான பதப்பிரயோகங்களாகவே சர்வதேச அரசியலால் கணிக்கப்பட்டிருந்தனர். நகைப்புக்கிடமான இந்த சர்வதேச சூழலில் தங்கள் இலக்கை நோக்கிப் பயணிக்க இந்தியாவின் பிராந்திய விஸ்தரிப்புவாதத்துக்கான மாற்றுவழி முயற்கொம்பாகவே இருந்தது.

***மாற்றி யோசிப்பதில் வல்லவரான சேகு இஸ்ஸதீன் இந்தக் கட்டத்தில் தன் புத்திகூர்மையை மேலும் தீட்டிக்கொண்டிருந்தார். அந்தக் கட்டத்தில் அவரின் கண்டுபிடிப்புத்தான் வடக்கு, கிழக்கு மாகாண அரசியலில் வித்தியாசமான காய்களை சந்தர்ப்பவாதமாகவோ அல்லது சமயோசிதமாகவோ முஸ்லிம்கள் நகர்த்தியேயாக வேண்டும் என்பதாகும். இதுபற்றி மிகத் தீவிரமாக இஸ்ஸதீன் அஷ்ரப்புடன் இராப்பகலாக விவாதித்தார். முடிவு வடக்கு, கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடுவதைத் தவிர, வேறு வழியில்லை என்பதாகும்.***

முஸ்லிம் வெகுஜனமும் விடுதலைப் புலிகளும் மாத்திரமன்றி இனத்துவ அரசியலின் உள்ளே தத்துவார்த்த அடிப்படையில் பிரவேசித்த அனைவருமே திகைப்படைந்த தீர்மானமே இதுவாகும். ஆனால், வடக்கு, கிழக்கில் இந்தியாவால் புதைக்கப்பட்ட அச்சுறுத்தும் மிதிவெடிகளில் இருந்து முஸ்லிம் சமூகத்தைத் தற்காத்துக்கொள்ளும் ஒரே தப்புதல் மார்க்கம் இப்படியான ஒரு தீர்மானமே என்பதை சேகு இஸ்ஸதீனூடாக அஷ்ரப் கண்டுபிடித்தார்.

இதனால், திகைப்படைந்த உள்ளூர் பாரம்பரிய அரசியலும், எஸ்.எல்.எவ்.பீயும் போர்க்கொடியைத் தூக்கின. இதனுள் முஸ்லிம் ஐ.தே.கவினரும் அடக்கம். அஷ்ரப்புடன் அவநம்பிக்கை கொள்ளச் சித்தமில்லாத முஸ்லிம் வெகுஜனம் ஆரம்பத்தில் பின்வாங்கினாலும் தங்களுக்குள்ள ஒரேயொரு பாதுகாப்புக் கவசம் அஷ்ரப் மாத்திரமே என்பதால் அவரின் பின்னல் ஓடிச்செல்லத் தொடங்கிற்று.

ஆக இந்தக் கட்டத்தின் வெற்றி தோல்வியின் முதன்மைப் பங்காளிகளாக அஷ்ரப்பும் சேகு இஸ்ஸதீனும் திகழ்ந்தனர் என்பதே உண்மையாகும்.

*''வெள்ளை பூக்கள் உலகம் எங்கும் மலர்கவே....
விடியும் பூமி அமைதிக்காக விடிகவே...''*



# புதுவருடமும் புதிய சவால்களும்

கடந்த 2024ஆம் ஆண்டு விட்டுச்சென்ற தடத்தை இன்று மலர்ந்துள்ள 2025ஆம் ஆண்டு தொட்டுச் செல்கிறது. அந்தவகையில் கடந்த 2024ஆம் ஆண்டு அரசியல், பொருளாதாரம், பௌதீக ரீதியாக உலகரங்கில் பல்வேறு மாற்றங்கள் இடம்பெற்றன. அந்த மாற்றத்தின் தடத்தை மலர்ந்துள்ள 2025ஆம் ஆண்டு தொட்டுச் செல்கின்றது.

மாற்றம் ஒன்றே மாறாதது என்பதற்கிணங்க கடந்த ஆண்டு உலகின் பல நாடுகளில் தேர்தல்கள் நடத்தப்பட்டன. அதிகாரத்தை எடுத்துக்கொண்ட அரசுகள் அல்லது தெரிவுசெய்யப்பட்ட தலைவர்களின் நடவடிக்கைகளின் தாக்கம், மலர்ந்துள்ள 2025இல் தென்படத் தொடங்கியுள்ளது. இத்தேர்தல் முடிவுகளும் புதிய அரசுகளின் முடிவுகளும் அந்நாட்டின் அரசியலை மட்டும் பாதிக்காமல், அவற்றின் தாக்கம் உலகளவில் பல மாற்றங்களை ஏற்படுத்தவுள்ளது.

### நாளை முதல் ட்ரம்பின் 2.0 ஆட்சி ஆரம்பம்

அந்தவகையில் கடந்த ஆண்டு நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சியின் சார்பில் களம் கண்ட முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெற்றிபெற்ற நிலையில், அவர் அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக நாளை (20) பதவியேற்கவுள்ளார். நாளைமுதல் ட்ரம்பின் 2.0 ஆட்சிக்காலம் ஆரம்பமாகவுள்ளது. அமெரிக்காவின் ஆட்சிப்பொறுப்பை ஏற்கவுள்ள ட்ரம்பின் வெளியுறவுக் கொள்கை என்ன, அவர் உலக நாடுகளை எவ்வாறு கையாளப் போகிறார் என்பது குறித்து உலக நாடுகள் உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கியுள்ளன.

இழுபறியாக காணப்பட்ட அமைதிப் பேச்சுவார்த்தைகள் கைகூடி போர் கண்ட காஸா பூமியில் இன்று அமைதியின் நிழல் குடிகொள்ளத் தொடங்கியுள்ளது. இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகளுக்கிடையிலான போர் நிறுத்த பேச்சுவார்த்தைகள் வெற்றிகண்டுள்ள நிலையில், 15 மாதங்களாக தொடர்ந்த காஸா போர் இன்று முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இதுவே மலர்ந்துள்ள இப்புத்தாண்டின் மகத்தான வெற்றியாகப் பார்க்கப்படுகிறது.

### முடிவுக்கு வந்த இஸ்ரேல் - ஹமாஸ் போர்

காஸாவை தளமாகக்கொண்டு இயங்கிவரும் ஹமாஸ் போராளிகள் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 07ஆம் திகதி, திடீரென இஸ்ரேலுக்குள் புகுந்து நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் சுமார் 1,200 பேர் கொல்லப்பட்டனர். 251 பேர் பணயக்கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர்.

இதையடுத்து, ஹமாஸ் அமைப்புக்கு எதிராக இஸ்ரேல் இராணுவ நடவடிக்கையை தொடங்கியது. ஹமாஸ் போராளிகளை அழித்தொழிக்கும் வரை போர் தொடருமென இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு சூளுரைத்தார். இதனையடுத்து காஸாவுக்கான உணவு, குடிநீர், மின்சாரம் மற்றும் இணையம் உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகளைத் துண்டித்தது இஸ்ரேல். அத்துடன், காஸாமீது தரை, வான் மற்றும் கடல் மார்க்கமாகவும் தாக்குதலைத் தொடங்கியது இஸ்ரேல். இப்போர் கடந்த 15 மாதங்களாக தொடர்ந்த நிலையில், காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதலில் இதுவரை 46,800 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், 1,10,500இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

அத்தோடு காஸா வாழ் 23 இலட்சம் மக்களில் பெரும்பாலானோர் இடம்பெயர்ந்துள்ளனர். காஸாவில் பரவலான அழிவு ஏற்பட்டுள்ளது. உணவு, எரிபொருள், மருந்து மற்றும் தங்குமிடம் ஆகியவற்றின் கடுமையான பற்றாக்குறை காரணமாக மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர்.

காஸா போரை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் அமெரிக்க, எகிப்து மற்றும் கட்டார் உள்ளிட்ட நாடுகள் கடந்த சில மாதங்களாக முயற்சித்து வந்தன. இந்த முயற்சிகளின் பயனாக 15 மாதங்களாகக் கடந்தும் நீடித்துவந்த போர் தற்போது நிறைவுக்கு வந்துள்ளது.

### ட்ரம்ப் விதித்த கெடு

இதற்கிடையே அமெரிக்க ஜனாதிபதியாக நாளை (20) பதவியேற்கவுள்ள ட்ரம்ப், ''விரைவில் காஸா போரை நிறுத்தவில்லையென்றால் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும்'' என எச்சரிக்கை விடுத்திருந்தார்.

அதற்கமைய காஸாவில் போரை நிறுத்தவும் இஸ்ரேலிய பணயக் கைதிகளை விடுவிக்கவும் பதிலுக்குப் பலஸ்தீனர்களை விடுவிக்கவும் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்துள்ளன. இந்த ஒப்பந்தத்தின்படி முதல் ஆறு வாரங்கள் போர் நிறுத்தம், அதன் பின் காஸா எல்லையில் குவிக்கப்பட்டுள்ள இஸ்ரேலியப் படைகளைப் படிப்படியாக திரும்பப் பெறுதல் ஆகியவை அடங்கும்.

இஸ்ரேல் - ஹமாஸ் போர் நிறுத்த ஒப்பந்தம் குறித்து, அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்கவுள்ள ட்ரம்ப் சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட பதிவில், ''மேற்காசியாவில் சிறை பிடிக்கப்பட்டுள்ள பணயக் கைதிகள் விவகாரத்தில் சமரசத்தை எட்டியுள்ளோம். விரைவில் அவர்கள் விடுவிக்கப்படுவர்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையேயான போர் முடிவுக்கு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் கடந்த 16ஆம் திகதி 24 மணிநேரத்துக்குள் காஸா மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் 27 சிறுவர்கள் மற்றும் 31 பெண்கள் உட்பட 101 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், 188இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாக அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### 19இல் அமுலுக்கு வரும் போர் நிறுத்த ஒப்பந்தம்

காஸா போர் நிறுத்தம் மற்றும் பணயக் கைதிகள் விடுதலை ஒப்பந்தத்தை இஸ்ரேலும் ஹமாஸும் ஒப்புக்கொண்டதாக இருதரப்பும் ஒப்புக்கொண்டுள்ளன. இந்த ஒப்பந்தம் இன்று (19) அமுலுக்கு வரும் என்று கட்டார் பிரதமர் ஷேக் முஹம்மது பின் அப்துல் ரஹ்மான் அல் தானி தெரிவித்தார்.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், "இந்த ஒப்பந்தம் காஸாவில் போரை நிறுத்தும். பலஸ்தீன பொதுமக்களுக்கு மிகவும் தேவையான மனிதாபிமான உதவியை அதிகரிக்கும். பணயக் கைதிகளை அவர்களது குடும்பங்களுடன் மீண்டும் இணைக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

### போர் நிறுத்தத்தை உறுதிப்படுத்திய நெதன்யாஹு

காஸா பணயக் கைதிகளை விடுவிக்கும் இஸ்ரேல் - ஹமாஸ் ஒப்பந்தம் கட்டார் தலைநகர் டோஹாவில் எட்டப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் குறித்து இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு தெரிவிக்கையில்,

''காஸாவிலிருந்து பணயக் கைதிகளை விடுவிக்கும் இஸ்ரேல் - ஹமாஸ் ஒப்பந்தம் எட்டப்பட்டது. இது தொடர்பில் அரசியல் பாதுகாப்பு அமைச்சரவையை கூட்டியுள்ளோம். இதை ஊக்குவித்ததற்காக பைடனுக்கு நன்றி" எனத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் மூலம் 15 மாதங்களாக நடந்துவந்த போர் முடிவுக்கு வந்துள்ளது. இந்நிலையில், காஸாவிலிருந்து பணயக் கைதிகளை விடுவிக்கும் ஒப்பந்தம் எட்டப்பட்டதை இஸ்ரேல் பிரதமர் நெதன்யாஹு உறுதிசெய்துள்ளார்.

இது தொடர்பாக இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "காஸாவிலிருந்து பணயக் கைதிகளை விடுவிக்கும் ஒப்பந்தம் எட்டப்பட்டது. பணயக் கைதிகள் திரும்புதலை உறுதிசெய்தல் உள்ளிட்ட போர் இலக்குகள் அனைத்திலும் இஸ்ரேல் உறுதியாக இருக்கிறது. இந்த ஒப்பந்தம் மூலம் இடம்பெயர்ந்த பலஸ்தீனியர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப அனுமதிக்கப்படுவார்கள்" எனத் தெரிவித்துள்ளது.

### நிலையான அமைதிக்கு 16ஆவது நாளில் மீண்டும் பேச்சு

போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்ததும் முதல் ஆறு வாரம் இரு தரப்பினரும் 'அமைதியாக' இருக்கவேண்டும் என்று கட்டார் பிரதமர் வலியுறுத்தியுள்ளார். மேலும் அவர், ''காஸாவின் அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட பகுதிகளிலிருந்து இஸ்ரேலியப் படைகள் கிழக்கு நோக்கி பின்வாங்கும். இடம்பெயர்ந்த பலஸ்தீனியர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப அனுமதிக்கப்படுவார்கள்.

மேலும், நூற்றுக்கணக்கான லொறிகள் மூலம் உதவிப்பொருட்கள் ஒவ்வொரு நாளும் காஸாவுக்குள் செல்ல இஸ்ரேல் அனுமதிக்கும். மீதமுள்ள பணயக் கைதிகள் விடுவிக்கப்படுவது, இஸ்ரேலிய துருப்புகள் முழுமையாக திரும்பப் பெறுவது, 'நிலையான அமைதிக்கு' திரும்புவது போன்றவற்றுக்கான இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைகள் வரும் 16ஆவது நாளில் தொடங்கும்" எனத் தெரிவித்துள்ளார்.

### விடைபெறும் ஜோ பைடன்

இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்குமிடையே நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்நிலையில், அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ள ட்ரம்ப் நாளை (20) பதவியேற்கவுள்ளார்.

அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன், தலைமை பொறுப்பைக் கையளித்து நாளை (20) வெள்ளை மாளிகையிலிருந்து வெளியேறவுள்ளார். பைடன் தனது பிரியாவிடை உரையில், ''அமெரிக்காவின் ஆட்சி அதிகாரம் மிகப் பெரிய செல்வந்தர்களின் கைகளில் செல்வதால் நாட்டு மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்'' என அமெரிக்க மக்களை எச்சரித்துள்ளார்.

இந்நிலையில், நாளையுடன் (20) ஜோ பைடனின் ஜனாதிபதி பதவி மட்டுமல்ல, அவரது 50 ஆண்டு கால அரசியல் வாழ்க்கையும் முடிவடையவுள்ளது. 1972ஆம் ஆண்டு ஜோ பைடன் தனது 30ஆவது வயதில் தனது சொந்த மாநிலமான டெலாவேரில் செனட்டராகத் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### பற்றியெரியும் லொஸ்ஏஞ்சல்ஸ்

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக பொறுப்பேற்கவுள்ள ட்ரம்ப், ''நான் ஆட்சிக்கு வந்தால் உலகில் இடம்பெற்றுவரும் மோதல்களை முடிவுக்குக் கொண்டுவருவேன்'' என அளித்த தேர்தல் வாக்குறுதிகளை அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்னரே நிறைவேறியுள்ளது. அந்தவகையில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகளுக்கிடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. காஸாவில் 15 மாதங்களாக நீடித்து வந்த போர் இன்று நிறைவுக்கு வந்துள்ளது.

மறுபுறம் அமெரிக்கா மிகப்பெரிய ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது. ஆம், அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தின் லொஸ்ஏஞ்சல்ஸ் நகரத்தில் கடந்த 07ஆம் திகதி பரவத்தொடங்கிய காட்டுத் தீ கட்டுக்கடங்காது இன்றும் பற்றியெரிந்து வருகிறது. இதனால் கலிபோர்னியா மிக மோசமான பாதிப்புகளைச் சந்தித்துள்ளது. காட்டுத் தீயில் சிக்கி இதுவரை 40இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன், 30இற்கும் அதிகமானோர் காணாமல்போயுள்ளனர்.

12,000 கட்டடங்கள் உட்படப் பல கட்டுமானங்கள் சேதமடைந்திருக்கின்றன. 1.80 இலட்சம் பேர் வேறு இடத்தில் தங்கவைக்கப்பட்டிருக்கிறார்கள். 163 சதுர கிலோமீற்றர் பரப்பளவு தீக்கிரையாகியிருக்கிறது. வகைதொகையற்ற காட்டு ஜீவராசிகள் உயிரிழந்துள்ளன. நச்சுப்புகையின் பாதிப்பிலிருந்து தப்பிக்க வீட்டிலேயே இருக்குமாறு மக்கள் அறிவுறுத்தப்பட்டி ருக்கிறார்கள். தீயை அணைக்கும் பணியில் வீரர்கள் இரவும் பகலும் போராடிக்கொண்டிருக்கின்றனர். 200 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான பொருட்சேதம் ஏற்பட்டிருக்கிறது. இதனை நிவர்த்திசெய்யும் பொறுப்பு அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக பொறுப்பேற்கவுள்ள ட்ரம்பையே சாருமென தெரிவிக்கப்படுகிறது.

### ஒபாமா - மிச்செல் விவாகரத்து?

புதிய ஜனாதிபதியை வரவேற்க அமெரிக்கா உட்பட முழு உலகமும் ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கும் நிலையில், அதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.


இந்நிலையில், ட்ரம்ப் பதவியேற்பு விழாவில் மிச்செல் ஒபாமா பங்கேற்க மாட்டார் எனத் தகவல் வெளியாகியுள்ளது. இதனால், முன்னாள் ஜனாதிபதி ஒபாமா - அவரது மனைவி மிச்செல் விவாகரத்து செய்யப்போகிறார்கள் என்ற ஊகங்கள் வலுத்துள்ளன.

முன்னதாக, முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்டரின் இறுதி அஞ்சலி கூட்டத்தில் பராக் ஒபாமா மட்டுமே பங்கேற்றார். அப்போதே சமூக ஊடகங்கள் பலவற்றிலும் ஒபாமாவுக்கும் மிச்செலுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. அதனால் இருவரும் பிரியப் போகிறார்கள் என்று பேசப்பட்டது. இந்நிலையில் ட்ரம்ப் பதவியேற்பு விழாவிலும் மிச்செல் பங்கேற்க மாட்டார் என்ற அதிகாரபூர்வ தகவல் வெளியானதால் இந்த ஊகங்கள் வலுப்பெற்றுள்ளது.

மிச்செல் ஒபாமா தரப்பிலிருந்து வெளியான அதிகாரபூர்வ அறிவிப்பில், "அமெரிக்க ஜனாதிபதி பதவியேற்பு விழாவில் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா பங்கேற்கிறார். ஆனால், அவரது மனைவி மிச்செல் ஒபாமா பங்கேற்கவில்லை" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி பதவியேற்பு விழாக்களில் முன்னாள் ஜனாதிபதிகள் அவர்களின் இணையருடன் பங்கேற்பது கலாசார பாரம்பரியமாக அந்நாட்டில் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்நிலையில், அந்த மரபிலிருந்து விலகி மிச்செல் ஒபாமா பங்கேற்க மாட்டார் என்ற அறிவிப்பு வெளியாகியுள்ளது. பராக் ஒபாமாவும் மிச்செல் ஒபாமாவும் 1992ஆம் ஆண்டு திருமணம் செய்துகொண்டனர். அவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள் இருக்கின்றனர்.

இந்நிலையில், கடந்த சில நாட்களாகவே பராக் ஒபாமா - மிச்செல் ஒபாமா விவாகரத்து செய்யப்போவதாக அந்நாட்டு சமூக வலைத்தளங்களில் கருத்துகள் பகிரப்பட்டு வருகின்றன.



### ட்ரம்ப் பதவியேற்பில் அரைக் கம்பத்தில் பறக்கும் அமெரிக்க தேசியக் கொடி

**அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ட்ரம்ப் நாளை (20) பதவியேற்கவுள்ள நிலையில், அந்நாட்டு தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறந்துகொண்டிருக்கும்.**

**முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி, மறைந்த ஜிம்மி கார்ட்டர் தன்னுடைய 100ஆவது வயதில் அண்மையில் காலமானார். அவரது மறைவுக்கு துக்கம் அனுஷ்டிக்கும் வகையில் அமெரிக்க தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்படும் என்று அந்நாட்டின் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் உத்தரவிட்டிருந்தார்.**

**அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்கும் வரை ட்ரம்ப் எந்த உத்தரவும் பிறப்பிக்க முடியாது என்பதால், அமெரிக்க தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கும் நடவடிக்கையில் அவரால் எதையும் செய்ய இயலாது என்கின்றன தகவல்கள்.**

**அமெரிக்க ஜனாதிபதியாக இருந்து மறைந்த ஜிம்மி கார்ட்டருக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் அவரது மறைவுக்குத் துக்கம் அனுஷ்டிக்கும் வகையிலும் நாட்டின் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படுகிறது.**

**வழக்கமாக, அமெரிக்க ஜனாதிபதியோ அல்லது முன்னாள் ஜனாதிபதியோ மரணமடையும்போது, அரசு அலுவலகக் கட்டடங்கள், அதன் வளாகங்கள், அமெரிக்கத் தூதரகங்கள், பாதுகாப்புப் படை அலுவலகங்களில் தேசியக் கொடி 30 நாட்களுக்கு அரைக்கம்பத்தில்தான் பறக்கவிடப்படும்.**

**அதன்படி, தற்போது அமெரிக்காவில் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருக்கும் தேசியக் கொடி எதிர்வரும் 28ஆம் திகதி வரை அவ்வாறே நீடிக்கும்.**

**இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்கும் 20ஆம் திகதியும் அவரது ஆட்சித் தொடங்கிய முதல் வாரம் முழுவதும் அமெரிக்க தேசியக் கொடி அரைக்கம்பத்திலேயே பறந்துகொண்டிருக்கும்.**

**பொதுவாக தேசியக் கொடி பறப்பது தொடர்பான உத்தரவுகளை அமெரிக்க ஜனாதிபதி, ஆளுநர், மாகாண மேயர்கள் பிறப்பிக்கலாம். ஒருவேளை, ட்ரம்ப் பதவியேற்றதும் அமெரிக்க தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடுவதை மாற்றும்படி உத்தரவு பிறப்பிக்கலாம். அதற்கு வழிவகைகளும் உள்ளன.**

### 'கிளீன் ஸ்ரீலங்கா'வுக்குள் தலைவிரித்தாடும் அரிசித் தட்டுப்பாடு

இந்நிலையில், இந்து சமுத்திரத்தின் முத்தான நம் தாய்நாட்டு அரசியலில் மாற்றம் கொண்டுவரவேண்டும் என்றெண்ணியிருந்த மக்கள் வாக்களித்து புதிய தலைமையை தெரிவுசெய்து மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர். அந்தவகையில் பதவியேற்ற புதிய அரசு மூன்று மாதங்களை வெற்றிகரமாக நிறைவு செய்து 'கிளீன் ஸ்ரீலங்கா' என்ற புதிய திட்டத்தை கையிலெடுத்துள்ளது. இதன் வினைவு சாதக - பாதகமாக எட்டியிருந்தாலும் கடந்த வருடம் தலைதூக்கிய அரிசி பற்றாக்குறை இவ்வருடம் அரிசியின் விலை அசுர வேகத்தில் எகிறுவதற்குக் காரணமாகியிருக்கிறது. இந் நிலையில், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வெளிநாட்டு விஜயமாக சீனாவுக்குச் சென்று வளமான நாடு, அழகான வாழ்க்கைத் திட்டத்துக்கு ஆதரவு கோரி நிற்கிறார்.

இன்றைய நிலையில் ஒரு கிலோ அரிசியின் விலை ரூ.230ஐ தாண்டியுள்ளது. மூவேளை சோற்றை பிரதானமாகக்கொண்ட இந்நாட்டு கடைநிலை குடிமகன் மூவேளை உணவை ஒருவேளையாகச் சுருக்கிக்கொண்டுள்ளான். அந்தோ பரிதாபம்.

### கைதுசெய்யப்பட்ட தென்கொரிய ஜனாதிபதி

தென்கொரியாவில் இராணுவ சட்டத்தை அமுல்படுத்தி மீளப்பெற்ற விவகாரத்தில் பதவி நீக்கம் செய்யப்பட்ட அந்நாட்டு ஜனாதிபதி யூன் சுக் இயோல் கடந்த 15ஆம் திகதி கைதுசெய்யப்பட்டமை உலக அரங்கில் பேசுபொருளாகியுள்ளது.

இயோல் மீதான கைது நடவடிக்கைக்கு கடந்த டிசம்பர் 31ஆம் திகதியே பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில், மிக நீண்ட போராட்டங்களுக்குப் பின்னர் கடந்த 15ஆம் திகதியே அவர் கைதுசெய்யப்பட்டார். தான் கைதுசெய்யப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக பல்வேறு பாதுகாப்பு ஏற்பாடுகளை இயோல் மேற்கொண்டிருந்த நிலையில், அனைத்து ஏற்பாடுகளையும் தாண்டி கடந்த புதன்கிழமை (ஜன.15) அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், உயிர்கொல்லி நோயான புற்றுநோய்க்கு மருந்து கண்டுபிடித்துள்ளதாக அறிவித்துள்ள ரஷ்யா அதனை மக்கள் பாவனைக்காக இலவசமாக பகிர்ந்தளிக்கவுள்ளது. எதிர்வரும் நாட்களில் மக்கள் பாவனைக்கு அது வரவிருக்கிறது. ரஷ்யாவின் புற்றுநோய் தடுப்பூசி கண்டுபிடிப்பானது உலகின் மகத்தான ஒரு விடயமாகும். இத்தடுப்பூசி கண்டுபிடிப்பால் புற்றுநோயால் உலகம் முழுவதும் ஆண்டுக்கு பில்லியன் கணக்கில் காவுகொள்ளப்படும் அப்பாவி உயிர்கள் இனி காக்கப்படும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

**கே.சுபானி**

# இலங்கை - சீன உறவும்

# முன்னோர் காட்டிய வழியில் செல்லும் அரசும்





எம்.எஸ்.அமீர் ஹுசைன்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு சீனா சென்றுள்ளார். இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பின் பேரில் அண்மையில் இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இரு நாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர உறவை வலுவடையச் செய்ய நடவடிக்கை எடுத்தார். இந்நிலையில், இந்தியாவுக்கு அடுத்தபடியாக தற்போது சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டார். இலங்கை, சீனாவுக்கு பொருளாதார ரீதியாகவும் பூகோள அமைவின் அடிப்படையிலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நாடாகும். ஜனாதிபதி அநுர இந்தியாவுக்கு அவசரமாக விஜயம் மேற்கொண்டதால் சீனாவும் மேலும் தாமதிக்க விரும்பவில்லை. அவசரமாக ஜனாதிபதியை சீனாவுக்கு அழைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் சீன விஜயத்தின்போது பல புதிய பொருளாதார கூட்டு ஒத்துழைப்பு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்கின்றன. சீனா இலங்கைக்கு கொடுத்திருக்கின்ற பாரியளவு கடனுக்கான 40 கோடி அமெரிக்க டொலர் மதிப்புள்ள வட்டியைத் தரவேண்டாமென்று சலுகை வழங்குவது, அம்பாந்தோட்டையில் துறைமுகத்தோடு இணைந்ததாக சைனோ பெக் நிறுவனத்தின் எண்ணெய்க்குதமொன்றை அமைத்தல், வருடாந்தம் இரண்டு இலட்சம் பீப்பாய்கள் எண்ணெயைப் பரிமாறுதல் என்று பல முதலீட்டு முயற்சிகளுக்கான புதிய கதவுகளை இலங்கை அரசாங்கம் சீனாவுக்கு அகலத் திறந்து கொடுக்க இணக்கம் எட்டப்பட்டிருக்கின்றது. இலங்கை போன்ற பொருளாதார ரீதியாக பின்னடைவு கண்டுள்ள நாடொன்று மீண்டெழுவதற்கு இவை எல்லாம் தேவை என்றே கூறலாம்.

ஆனாலும் இவர்கள் பதவிக்கு வர முன்னர் முன்னைய ஆட்சியாளர்களும் இதேபோன்று தேசத்தைக் கட்டியெழுப்ப என்று இலங்கையில் முதலீட்டாளர்களுக்கும் உதவி வழங்கிய நாடுகளுக்கும் நிலத்தையும் காணிகளையும் வரிச்சலுகைகளையும் கொடுத்துக் கவர்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தனர். அப்போதெல்லாம் இலங்கையை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதாகக் குற்றஞ்சாட்டியவர்கள்தான் இன்று சீனாவுக்கு இலங்கையில் கால் பதிக்க முன்னர் இருந்ததை விட கூடுதல் வாய்ப்புகளை வழங்க முன்வந்துள்ளனர். நாட்டின் சொந்த வளங்கள் இருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்தி நாட்டை அபிவிருத்தி செய்வோம், ஓர் அங்குல நிலத்தைக் கூட வெளிநாடுகளுக்குக் கொடுக்க மாட்டோம், கொடுத்திருப்பதையும் எடுப்போம் என்று கூறியவர்கள் இப்போது வேறு வழி இல்லை என்ற நிலையில் நமது முன்னோர்களது வழியில் செல்கின்றனர் என்றால் புதிய விடயமாக இல்லை. ஏற்கனவே 1977ஆம் ஆண்டு திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட நாளிலிருந்து 2025 ஜனவரி 16ஆம் திகதி அநுரகுமார திசாநாயக்க சீனா சென்று உடன்படிக்கைகளில் கையொப்பமிடுவது வரையில் இவைதான் நடந்து வருகின்றன.

சீனா முழுமையான கம்யூனிச கொள்கையைப் பின்பற்றும் நாடாகும். சீனாவின் கம்யூனிச சிந்தனையால் கவரப்பட்டதன் காரணமாகவே ஜே.வி.பியின் ஸ்தாபகரான ரோஹன விஜேவீர 1970ஆம் ஆண்டு காலகட்டத்தில் சோவியத் ரஷ்யாவில் மருத்துவக் கல்வி கற்றுக்கொண்டிருந்த காலகட்டத்தில் இவ்வாறானதொரு சோஷலிச சிந்தனையைப் பின்பற்றும் ஓர் அரசியல் கட்சியை உருவாக்கினார். ஆனாலும் அவரால் இந்த நாட்டில் ஆட்சியைப் பிடிக்க முடியாமல்போன நிலையில் முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாச ஆட்சியில் அரசுக்கு எதிராக 1989 மற்றும் 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட கிளர்ச்சி காரணமாகக் கொல்லப்பட்டார். 1976ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்ததால் அப்போதைய பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்க விஜேவீரவை பிடித்து சிறையில் அடைத்திருந்தார். பின்னர் 1977இல் பதவிக்கு வந்த ஜே.ஆர். ஜெயவர்தன அவரை விடுதலை செய்தார். பின்னர் அதே ஜே. ஆர்., ஜே.வி.பியை தடைசெய்து மீண்டும் தடை தளர்த்தப்பட்டு அக்கட்சி ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்ததாயினும் 1989ஆம் ஆண்டு கிளர்ச்சியுடன் மீண்டும் நெருக்கடியைச் சந்தித்தது.

தற்போது அதே ஜே.வி.பியின் மறு வடிவமாக ஆட்சி பீடம் ஏறியிருக்கின்ற ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இப்போது சோசலிச நாடுகளுடனான உறவைப் புதுப்பித்து நட்பைப் பலப்படுத்த நடவடிக்கைகளை எடுத்துவருகின்றார். அந்த வகையில் எந்தவிதமான ஆபத்தான நிலையிலும் மிகுந்த அக்கறையோடு நேசக்கரம் நீட்டி வரும் அயல்நாடான இந்தியாவுடன் பலமான உறவு பேணப்படுகின்றது. ஏற்கனவே இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்த 2022ஆம் ஆண்டு காலகட்டத்தில் சுமார் 420 கோடி அமெரிக்க டொலர்களுக்கு மேல் பலவிதமான கடன் வசதிகளைக் கொடுத்து இலங்கையை மீட்டெடுத்த நாடுகள் வரிசையில் இந்தியா முக்கியமான இடத்தைப் பெறுகின்றது.

அவ்வாறான ஒரு சூழ்நிலையில் இலங்கை ஒருபோதும் சீனாவை புறக்கணித்து ஆட்சி வியூகங்களை வகுக்க முடியாது. அந்தளவுக்கு இலங்கை, சீன இராஜதந்திர உறவு சுமார் 72 வருடங்களுக்கு மேற்பட்ட நீண்ட வரலாற்றைக்கொண்டதாகும்.

1952ஆம் ஆண்டு காலப்பகுதியில் சீனாவுக்கு ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத் தடைகளை விதித்திருந்த சந்தர்ப்பத்தில் சீனாவுக்கு இறப்பர் மற்றும் அரிசி ஏற்றுமதி செய்வதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதன்பின்னர் 1957ஆம் ஆண்டு உத்தியோகபூர்வமான இராஜதந்திர உறவு ஸ்தாபிக்கப்பட்டது. 1970ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்நாட்டின் பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்க காலப்பகுதி முதல் இந்த உறவு மேலும் பலமடைந்தது. குறிப்பாக, இலங்கையை ஆட்சிசெய்யும் அனைத்து இடதுசாரி கட்சிகளதும் நேச நாடு என்ற பெருமை சீனாவுக்கு இருந்து வருகின்றது.

அதன் காரணமாகவே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் 2005ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரையிலும் அதன் பின்னர் 2019ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரும் கூட இந்த சீனாவை அரவணைத்ததாகவே பொருளாதார மற்றும் வெளிவிவகாரக் கொள்கைகளை அமைத்து சீனாவுடன் மிகவும் இறுக்கமான உறவைப் பேணி வந்தனர் என்று கூறலாம். ஏன் அந்தளவுக்கு சீனா முக்கியத்துவம் பெறுகின்றது என்ற வினா எழுகின்றது. ஒருவகையில் பார்த்தால் பொருளாதார வளமும் பலமும் கொண்ட நாடு என்ற வகையில் இலங்கைக்கு சீனா முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது. அதேபோன்று மறுபுறமாக சீனா பிராந்தியத்தில் வல்லரசாக இருந்து வருவதால் அதன் பிராந்திய இராணுவ விரிவாக்கம், பாதுகாப்பு, சந்தைப்படுத்தல் போன்ற இலக்குகளை அடைய இலங்கை அந்நாட்டுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது. ஏற்கனவே இலங்கையில் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகவிருந்த காலப்பகுதியில் அம்பாந்தோட்டை துறைமுகம், கொழும்பு துறைமுக நகரம் என்ற அடிப்படையில் பாரிய பொருளாதார வளம் கொண்ட கேந்திர நிலையங்களை சீனாவிடம் 99 வருட குத்தகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் கையளித்து இலங்கை பொருளாதார நலன்களை அடைந்திருக்கின்றது. அவற்றை மேலும் வளப்படுத்தும் பொறுப்பை இந்த அரசு சீனாவுக்கு வழங்கவிருக்கின்றது.

அத்துடன், இலங்கையை கடுமையான பொருளாதார நெருக்கடி நிலைமைகளி லிருந்து மீட்பதற்காக சீனா இலங்கைக்கு கொடுத்திருக்கும் கடன்களின் அளவு 150,000 கோடி ரூபாவுக்கும் (420 கோடி அமெரிக்க டொலர்) அதிகமானதாகும். இந்தளவு கடனைக் கொடுத்துள்ள சீனாவுக்கு இலங்கை வருடாந்தம் மேலும் பல பில்லியன் ரூபா வட்டியாக செலுத்தி வருகின்றது.


2022ஆம் ஆண்டு இலங்கை பொருளாதார ரீதியாக படுபாதாளத்தில் விழுந்தபோது சீனா இலங்கைக்குக் கைகொடுத்தது. அந்த நாடு கடன் மீளமைப்புக்கு உடன்பட்டு அது தொடர்பான உடன்படிக்கையில் கையொப்பமிட இணங்கிய பின்னரே சர்வதேச நாணய நிதியம் 300 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கும் மேற்பட்ட தொகைகளை இலங்கைக்குக் கடனாகக் கொடுக்க இணக்கம் தெரிவித்தது. அத்துடன், செலுத்த வேண்டிய வட்டியில் 40 கோடி அமெரிக்க டொலர் மதிப்புள்ள வட்டியை அநுரகுமார திசாநாயக்கவுக்காக சீனா விட்டுக்கொடுக்கவும் கடன் மீளமைப்பு தொடர்பாக கலந்துரையாடல்களைச் செய்யவும் தயாராக இருப்பதாக பீஜிங் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன் காரணமாகவே இலங்கை 2022ஆம் ஆண்டிலிருந்து 2024 செப்டெம்பர் வரையான அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் இரண்டு வருட கால ஆட்சியில் ஓரளவுக்குப் பொருளாதார மீட்சி கண்டது. இந்நிலையில், தற்போது 04 நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் சீன விஜயம் பல மட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருக்கின்றது. குறிப்பாக, புதிய வர்த்தக வாணிப உடன்படிக்கைகள், முதலீட்டு வாய்ப்புகள், ஏற்கனவே கொடுக்கவிருக்கின்ற கடனில் மேலும் சலுகைகள் என்று பல உதவிகளை சீனாவிடமிருந்து இலங்கை எதிர்பார்த்த நிலையில் ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகி இருக்கின்றது. சீன ஊடகங்கள் இந்த விஜயம் பற்றி விபரிக்கையில், மலர்ந்துள்ள புது யுகத்தில் இலங்கை - சீன உறவு மேலும் வலுவடைந்து இலங்கைக்குப் பாரிய அபிவிருத்தி உதவிகள் கிடைக்க ஜனாதிபதி அநுரகுமாரவின் இந்த விஜயம் கைகொடுக்கும் என்று தெரிவித்துள்ளன.

அத்துடன், தற்போது பதவியில் இருப்பது தூய கம்யூனிசம் சார்ந்த ஆட்சியாக இருப்பதால் முன்னைய காலப்பகுதிகளை விட சீனாவின் நேசக்கரம் இலங்கைக்குப் பல வழிகளில் அதிகமானதாக இருக்கும் என்று எதிர்பார்க்க முடிகின்றது. இந்தப் பிராந்தியத்தில் இதுகாலவரையில் தூய கம்யூனிச சிந்தனை சார்ந்த ஆட்சியைக்கொண்ட நாடு என்ற ஒன்று இருக்கவில்லை. அந்த வகையில் தற்போது இலங்கை அந்த ஸ்தானத்தை அடைந்திருக்கின்றது. அது மட்டுமல்லாமல் பிராந்தியத்தில் வர்த்தக ஏகாதிபத்திய விரிவாக்கலில் ஈடுபட்டுள்ள நாடுகள் வரிசையில் சீனாவின் பங்களிப்பு இந்தியாவை விட கூடுதலாக இருப்பதால் அந்நாடு கூடுதலான உதவிகளை இலங்கைக்கு வழங்க வேண்டும். இந்தியாவை விட சீனா இலங்கை மீது அதன் பிடியை மேலும் இறுக்கமாக்க வேண்டும். அதன் மூலமே இலங்கையை மேலும் அதன் சந்தைப்படுத்தல்களுக்கு ஏற்ற வகையில் மாற்றியமைக்க முடிகின்றது.

எப்படியோ இந்த தேசிய மக்கள் சக்தி அரசு 70 வருட சாபம் என்று திட்டித் தீர்த்து பதவியைக் கைப்பற்றினாலும் அதே 70 வருடகால ஆட்சியாளர்கள் காட்டிய வழிக்கு மேலதிகமான புதிய பயணப்பாதையொன்றைத் தெரிவுசெய்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அவ்வாறு புதிய தெரிவு இருக்குமானால் முதலாளித்துவ சார்பு திறந்த பொருளாதாரத்தை முற்றாகத் தவிர்த்து தூய சோஷலிசத்தை கரம் பிடிக்க வேண்டும். ஆனால், பொருளாதார மீட்சிக்கு அது மாற்றீடாக அமையாது என்றே கூறலாம்.

## ஜனரஞ்சக பாடகர் கலாபூஷணம் கலைஞர் கலைக்கமலின் 'கீத்ராத் 62'






ஜனரஞ்சக பாடகர் கலாபூஷணம் கலைஞர் கலைக்கமலின் 'கீத்ராத் 62' இம்மாதம் 25ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு கொழும்பு - 07, ஜே.ஆர்.ஜெயவர்தன மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தினகரன் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர் தலைமையில் தேசமான்ய 'கலைப்புரவலர்' ஸைட் சிவாஜி மௌலானா முன்னிலையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரபல தொழிலதிபர், கலை ஆர்வலர் எஸ்.ரவீந்திரன், விஷேட அதிதிகளாக 'இறைஞானக்கவி' ரமீஸ், வீரகேசரி நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் முருகேசு செந்தில்நாதன், இலங்கை வானொலி முஸ்லிம் சேவை முன்னாள் பணிப்பாளர் எம்.இஸட்.அஹ்மத் முனவ்வர், பிரபல சமூகசேவகி 'சலா பவுண்டேஷன்' தேசமான்ய ரஸ்மியா சமத், பாத்திமா ஸீனியா, கௌரவ அதிதிகளாக RANAR MIGRATION CENTER இயக்குநர் நஸீர், ALLIED TRADING INTERNATIONAL ( PVT) LTD தலைவர் இப்திகார் அஹ்மத் , STAR CORNER பௌஸ் ஜெமீல், சுங்க அதிகாரி லுக்மான் சஹாப்தீன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் ரூபவாஹினி முன்னாள் முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் மியாதத்கான் முஹம்மத் யூனுஸ், கலைஞர் எம்.எச்.ஷிப்லி, கவிநேசன் நவாஸ், கவிஞர் ராம்ஜி உலகநாதன், பதுளை ஆளுமை ஷிபானா அப்துல் பதாஹ், இலங்கை வானொலி அறிவிப்பாளர் கலையழகி வரதராணி, அளுத்கமை ஆளுமை நிஸ்வா சலாம் ஆகியோர் பொற்கிழி விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

பிரபல இசையமைப்பாளர்கள் எம்.எச்.எம்.இக்பால், பஸால் ஜின்னாஹ், அயாஸ் சவாஹிர், ஹாரிஸ் மாஸ்டர், சித்தாரா ஜெகன் இசையில் கலைக்கமல், மொறின் ஜெனற், சிங்கப்பூர் சிறப்புப் பாடகர், அதிதி ஹாஜி ஃபரீஹூல்லாஹ் இசைமுரசு, தமிழ்த் திரை இசைப் பாடல்களைப் பாடவிருக்கின்றனர்.

'கலாபூஷணம்' கலைக்கமலின் 45 ஆண்டுகள் கலைத்துறைப் பூர்த்தியை முன்னிட்டு இடம்பெறும் கலை, இலக்கிய, இசைப் பெருவிழா 'கீத்ராத் 62' நிகழ்ச்சிகளை ரசிகர்கள் இலவசமாகப் பார்த்து ரசிக்கலாம்.

## ஊடக அமைச்சரைச் சந்தித்த கொழும்பு ஊடகவியலாளர்கள்




கொழும்பு ஊடகவியலாளர் சங்கத்தினர் வெகுஜன ஊடக மற்றும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவை நேற்றுமுன்தினம் சுகாதார அமைச்சில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது கொழும்பு ஊடகவியலாளர்கள் சங்கம் பதினொரு அம்சங்கள் அடங்கிய மகஜரொன்றையும் அமைச்சரிடம் கையளித்தது. அனைத்து பிராந்திய ஊடகவியலாளர்களும் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகள் குறித்து கொழும்பு ஊடகவியலாளர்கள் சங்கம் அமைச்சரிடம் சுட்டிக்காட்டியது.







# பேராசை பெருநட்டம்

**உமர் அலி உஸ்மான்**

கடந்த 2014ஆம் ஆண்டு சுதந்திர தினத்துக்கு மறுநாள் ஸ்தாபிக்கப்பட்ட பிரிவேல்த் குளோபல் (Privelth Global) நிதி நிறுவனத்தின் வியாபார நடவடிக்கைகள், 2016ஆம் ஆண்டு ஜூலை ஆரம்ப நாட்களில் கிழக்கு மாகாணத்துக்கு விஸ்தரிக்கப்பட்டு சுமார் ஒன்றரை மாதகால இடைவெளியில் சம்மாந்துறை, கல்முனை, பொத்துவில், ஏறாவூர் மற்றும் மருதமுனை ஆகிய நகரங்களில் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் அரச உயரதிகாரிகளின் கரங்களால் வைபவரீதியாக கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டன.

இந்த நிறுவனம் 1,400க்கும் அதிகமான ஒப்பந்தங்களைப் பணவைப்பாளர்களுடன் மேற்கொண்டு சுமார் 160 கோடி ரூபா பணம் வசூலித்துள்ளது. இதற்கான இலாபம் கடந்த 2019ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் முதல் வைப்பாளர்களுக்கு வழங்கப்படவில்லை. அதன் பின்னரே வைப்பாளர்கள் உஷாரானதாக தெரிவிக்கிறார்கள் ஏமாந்தவர்கள். அதேவேளை, ஒப்பந்தம் நிறைவடைந்த நிலையிலுள்ள வைப்பாளர்களிடம் வசூலிக்கப்பட்ட பணம் திரும்ப வழங்கப்படவுமில்லை. இதனால் ஆத்திரமடைந்த வைப்பாளர்கள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளை பதிவுசெய்ததுடன், நீதிமன்றங்களில் வழக்குகளையும் தாக்கல் செய்தனர். இதனால், நீதிமன்றங்களில் ஆஜராகுமாறு இந்த நிறுவனத்தின் பணிப்பாளர் சிஹாப் ஷெரீம் மற்றும் அவருடைய மனைவி ஆகியோருக்கு அழைப்பாணைகள் அனுப்பி வைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து சிஹாப் ஷெரீம், அவருடைய மனைவி மற்றும் பிள்ளைகளுடன் யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவுக்கு படகு மூலம் கடந்த 2020.11.06ஆம் திகதி சட்டவிரோதமாக தப்பியோடினார். நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யத்தில் 2020ஆம் ஆண்டு நவம்பர் 06ஆம் திகதி இரவு 11 மணியளவில் கடலோர பாதுகாப்புப் படை ஆய்வாளர் செல்வராசு, கோடியக்கரை பஸ் நிலையத்தில் சிறுவனுடன் ஒரு தம்பதி இருப்பதைப் பார்த்துள்ளார். அவர்களிடம் விசாரித்தபோது, இலங்கையிலிருந்து படகு மூலம் தமிழ்நாட்டுக்கு வந்ததாக அவர்கள் கூறியுள்ளனர்.

இந்நிலையில் ''உரிய அனுமதி இல்லாமல் இலங்கையிலிருந்து சென்ற அவர்கள் 1967ஆம் ஆண்டு குடிவரவு - குடியகல்வு சட்டப்பிரிவு 12(1)(C)இன்படி கைது செய்யப்பட்டனர்'' என வேதாரண்யம் பொலிஸ் நிலைய ஆய்வாளர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர்கள் முஹம்மது ஷிஹாப் – பாத்திமா பர்ஸானா மார்க்கர் தம்பதியராவர்.




அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையிலடைத்த காவலர்கள், அவர்களின் பத்து வயது மகனை நாகையிலுள்ள அரசு காப்பகத்தில் தங்க வைத்துள்ளனர். கொரோனா உச்சமாக இருந்த காலத்தில் இவர்கள் எப்படி யாழ்ப்பாணத்துக்குப் போனார்கள்? அவர்களின் மோசடியில் பாதுகாப்புத் துறையினருக்கு சம்பந்தம் உள்ளதா? என்பதெல்லாம் விசாரிக்கப்பட வேண்டியது என்கிறார்கள் பாதிக்கப்பட்டவர்கள்.

இந்த வழக்கில் இரண்டு மாதங்கள் சிறைத்தண்டனையை அனுபவித்த சிஹாப் மற்றும் அவரது மனைவி, திருச்சி மத்திய சிறை வளாகத்திலுள்ள சிறப்பு முகாமில் தனித்தனியாக அடைக்கப்பட்டனர். இலங்கையின் கிழக்கு மாகாண மக்களிடமிருந்து 1,750 மில்லியன் ரூபா அடங்கலாக நாடு முழுவதிலும் 2,000 மில்லியன் ரூபா அளவில் மோசடி செய்துவிட்டு கடல் வழியாக சட்டவிரோதமாக தமிழகத்தில் நுழைந்து சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள பிரிவேல்த் குளோபல் நிதி நிறுவனப் பிரதானி ஷிஹாப் ஷெரீப், அவரது பாரியார் பர்ஸானா மார்க்கர் ஆகியோரை இலங்கைக்கு நாடு கடத்தவேண்டுமென பிரிவேல்த் குளோபல் பாதிக்கப்பட்ட அமைப்பினர் இந்திய - தமிழக முதலமைச்சர், ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்புத் தரப்பினருக்கு கடந்த 2022 ஒக்டோபர் 31 அன்று கோரிக்கை விடுத்தனர்.

பிரிவேல்த் குளோபல் நிறுவனத்தால் பாதிக்கப்பட்ட 1,400 குடும்பங்கள் பொருளாதார நெருக்கடியால் நிர்க்கதியாகியுள்ளன. குருவி சேர்ப்பது போன்று சேமித்த பணம், வீடு கட்ட சேமித்த பணம், அங்கவீனர்களின் பணம் எனப் பலரும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளோம் என்று பேராசைகொண்டு பெரும் நஷ்டமடைந்தவர்கள் அன்று ஊடகங்களை அழைத்து ஒப்பாரி வைத்து அழுதார்கள்.




கிழக்கின் முக்கிய நகரங்களில் கிளைகளைக் கொண்டு இயங்கிய இவர்கள், கல்முனை, மருதமுனை, சம்மாந்துறை, பொத்துவில் உள்ளிட்ட பிரதேசங்கள் முழுவதிலும் மொத்தமாக 200 கோடி ரூபாவையும் நாடு முழுவதிலும் 1,200 கோடி ரூபா அளவிலும் மோசடி செய்துள்ளனர் என்று தெரிவிக்கின்றனர்.

மேலும், கடந்த ஒரு வருடங்களாக எந்தவித முதலீட்டு இலாபங்களையோ அல்லது எங்களின் முதலீட்டையோ தராமல் ஏமாற்றி வருகிறார்கள். அதுமட்டுமன்றி மூடப்பட்ட கணக்கின் காசோலைகளையும் தந்துள்ளார்கள். எங்களுடைய பணத்தைப் பயன்படுத்தி பொதுத் தேர்தலில் கூட அவர்கள் போட்டியிட்டுள்ளார்கள். இந்த விடயம் தொடர்பில் அரசின் அதிகாரிகள், பொலிஸ் திணைக்கள சிரேஷ்ட அதிகாரிகள் எனப் பலருக்கும் தெரியப்படுத்தியும் எவ்வித பலமிக்க நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் குற்றஞ்சுமத்தினர். மத்திய வங்கியில் பதிவுசெய்யப்படாமல் இவர்கள் இயங்கியதாக அறிந்துகொண்டே நாங்கள் வைப்பிலிட்டோம். இது தொடர்பில் அவர்களிடம் விசாரித்தபோது, மத்திய வங்கியில் பதிவுசெய்தால் வாடிக்கையாளர்களுக்கு இலாபம் கூடுதலாக வழங்க முடியாது என்றார்கள். அதையும் நாங்கள் நம்பினோம் என்று சிறுபிள்ளைகள்போல கூறிக்கொண்டிருக்கிறார்கள்.



அன்றைய ஊடக சந்திப்பில் ஷிஹாப் ஷெரீப், அவரது பாரியார் பர்ஸானா மார்க்கர் ஆகியோர் தொடர்பில் இந்தியாவில் நடைபெற்று வந்த நீதிமன்ற சட்ட நடவடிக்கைகள் முடிந்துள்ளதாக அறிகிறோம். சர்வதேச பொலிஸாரால் தேடப்பட்டுவரும் இவர்களை இலங்கைக்கு நாடு கடத்துவது மூலம் இலங்கையின் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள எங்களுக்கு ஏதாவது நன்மை கிடைக்குமென்று நம்புகிறோம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மை கிட்டும் வகையில் இது தொடர்பாக நேரடியாகத் தலையிட்டு இவர்களை இலங்கைக்கு நாடு கடத்துமாறு ஜனாதிபதி அடங்கலாக துறைக்கு பொறுப்பான அதிகாரிகளை கேட்டுக் கொள்கிறோம் என்றனர்.

மேலும் மட்டக்களப்பு, பொத்துவில், கல்முனை, சம்மாந்துறை நீதிமன்றங்களில் இவர்களுக்கு எதிராக 100க்கும் மேற்பட்ட வழக்குகள் பதியப்பட்டுள்ளன. கடந்த 2020.09.10 அன்று பாராளுமன்றத்தில் கூட இது தொடர்பில் திகாமடுல்ல மாவட்ட எம்.பி. ஹரீஸால் பேசப்பட்டது. 2020.11.08 அன்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டார். சர்வதேச பொலிஸாரின் அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது.

இப்படியான இந்த மோசடி விடயத்தில் ஜனாதிபதி தலையிட்டு உரிய நியாயத்தைப் பெற்றுத்தர வேண்டும். இது நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு சற்று ஆறுதலளிக்கும் விடயமாக அமையும். இதனால் பாதிக்கப்பட்ட நாங்கள் கடுமையான கஷ்டங்களிலும் மன உளைச்சலிலும் இருக்கின்றோம் என்ற அவர்கள், நிதிமோசடியில் சிக்கி பேசுபொருளாக மாறியிருக்கும் திலினி பிரியமாலினியிடமும் எமது நிதி முதலீடு செய்திருக்கலாமென்று சந்தேகிக்கின்றோம். திலினி விடயத்தில் துரிதமாக செயற்படும் புலனாய்வுப் பிரிவு எங்களின் விடயத்திலும் அதே நிலையில் இயங்கினால் சிறப்பாக இருக்குமென்று நம்புகின்றோம். இது விடயமாக நிறைய வழக்குகள் கிடப்பில் இருக்கின்றன. எங்களுக்கு நீதியைப் பெற்றுத்தர சகலரும் முன்வர வேண்டும் என்றனர்.

இவைகள் கடந்து சுமார் 20 மாதங்கள் கடந்துள்ள நிலையில் இவர்கள் 2024.12.20 அன்று விமான நிலையத்தில் வைத்து குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப் பட்டனர். இஸ்லாமிய அடிப்படையில் செயற்படுவதாகக் கூறி இலங்கையின் பல பிரதேசங்களில் கிளைகளைக்கொண்டு இயங்கி 160 கோடி ரூபாவை மோசடி செய்த பிரிவேல்த் குளோபல் நிறுவனத்தின் பணிப்பாளர் சிஹாப் ஷெரீம் மற்றும்...

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# “பெருந்தோட்ட மக்களின் வரவும் ஏற்றுமதி பயிர்ச்செய்கையும்”



**சந்தனம் சத்தியநாதன்**

பிரித்தானிய காலனித்துவவாதிகளால் இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்கள் 1823-1825 காலப்பகுதியில் திட்டமிட்ட கோப்பிப் பயிர்ச்செய்கைக்காகவும் பின்னர் தேயிலைத் தோட்டங்களில் நிரந்தரமாக வேலை செய்யவும் பயன்படுத்தப்பட்டனர்.

இவ்வாறு இந்த நாட்டுக்கு இம் மக்கள் வருகை தந்து 200 ஆண்டுகள் கழிந்துவிட்ட போதிலும் தமது அடிப்படை உரிமைகளைக் கூட இழந்த நிலையில் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

1951ஆம் ஆண்டின் பெருந்தோட்ட உடைமைகளின் பருமன் என்று பார்க்கின்ற பொழுது மொத்த பரப்பு (ஏக்கர்) தேயிலை 5,67,288 எனவும் இறப்பர் 6,55,501 எனவும் தெங்கு 10,70,942 எனவும் ஓர் ஆய்வுத் தகவல் கூறுகிறது. (ஆதாரம்.D.R. Snodgrass(1966) 341-342.)

தேயிலை, தெங்கு என்பவற்றைப் பொறுத்தவரை நிலவிய ஒன்றுக்கொன்று முற்றிலும் முரணான தன்மையைக் காண முடிகின்றது.

தேயிலையின் 50 சதவீதத்துக்குமதிகமான பரப்பு பெருந்தோட்டங்களாயிருக்கத் தென்னையில் 50 சத வீதத்துக்கும் மேற்பட்ட அளவு சிற்றுடைமைகளாயுள்ளதென அப்போது குறிப்பிடப்பட்டது.

அவ்வகையில் இலங்கையின் பெருந்தோட்டத் துறையின் சமமற்ற தன்மையை இது நன்கு வெளிப்படுத்துகிறது. ஆனால், இது வெறும் பரப்பளவின் மூலம் மாத்திரம் ஏற்படும் ஓர் ஏற்றத்தாழ்வல்ல வென்பது கவனிக்கத்தக்கது. தேயிலைத் தோட்டங்களின் பெரும் பரப்பும் அவை முதலாளித்துவ நிறுவனங்களுக்குச் சொந்தமாயிருந்தமையும் தேயிலைத் தோட்டங்கள் நன்கு பராமரிக்கப்படுவதற்கும் அதன் வழி தேயிலைக் கைத்தொழில் தமது உன்னத நிலையை இலக்காமலிருப்பதற்கும் ஏதுவாக அமைந்தது.

இருந்தபோதிலும் தெங்குக் கைத்தொழிலில், ஏற்றுமதி விலைகளில் ஒரு நீண்ட கால வீழ்ச்சிப் போக்கு இல்லாமலிருந்ததும் அது ஒரு சிறந்த நிலைக்கு எடுத்துச் செல்லப் படாமைக்கு தெங்குத் தொழிலின் பெரும் பகுதி சிற்றுடைமையாளர் வசமிருந்தமையே காரணமெனலாம்.

உதாரணமாகத் தேயிலைச் செய்கையின் சிறப்பு நிலைக்கு உரப்பாவனை ஒரு பிரதான காரணமாயிருக்க, தெங்குச் செய்கையின் பின்தங்கிய நிலைக்குத் தகுந்தளவான உரம் பயன்படுத்தப்படாமையும் பிரதான காரணங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

இத்தகைய பரந்த வேறுபாட்டுக்கு முதலாளித்துவ சக்திகளில் காணப்பட்ட ஏற்றத்தாழ்வே காரணமாகும். தேயிலையின் தரத்தை உயர்த்த முதலாளித்துவ சக்திகளால் கட்டுப்படுத்தப்பட்ட காரணத்தால் நன்கு பேணப்பட தெங்கு உற்பத்தி அவ்வாறான வாய்ப்பைப் பெற்றிராத காரணத்தால் நலிவடையலாயிற்று.

இறப்பர் செய்கையிலும் ஓரளவுக்குச் சமமாகப் பரந்திருந்த பெரிய தோட்டங்களுக்கும் சிறிய தோட்டங்களுக்குமிடையே இவ்வாறான தர ரீதியான வேறுபாடுகள் காணப்படவே செய்தன.

தனியார் முயற்சியை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவப் பொருளாதாரத்தில் தனிப்பட்ட மட்டத்தில் ஒவ்வொருவரும் எதிர்நோக்கும் வாய்ப்புகளுக்கேற்ற ஏற்படக்கூடிய ஏற்றத்தாழ்வுகள் பெருமளவுக்கு இயல்பானவையே. ஆனால், முதலாளித்துவ நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய அன்றைய அரசாங்கம் தனிப்பட்ட முயற்சியாளர் ஈடுபட்ட பொருளாதார நடவடிக்கையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்காமை முயற்சியாளரின் தூண்டுதலைக் குறைத்து விடாத வகையில் அவர்களிடையே உண்டாகக்கூடிய முரண்பாடுகளை அகற்றி உற்பத்திமட்ட உயர்வைப் பேணுவதற்கு முற்பட்டிருக்கலாம் என்பது கண்கூடு.

இருந்தபோதிலும் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மற்றும் சுகாதார நிலைமைகளில் எந்தளவு கவனம் செலுத்தினார்கள் என்பதும் கேள்விக் குறியே!

அன்றைய நாட்களில் தோட்டங்களுக்கும் சிற்றுடைமைகளுக்குமிடையே எதுவித பேதமும் காணப்படவில்லை. எனவே, சிற்றுடைமையாளர் உழைத்துக்கொண்ட இலாப அளவை விட தோட்ட முதலாளிமார் அதிக இலாபத்தையே உழைத்துக்கொண்டனர். இருந்தபோதிலும் தேயிலையின் அளவுக்கு இறப்பர் செய்கையில் சிற்றுடைமையாளர் தனித்துவம் வாய்ந்து விளங்கவில்லையா என்று கேட்டால் இல்லை என்றே கூறவேண்டும்.

ஏற்றுமதி பயிர்ச்செய்கை என்ற ரீதியில் இறப்பர் கைத்தொழிலிலும் சுதந்திரத்துக்கு முன்பே அதன் குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டபோதும் அவற்றைச் சீர்திருத்தும் முயற்சிகள் காலதாமதமாக ஆரம்பிக்கப்பட்டமை ஒருபுறமிருக்க, அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைச் சர்வதேச மட்டத்தில் ஒப்பிடுவோமாயின், ஏனைய சில இறப்பர் உற்பத்தி நாடுகளில் கையாளப்பட்டவற்றை விட அவை தரத்தில் குறைவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆகவே, இறப்பர் உற்பத்தியைப் பொறுத்தவரை தகுந்தளவான முன் யோசனையுடன் அது எடுத்துச் செல்லப்படாத ஒரு நிலையையே காட்டுகிறது. முதலாளி வர்க்கமும் அதனைச் சார்ந்த அரசாங்கமும் தகுந்தளவு ஈடுபாடு காட்டாத ஒரு தன்மையைப் புலப்படுத்துகின்றது என்பதே உண்மை.

ஏற்றுமதி உற்பத்திக்காக அன்று இலங்கை வந்த மக்களின் சந்ததியான மலையக மக்கள் இன்றும் குறை அபிவிருத்தியோடு அதே தோட்டங்களில் இத்தனை காலமாக வாழ்ந்துகொண்டு இருக்கும் அதேவேளை, பிரித்தானிய காலனிகளுக்கு அதே காலகட்டத்தில் இந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்து மலேசியா, மொரீசியஸ், பிஜி தீவுகள் போன்ற நாடுகளுக்குச் சென்றவர்கள் தற்போது அத்துறைகளில் அகன்று வேறு தொழில்களுக்குச் சென்றுவிட்டனர். ஆனால், இலங்கையில் அந்நிலை இன்னும் மாறவில்லை என்பது கவலைக்குரியதே!

மாற்றம் காணுமா மலையகம்?

# அரசாங்கத்தின் வாக்குறுதிகளும் தகிக்கப்படும் மக்கள் பொறுமையும்

இம்தியாஸ் ஹுசன்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவும் அவரது தேசிய மக்கள் சக்தியும் பதவியேற்றதிலிருந்து அவரது பிரசாரத்தின்போது வாக்குறுதியளிக்கப்பட்ட மிகவும் எதிர்பார்க்கப்பட்ட அரசியல் சீர்திருத்தங்கள் தொடர்பாக இலங்கை ஒரு விசித்திரமான மௌனத்தைக் கண்டுள்ளது. தீர்க்கமான நடவடிக்கை மற்றும் உறுதியான கொள்கைகளுக்குப் பதிலாக அரசாங்கம் தெளிவற்ற சொல்லாட்சி மற்றும் கேள்விக்குரிய சர்வதேச ஈடுபாடுகளால் பொதுமக்களை மூழ்கடித்து வருகிறது. இந்தத் தெளிவின்மை தேசம் எதிர்கொள்ளும் அழுத்தமான பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசாங்கத்தின் திறனைப் பற்றிய குறிப்பிடத்தக்க கவலைகளை எழுப்புகிறது.



ஊழலை ஒழித்தல், ஜனநாயகத்தை வலுப்படுத்துதல் மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றை இலக்காகக்கொண்ட புதிய அரசியல் சீர்திருத்தங்களை அமுல்படுத்துவதற்கான உறுதிமொழி ஜனாதிபதி அநுரவின் பிரசாரத்தின் அடிப்படைகளில் ஒன்றாகும். இருப்பினும், அவர் ஜனாதிபதியாகி பல மாதங்களாகியும் இந்த வாக்குறுதிகள் சொல்லாட்சிக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இந்தச் சீர்திருத்தங்களின் தன்மை மற்றும் நோக்கத்தை விவரிக்கும் ஒரு விரிவான சாலை வரைபடத்தை நிர்வாகம் இன்னும் வெளியிடவில்லை.



வெளிப்படைத்தன்மை இல்லாதது நம்பிக்கையை குறைமதிப்புக்கு உட்படுத்துவது மட்டுமல்லாமல், இந்தச் சீர்திருத்தங்கள் ஒருபோதும் செயற்படாது என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்துவதால், பொதுமக்கள் அமைதியற்றவர்களாகி வருகின்றனர். இலங்கை தனது நிறுவனங்களை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் பொதுமக்களின் நம்பிக்கையை மீட்டெடுப்பதற்கும் முக்கியமான சீர்திருத்தங்களுக்காக காலவரையின்றி காத்திருக்க முடியாது.

ஊழலையும் திறமையின்மையையும் ஒழிப்பதற்கான ஒரு புரட்சிகர முன்முயற்சியாகக் கூறப்படும் 'தூய்மையான இலங்கை' திட்டம் ஒரு முழக்கத்தை விட சற்று அதிகமாகவே தோன்றுகிறது. அரசாங்கத்தின் அணுகுமுறை செயலில் இருப்பதை விட எதிர்வினையாக விமர்சிக்கப்படுகிறது. சில தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளை விளம்பரப்படுத்தும்போது, நிர்வாகம் இன்னும் ஊழலை செயற்படுத்தும் முறையான பிரச்சினைகளைத் தீர்க்கவில்லை. உதாரணமாக, கொள்முதல் முறைகளை மாற்றியமைக்க, நீதித்துறை சுதந்திரத்தை மேம்படுத்த அல்லது ஊழல் எதிர்ப்பு முகமைகளை வலுப்படுத்த தெளிவான திட்டம் எதுவும் இல்லையென ஊகிக்கக்கூடியதாகவுள்ளது. மாறாக, நாம் காண்பது ஒத்திசைவு மற்றும் நீண்டகால தாக்கம் இல்லாத சிதறிய செயல்களின் தொடராகும்.

ஜனாதிபதி அநுரவின் சமீபத்திய இந்திய விஜயங்கள் மற்றும் அவரது திட்டமிட்ட சீனப் பயணம் ஆகியவை நிர்வாகத்தின் வெளியுறவுக் கொள்கை முன்னுரிமைகள் பற்றிய விவாதங்களைத் தூண்டியுள்ளன. இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் புவிசார் அரசியல் ஸ்திரத்தன்மைக்கு இராஜதந்திர ஈடுபாடுகள் முக்கியமானவை என்றாலும், இந்த விஜயங்கள் அவற்றின் உறுதியான விளைவுகள் பற்றிய கேள்விகளை எழுப்புகின்றன.

இந்தியாவில் கலந்துரையாடல்கள், பிராந்திய ஒத்துழைப்பை மையமாகக் கொண்டதாகத் தோன்றியது. இருப்பினும், குறிப்பிடத்தக்க வர்த்தக ஒப்பந்தங்கள் அல்லது நிதியுதவி பற்றிய உறுதியான அறிவிப்பு எதுவும் இல்லை. இதேபோல், வரவிருக்கும் சீனாவுக்கான பயணம் கடன்கள் அல்லது முதலீட்டைப் பெறுவதற்கான முயற்சியாக கருதப்படுகிறது. எவ்வாறாயினும், தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்குப் பங்களித்த அதே கடன் பொறிகளில் இலங்கையும் விழும் அபாயம் இருப்பதாக விமர்சகர்கள் வாதிடுகின்றனர்.

இலங்கையின் வெளிநாட்டு இருப்புகள் குறைந்து வருகின்றன. பணவீக்கம் அதிகரித்து வருகிறது. சராசரி குடிமகனுக்கு வாழ்க்கைச் செலவு தாங்க முடியாததாக உள்ளது. ஆனாலும், இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான விரிவான உத்தியை அரசாங்கம் முன்வைக்கவில்லை. தனது பிரசாரத்தின்போது, சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) கடன்கள் மற்றும் பிற வெளிநாட்டுக் கடன்களில் தங்கியிருந்ததற்கு முந்தைய நிர்வாகங்களை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க காரசாரமாக தொடர்ந்து விமர்சித்து வந்தார். எனினும், அவரது அரசாங்கம் மாற்றுத் தீர்வுகளை வழங்காமல் முன்னாள் ஜனாதிபதி ரணிலின் தொங்கு பாலத்தில் பயணம் தொடர்வது தெரிகிறது. இந்த முரண்பாடு பொதுமக்களின் நம்பிக்கையை மேலும் சிதைக்கிறது. மேலும், உள்ளூர்த் தொழில்களை மேம்படுத்துதல் அல்லது பொருளாதாரத்தைப் பல்வகைப்படுத்துதல் போன்றவற்றில் சிறிய முன்னேற்றம் காணப்படுவதாக அரசாங்கம் அறிவிக்கிறது. மிகவும் தேவையான வரிச் சீர்திருத்தங்கள், ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் உத்திகள் மற்றும் அந்நிய நேரடி முதலீட்டை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகள் (FDI) ஆகியவை அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் தெளிவாக இல்லை. பொறுமையை இழக்கும் பொதுமக்கள் அரசாங்கத்தின் வாக்குறுதிகளுக்கும் அதன் செயற்றிறனுக்குமிடையே உள்ள இடைவெளி பெருகிய முறையில் வெளிப்படுவதால், பொதுமக்களின் விரக்தி அதிகரித்து வருகிறது. மாற்றத்துக்கு வாக்களித்த குடிமக்கள், இப்போது தேசிய மக்கள் சக்தி அதன் வாக்குறுதிகளை நிறைவேற்றும் திறன் கொண்டதா என்று கேள்வி எழுப்புகின்றனர்.

எதிர்க்கட்சிகள், வணிகத் தலைவர்கள் மற்றும் சிவில் சமூகம் உள்ளிட்ட முக்கிய பங்குதாரர்களுடன் ஈடுபாடு இல்லாதது அரசாங்கத்தை மேலும் தனிமைப்படுத்துகிறது மற்றும் அர்த்தமுள்ள சீர்திருத்தங்களைச் செயற்படுத்துவதற்கான அதன் திறனைக் கட்டுப்படுத்துகிறது. அரசு ஊழியர்கள், தனியார் துறை ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் உட்பட பல்வேறு துறைகள் மத்தியில் பரவலான அதிருப்தியை மக்கள் வெளியிட்டு வருகின்றனர். இந்தக் குறைகளை நிவர்த்திசெய்ய நிர்வாகம் தவறியதால் நாட்டை மேலும் சீர்குலைக்கும் அபாயம் உள்ளது. முன்னோக்கிச் செல்லும் வழி பொதுமக்களின் நம்பிக்கையை மீளப் பெறுவதற்கும் இலங்கையின் தற்போதைய நெருக்கடியிலிருந்து வெளியேறுவதற்கும் ஜனாதிபதி அநுரவும் அவரது அரசாங்கமும் உடனடி மற்றும் தீர்க்கமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.



**சீர்திருத்தங்களில் வெளிப்படைத்தன்மை:** அரசாங்கம் தனது அரசியல் சீர்திருத்த நிகழ்ச்சி நிரலை வெளியிட வேண்டும் மற்றும் முடிவெடுக்கும் செயற்பாட்டில் பொதுமக்களை ஈடுபடுத்த வேண்டும். பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த தெளிவான காலக்கெடுவும் அளவிடக்கூடிய இலக்குகளும் அவசியம்.

**விரிவான பொருளாதாரத் திட்டம்:** வரிச் சீர்திருத்தங்கள், உள்ளூர்த் தொழில்களுக்கான ஊக்கத்தொகை, ஏற்றுமதி ஊக்குவிப்பு மற்றும் அந்நிய நேரடி முதலீட்டை ஈர்க்கும் நடவடிக்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய விரிவான பொருளாதார மீட்புத் திட்டத்தை நிர்வாகம் முன்வைக்க வேண்டும். குறைந்த வருமானம் பெறும் மக்களுக்குச் சுமையை ஏற்படுத்தாமல் நிதிப் பற்றாக்குறையைக் குறைப்பதற்கும் முன்னுரிமையளிக்க வேண்டும்.

**வலுப்படுத்தும் நிறுவனங்கள்:** சீர்திருத்தங்கள் நீண்டகால ஸ்திரத்தன்மை மற்றும் செயற்றிறனை உறுதிப்படுத்த நீதித்துறை, ஊழல் எதிர்ப்பு அமைப்புகள் மற்றும் பொது நிர்வாகம் போன்ற நிறுவனங்களை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும்.

**பங்குதாரர்களை ஈடுபடுத்துதல்:** அனைத்து இலங்கையர்களின் தேவைகளை உள்ளடக்கிய கொள்கைகளை உருவாக்குவதற்கு அரசாங்கம் எதிர்க்கட்சிகள், தனியார் துறைத் தலைவர்கள் மற்றும் சிவில் சமூகத்துடன் ஒத்துழைக்க வேண்டும்.

**வெளிநாட்டு உறவுகளை சமநிலைப்படுத்துதல்:** இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகளுடன் ஒன்றிணைந்து செயற்படும்போது, இலங்கை தனது இறையாண்மையை சமரசம் செய்யாமல் அல்லது அதன் கடன் சுமையை அதிகரிக்காமல் தேசத்துக்கு நன்மை பயக்கும் ஒப்பந்தங்களுக்கு முன்னுரிமையளிக்க வேண்டும்.

ஜனாதிபதி அநுரவின் அரசாங்கம் ஒரு முக்கியமான கட்டத்தில் தன்னைக் காண்கிறது. அவரை ஆட்சிக்குக் கொண்டுவந்த அரசியல் சீர்திருத்தம் மற்றும் பொருளாதார மீட்பு வாக்குறுதிகள் இப்போது அவரது நிர்வாகத்தின் நம்பகத்தன்மை மற்றும் திறமையின் சோதனைகளாக நிற்கின்றன. வெற்றுப் பேச்சுகளுக்கான காலம் கடந்துவிட்டது. இலங்கை தனது பொருளாதார மற்றும் அரசியல் சவால்களுக்குத் தீர்க்கமான தலைமைத்துவம், வெளிப்படையான நிர்வாகம் மற்றும் உறுதியான தீர்வுகளைக் கோருகிறது. தேசிய மக்கள் சக்தி வழங்கத் தவறினால், பொதுமக்களின் ஏமாற்றம் தற்போதைய நிர்வாகத்தை குறைமதிப்புக்கு உட்படுத்துவது மட்டுமல்லாமல், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் மற்றும் மாகாண சபைத் தேர்தலிலும் மக்கள் தங்களது அதிருப்தியை வெளிப்படுத்துவார்கள். அத்துடன், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காவால் கடந்த இரு தேர்தல்கள் காலத்தில் நிலைநிறுத்துவதாக உறுதியளித்த ஜனநாயகம் மற்றும் பொறுப்புக்கூறல் கொள்கைகளையும் பாதிக்கலாம். கடிகாரம் ஓடுகிறது, மக்களின் பொறுமை மெலிந்து வருகிறது.

## பேராசை... (13ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவரது மனைவி பாத்திமா பர்ஸானா மார்கார் ஆகியோர் இந்தியா, திருச்சியிலிருந்து திருப்பியனுப்பப்பட்ட நிலையில் 26ஆம் திகதியன்று இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டனர். கொழும்பு-05இல் வசித்தவர்களான 49 வயது ஷிஹாபும் அவரது 43 வயது மனைவியும் மற்றும் அவர்களது 14 வயது மகனுமே இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்பட்டிருந்தனர்.

நாட்டில் பல நீதிமன்றங்களில் இவர்களுக்கு எதிராக பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டு அவை இவர்களின் வருகைக்காக வழிமேல் விழிவைத்து காத்திருந்த நிலையில், கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் விசாரணைகள் நடத்தப்பட்ட பின்னர் இவர்களை கைது செய்ய உத்தரவிட்ட நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்படுவார்களென நம்பப்படுகிறது. நாட்டிலிருந்து சட்டவிரோதமாகத் தப்பியோடி இந்தியாவில் வாழ்ந்த இந்தத் தம்பதிக்கு எதிராக நிதி மோசடி முறைப்பாடு இருப்பதால், அவர்களை அங்கிருந்து நாட்டுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதனை அறிந்த சிஹாப், தமிழக அரசுக்கு மனுவொன்றை அனுப்பி தங்களால் இலங்கைக்கு மீண்டும் செல்ல முடியாத காரணங்களை அந்த மனுவில் அவர் பட்டியலிட்டும் அவரின் மனு நிராகரிக்கப்பட்டு கடந்த டிசம்பர் 26ஆம் திகதி இந்தியாவிலிருந்து இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டார். இவர்களை அனுப்புமாறு கோரி கடவுச்சீட்டு மற்றும் விமானப் பயணச்சீட்டு என்பவற்றை இலங்கை தூதரகம் அனுப்பியதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்தன.

அதேவேளை, இந்தியாவின் வெளிவிவகார அமைச்சு மற்றும் தமிழ்நாடு அரசு ஆகியவற்றின் உத்தரவுடன் உரிய நடைமுறைகளைப் பின்பற்றி இவர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டதாக தமிழ்நாட்டு அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். ஆனாலும் தமிழ்நாடு அயலக தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் பதிலளித்துள்ளார். அதில், ''முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் விருப்பத்தின்படியே இலங்கை செல்ல வழிவகை செய்யப்படுகிறது'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

"ஆணையர் இவ்வாறு கூறினாலும் சட்டவிரோதமாக ஷிஹாப் தம்பதியை இலங்கைக்கு அனுப்பியுள்ளனர். இலங்கை செல்வதற்கு அவர்கள் விருப்பப்படவில்லை" என்ற குற்றச்சாட்டை பாத்திமாவின் வழக்கறிஞர் முன்வைத்துள்ளார். எப்படியோ, நாடு கடத்தப்பட்டுள்ள இவர்களிடம் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வைப்பாளர்களின் பணத்துக்கு என்ன நடந்தது என்ற விடயம் வெளிக்கொணரப்பட வேண்டும். அதேவேளை, பாதிக்கப்பட்ட வைப்பாளர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்ற குரல்கள் இவர்களின் நிலையறிந்தவர்களிடமிருந்து எழுந்து கொண்டிருக்கிறது.

இலங்கையில் அத்தம்பதிக்கு எதிராக நிதி மோசடி முறைப்பாடு இருப்பதால், அவர்களை தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்த விவகாரத்தில் தங்களை வலுக்கட்டாயமாக இலங்கைக்கு அனுப்புவதாக இலங்கைக்குப் புறப்படுவதற்கு முன்னர் இந்திய ஊடகவியலாளர்களிடம் டிசம்பர் 25 அன்று பேசிய பாத்திமா பர்ஸானா மார்க்கர் தெரிவித்திருந்தார்.

மேலும், ஊடகங்களிடம் தங்கள் மீது 100 கோடி ரூபாவுக்கும் அதிகமாக மோசடி செய்ததாக வழக்குப் பதிவாகியுள்ளதாகக் கூறிய அவர், "கொழும்பில் எங்களுக்கு இருந்த ஒரே வீட்டையும் சிலர் அபகரித்துவிட்டனர். இது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளேன்" என்று தெரிவித்துள்ளார். திருச்சி முகாமில் பாத்திமாவை சந்தித்த




வருவாய் ஆய்வாளர் ஒருவர், சில நாட்களில் அவர்களை இலங்கைக்கு அனுப்பவுள்ளதாகத் தகவல் தெரிவித்ததாகவும் அதற்கான உத்தரவை அவர் காட்டியபோது, ''எங்களால் இலங்கைக்குச் செல்ல முடியாது. அங்கே எங்களுக்குப் பாதுகாப்பில்லை என்று தெரிவித்தும் அவர் எனது குறைகளைக் கேட்கவில்லை" என்கிறார் பாத்திமா.

"இந்த வழக்கு முடிவுக்கு வரவேண்டும் என்பது இலங்கை அரசின் நோக்கமாக உள்ளது. வங்கிக் கணக்கு உட்பட அனைத்து ஆவணங்களையும் அரசு ஆய்வு செய்யட்டும். எங்கள் மூலமாக பணப் பரிவர்த்தனை நடந்தது தொடர்பாக எந்த ஆதாரங்களும் இல்லை" எனக் கூறுகிறார் பாத்திமா பர்ஸானா மாக்கார்.

''இந்தியா - இலங்கைக்கிடையே கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தம் உள்ளது. இலங்கை அரசுக்கு இவர்கள் தேவை என்பதை நீதிமன்றத்தில் நிரூபித்தால் மட்டுமே இவர்களை அனுப்ப முடியும். ஆனால் அப்படி எந்த முயற்சிகளும் நடக்கவில்லை'' எனக் கூறும் சட்டத்தரணி புகழேந்தி, ''நிதி மோசடி முறைப்பாடு என்பதால் வெளிநாடுகளில் இவர்களுக்கு அடைக்கலம் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை. அவர்களுக்கு விருப்பம் இல்லாதபோது, இலங்கைக்கு அனுப்புவது சரியானதல்ல" என்றார்.

குற்ற விசாரணைக்காக ஒருவரை தங்கள் நாட்டுக்கு அனுப்பவேண்டுமென்றால், அவர் ஏன் தங்கள் நாட்டுக்குத் தேவைப்படுகிறார் என்பதற்கான ஆவணங்களுடன் அந்நாட்டு வெளியுறவுத் துறை இந்திய அரசை அணுக வேண்டும் என்றும் அதை அடிப்படையாக வைத்து இங்குள்ள நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, அதற்கான உத்தரவைப் பெற வேண்டும் என்றும் சட்டத்தரணி புகழேந்தி குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், ஷிஹாப் தம்பதி வழக்கில் இவை எதுவும் பின்பற்றப்படவில்லை என்றும் இலங்கை அரசு கேட்டுக்கொண்டதால் சட்டவிரோதமாக அவர்களை அங்கு அனுப்புவதாகவும் புகழேந்தி தெரிவித்தார். ஆனால், பாத்திமாவின் குற்றச்சாட்டுகளை திருச்சி சிறப்பு முகாமின் சிறப்பு துணை ஆட்சியர் நஜிமுன்னிஷா முற்றிலும் மறுக்கிறார். ஊடகங்களுக்கு பேசிய அவர், "தமிழ்நாட்டுக்குள் அவர்கள் சட்டவிரோதமாக நுழைந்தது தொடர்பான வழக்கு முடிவுக்கு வந்துவிட்டது. புழல் சிறையிலிருந்து அவர்கள் வெளியில் வந்தவுடன் சிறப்பு முகாமில் வைத்திருப்பது வழக்கம். தற்போது தமிழக அரசிடமிருந்து உத்தரவு வந்ததால் அதன் அடிப்படையில் அவர்களுக்கு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என்கிறார்.

தம்பதியை அனுப்புமாறு கோரி கடவுச்சீட்டு மற்றும் பயண டிக்கெட்டை இலங்கைத் தூதரகம் அனுப்பியுள்ளதாகக் கூறும் நஜிமுன்னிஷா, இலங்கை அரசு கேட்டதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இப்படியாக பல்வேறு கருத்தாடல்களுக்கு மத்தியில் இலங்கைக்கு வந்துள்ள ஷிஹாப் தம்பதி தங்களை நிரபராதிகளாகவே காட்ட எத்தனிக்கிறார்கள். நிதி மோசடி செய்து கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்ட தம்பதியினர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். பின்னர், மேலதிக விசாரணைகளுக்காக சந்தேக நபர்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் நிதிக் குற்றப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். விசாரணையின்போது, சம்பந்தப்பட்ட நிதி நிறுவனம் மத்திய வங்கியில் பதிவுசெய்யப்படவில்லை என்பது தெரிய வந்துள்ளது. தொழிலில் நஷ்டம் ஏற்பட்டதால், ஈவுத் தொகையை செலுத்தாமல், நாட்டைவிட்டுத் தப்பிச் சென்றதாக அவர்கள் கூறியுள்ளனர்.

இருந்தபோதிலும் தற்போது சட்டத்திடம் இந்த மோசடிக்காரர்கள் மாட்டிக்கொண்டுள்ளார்கள். சட்டம் தன் கடமையைச் சிறப்பாகச் செய்யும் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் இருக்கிறது. இந்த நிதியை எப்படி மோசடிக்காரர்களிடமிருந்து மீளப்பெறுவது என்பதும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் வைப்பு நிதி கிடைக்குமா என்பதும்தான் இப்போதிருக்கும் பலத்த சந்தேகம்.

எது எப்படியோ பேராசை பெரு நஷ்டம் என்பது மட்டும் மறைக்க முடியாத உண்மை.

# அகிலனின் இலங்கை வாசகர்களுக்கு...!

அகிலன் என்ற நான்கு எழுத்துப் பெயர், தனக்கு மட்டுமல்லாது தமிழ் மண்ணுக்கும் பெருமை சேர்த்த ஒரு ஆளுமை என்று சொன்னால் மிகையாகாது. பொதுவாக எழுத்தாளர்கள் ஏதாவது ஒரு குறிப்பிட்ட வகை படைப்பில்தான் பயணிப்பார்கள். ஆனால் அகிலன், சமூக நாவல், சரித்திர நாவல், சிறுகதை, கட்டுரை, பயணக் கட்டுரை, சிறுவர் இலக்கியம் மற்றும் மொழிபெயர்ப்பு என பன்முக எழுத்தாளராக மிளிர்ந்துள்ளார்.



"நான் எழுதிய முதற் கதையும் சரி இனி நான் எழுதப்போகும் கடைசிக் கதையும் சரி உண்மைகளை அடிப்படையாகக் கொண்டவைகளே. கற்பனைப் பூச்சில் என் கலை உணர்ச்சியைக் காணலாம். ஆனால், கருத்தெல்லாம் நான் காணும் உண்மைக்கே. ஒருபுறம் அழகும் வனப்பும் நிறைந்த இயற்கை உலகம். மற்றொருபுறம் வேற்றுமையும் வெறுப்பும் நிறைந்த மனிதர்கள். இதையே என் கதை கருத்தென்று சொல்லலாம்" - என்று ஒரு சம்பவத்தை அடிப்படையாகக்கொண்டு குறிக்கோளுடன் எழுதி வாசகர்களின் மனதை ஆண்டவர் அகிலன்.



இவர் 1922ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27ஆம் திகதி தமிழ்நாடு புதுக்கோட்டை மாவட்டம் பெருங்களூருவில் பிறந்தார். இவருடைய இயற்பெயர் பி.வி.அகிலாண்டம். பாடசாலைப் பருவத்திலேயே இந்திய விடுதலைப் போராட்டத்தால் ஈர்க்கப்பட்ட அகிலன் 'சக்தி வாலிபர் சங்கம்' என்ற அமைப்பை உருவாக்கி கள்ளுக்கடை மறியல், அந்நிய துணி புறக்கணிப்பு போன்ற போராட்டங்களில் ஈடுபட்டார்.

1938ஆம் ஆண்டு தான் படித்து வந்த பாடசாலையின் காலாண்டு சஞ்சிக்கைக்காக 'அவன் ஏழை' என்கிற கதையை எழுதத் தொடங்கிய அகிலன், இலக்கியமே மனிதனை மேம்படுத்தும் என்ற நோக்கத்துடன் தன் காலத்தில் 20 நாவல்கள், 200 சிறுகதைகள், கட்டுரைகள், நாடகம், சிறுவர் கதைகள், மொழிபெயர்ப்புகளைப் படைத்துள்ளார். சமூக அக்கறையும் உயிர்த்துடிப்பான கதாபாத்திரங்களும் எளிய நடையும் இவரின் படைப்பின் சிறப்பம்சங்களாகும்.

அகிலனின் பாவை விளக்கு, வாழ்வு எங்கே, கயல்விழி போன்ற நாவல்கள் திரைப்படங்களாக வெளியாகின. பாவை விளக்கு வாழ்வு எங்கே? நாவல் 'குலமகள் ராதை' என்ற பெயரில் சிவாஜி கணேசனும் கயல்விழி நாவல் 'மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்' என்ற பெயரில் எம்.ஜி.ஆரும் நடிக்க திரைப்படமாக்கப்பட்டது. இவரின் நெஞ்சின் அலைகள் போன்ற சில நாவல்கள் தொலைக்காட்சி தொடர்களாக்கப்பட்டன.

1975ஆம் ஆண்டு தனது சித்திரப்பாவை நாவலுக்காக இந்தியாவின் எழுத்தாளர்களுக்கு அளிக்கப்படும் மிக உயரிய அங்கீகாரமான ஞானபீட விருதைப் பெற்றார். தமிழுக்காக முதல் இவ்விருதைப் பெற்றவர் அகிலன் என்பது சிறப்புக்குரியதாகும். மேலும், தனது மற்றைய படைப்புகளுக்காக கலைமகள் நாராயணசாமி ஐயர் விருது, சாகித்ய அகாடமி விருது, தமிழக அரசின் சிறுவர் இலக்கிய விருது, தமிழ் வளர்ச்சித் துறை விருது, ராஜா சேர் அண்ணாமலை செட்டியார் விருது போன்ற பல விருதுகளைப் பெற்று தமிழ் இலக்கியத்துக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

தனது இறுதி நாவலான 'வானமா பூமியா' எனும் நாவலை எழுதத் தொடங்கிய அகிலன், அந்நாவல் முடிவடைவதற்குள் 1988ஆம் ஆண்டு தனது 66ஆவது வயதில் காலமானார். அந்நாவலை அவரது மகன் அகிலன் கண்ணன் எழுதி முடித்தார். தனது 'வேங்கையின் மைந்தன்' நாவலுக்காக தமிழ்நாட்டு வரலாறு மட்டுமல்ல, இலங்கை வரலாறும் தேவை என்று கருதிய அகிலன் 1960ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்தார். அத்துடன், கொழும்பில் ஏற்பாடுசெய்திருந்த விழா ஒன்றிலும் பங்குகொண்டு சிறப்பித்தார். அவருடைய பயண ஏற்பாடுகளை உடனிருந்து கவனித்துக்கொண்டவர் இலங்கை தமிழ் எழுத்தாளர் செ.கணேசலிங்கன் ஆவார்.

கதிர்காமம், திருகோணமலை, கண்டி, பதுளை மற்றும் அநுராதபுரம் போன்ற இலங்கையில் பல வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களுக்குப் பயணம் செய்த அகிலன் இலங்கையின் பயண அனுபவத்தைத் தனது 'எழுத்தும் வாழ்வும்' என்ற கட்டுரை நூலில் விவரித்துள்ளார்.

இவரது படைப்புகள் பல இந்திய மொழிகளிலும் ஆங்கிலம், ரஷ்ய, ஜேர்மனி, சீனம் போன்ற பல மொழிகளிலும் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. தற்போது சென்னையில் வசித்துவரும் 'தாகம்' பதிப்பகத்தின் உரிமையாளரான அகிலனின் மகன் அகிலன் கண்ணன், வாசகர்களுக்கு அகிலன் எழுதிய கடிதங்களைச் சேகரித்து புத்தகமாக வெளியிடும் முயற்சியில் வாசகர்களிடம் அகிலனின் கடிதங்கள் பற்றிய தகவலை அறிய விரும்புகிறார். இளம் எழுத்தாளர்களுக்கும் இளம் வாசகர்களுக்கும் புத்தகமாக வெளிவரவிருக்கும் அக்கடிதங்கள் ஒரு புதுவித அனுபவத்தையும் பல தகவல்களை அறிய உதவியாகவும் இருக்கும். இலங்கையிலுள்ள வாசகர்களிடம் கடிதங்கள் இருப்பின் akilankannanpersonal@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**சாந்தி ஜோ**

## குறுக்கெழுத்துப் போட்டி - 51

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | ■ | 3 | | | |
| | ■ | ■ | | ■ | 4 | | ■ | 5 | ■ |
| | 6 | 7 | | | ■ | ■ | | 8 | ■ |
| | ■ | 9 | | | ■ | | 10 | ■ | |
| | 11 | ■ | ■ | ■ | 12 | ■ | ■ | | 13 |
| ■ | 14 | | ■ | 15 | | | | ■ | |
| ■ | ■ | | ■ | | 16 | | ■ | ■ | |
| | | 17 | ■ | | ■ | ■ | 18 | | |
| 19 | ■ | ■ | ■ | ■ | 20 | ■ | | ■ | ■ |
| | | 21 | ■ | 22 | | ■ | | | 23 |

**இடமிருந்து வலம்**

01. ஆடித்திங்களில் அறுவடையாகும் நெல்.
03. பரீட்சையில் தேறுதல்.
04. கடதாசி ஒத்த சொல்.
09. பிரமை கொள் (குழம்பியுள்ளது).
14. இறந்தோர்க்குச் செய்யும் சிரார்த்த தினம்.
15. நிறைவு ஒத்த சொல் (குழம்பியுள்ளது).
16. சௌபாக்கியம் (குழம்பியுள்ளது).
18. தாமரை.
20. இரு பக்கங்களிலும் மரங்கள் வரிசையாகவுள்ள பாதை.
22. சேஷ்டை.

**கீழிருந்து மேல்**

05. மச்சாளைக் குறிக்கும் (குழம்பியுள்ளது).
10. இளஞ் சந்திரன்.
13. பொன்னாங்காணி.
15. இறந்த காலம்.
17. இணைதலைக் குறிக்கும்.
19. கதவு (குழம்பியுள்ளது).

**மேலிருந்து கீழ்**

01. காலந்தாழ்த்தல்.
02. மாதர்.
03. ஒரு ராசிக்கான அடையாளம்.
07. புகலிடம்.
11. தொழுதல் செய்.
12. மெல்ல ஒதுக்கியெடு என்பர்.
15. இயற்கையின் ஐம்பூதங்கள்.
18. குடம்போன்ற ஓர் இசைக்கருவி.

**வலமிருந்து இடம்**

06. ஐயப்பாட்டைக் குறிக்கும் (குழம்பியுள்ளது).
08. அணையிடுதல்.
10. பின்பக்கம்.
13. நீர் ஊற்று.
17. மாட்டுத்தொழுவம்.
21. பாத்திரம்.
23. கலங்கா நிலை.

## குறுக்கெழுத்துப் போட்டி - 50க்கான விடைகள்


| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 கூ | ட | ல | ர் | ■ | 2 பு | த் | 3 தி | சா | லி |
| ர | ■ | ■ | வ | ■ | கை | ■ | டு | ■ | 4 நீ |
| 5 டா | ம் | 6 பீ | 7 க | ம் | ■ | 8 ப | க் | 9 தி | ■ |
| ம் | ■ | 10 பூ | ம் | த | ல | ■ | 11 கி | க் | ட |
| ■ | ■ | ட | ■ | ■ | 12 ச | டு | டு | கு | ■ |
| 13 த | டு | மி | ன | ன் | 14 க | ■ | ■ | ■ | டை |
| லை | ■ | ■ | ■ | ■ | ன் | 15 த | த் | ரு | 16 வி |
| க் | ■ | 17 ம | ■ | 18 பி | ■ | ளை | 19 மு | ■ | ■ |
| 20 கீ | ழ் | ப் | ப | டி | வு | ■ | 21 த | ட் | டை |
| டு | ■ | பு | ■ | ல் | ■ | ■ | ம் | ■ | 22 ம |

**மூளைக்கு வேலை பகுதியில் தரப்படுகின்ற ஆக்கங்களுக்கான சரியான விடைகளை thamilanweekly@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதி அனுப்பலாம்.**


# ஆச்சரியப்பட வைக்கும் நாடுகள்



**உலகிலுள்ள நாடுகள் சிலவற்றின் சிறப்பைப் பார்ப்போம். அவற்றை அறிந்தால் ஆச்சரியமாக இருக்கிறது.**



**எகிப்து:** நைல் நதியின் ஆற்றங்கரை நாகரிகம் ஐயாயிரம் ஆண்டுகள் பழைமையானது. கி.மு. 6000ஆம் ஆண்டிலிருந்தே இந்த நாட்டில் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். 1922இல் பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றது. இரண்டு கண்டங்களில் இடம்பெற்றுள்ள அபூர்வ நாடுகளில் ஒன்று. பிரமிட்டுகள், பெரிய ஸ்பிங்கஸ் போன்றவை மூத்த நாகரிகத்தின் நினைவுச் சின்னங்களாக இன்றும் உள்ளன.



**சீனா:** நாகரிகத்தின் தொட்டில்களில் ஒன்று. மஞ்சள் நதிப் படுக்கையையொட்டி கி.மு.3500இல் இருந்தே வாழ்க்கை இருந்துள்ளது. துப்பாக்கித் தூள், காகிதம் கண்டுபிடிப்பு, பட்டுப் பாதை, நீண்ட சுவர் என்பவை காலத்தின் சாதனைகள். 1978இல் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் நாட்டின் வளர்ச்சியை மேலும் உயர்த்தியது. சீன நாட்டின் கட்டடக் கலை பிரபலமானது. இங்கு 59 உலக பாரம்பரியத் தளங்கள் சீனாவின் பழைய நாகரிகத்துக்குச் சான்றாக உள்ளன.

**கிரீஸ்:** 2 இலட்சம் ஆண்டுகளுக்கு முந்தைய மிகப் பழைமையான மனிதர்களின் எச்சங்கள் இங்குள்ளன. இலக்கிய, லியாட், ஒடிஸி. ஹோமரால் கி.மு. ஏழாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. ஒலிவ் மரங்கள் 7000 ஆண்டு வரலாற்றைச் சொல்கின்றன. முதல் உலக ஒலிம்பிக் போட்டி கி.மு. 700இல் நடந்துள்ளது. பல நகரங்களில் அழிவுச் சின்னங்களை இன்றும் காணலாம்.

**எதியோப்பியா:** 3.2 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே இங்கு மனிதர்கள் வாழ்ந்துள்ளதற்கு ஆதாரமாக புதை எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதேபோல் 30 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இங்குள்ள பேல் மலைகளில் மக்கள் வாழ்ந்ததற்கு ஆதாரமாக எரிந்த அடுப்பு, கல் ஆயுதங்கள், மிருகங்களின் எலும்புக் கூடுகள், மனித எலும்புகள் கிடைத்துள்ளன. அடஸ்அபாபாதான் இதன் தலைநகரம்.





**சான் மரினோ:** ஐரோப்பாவில் நாலு பக்கமும் நாடுகளால் சூழப்பட்ட குட்டி நாடு. ரோமானியப் பேரரசிடமிருந்து கி.பி. 301இல் சுதந்திரம் பெற்றது. அன்றிலிருந்து இன்றுவரை தனி நாடு. மரணதண்டனையை உலகில் ஒழித்த முதல் நாடு. பொருளாதாரம் வலுவானது என்பதால் பணக்கார நாடுகளில் ஒன்று.

**ஜப்பான்:** கிழக்காசியாவிலுள்ள ஒரு தீவு.38 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே (கி.மு. 36,000 ஆண்டுகளுக்கு) முன்பே மனிதர்கள் இங்கு வந்து குடியேறியுள்ளனர். இது ஜப்பானின் கற்காலமாகக் கருதப்படுகிறது. கி.மு. 14,500இல் பயன்படுத்தப்பட்ட களிமண் பாத்திரங்கள், கருவிகள் கள ஆய்வில் கிடைத்துள்ளன. ஜப்பானுக்கு பசுபிக் கடற்கரையையொட்டி 14,125 தீவுகள் உள்ளன. 29,751 கி.மீ. கடற்கரையை ஜப்பான் கொண்டுள்ளது. இங்கு நில நடுக்கம், சுனாமி, எரிமலை வெடிப்பு சகஜம். 1923இல் நடைபெற்ற ஒரு நில நடுக்கத்தில் 1.40 இலட்சம் பேர் இறந்தனர். வளர்ச்சி மற்றொரு பக்கம் என்றென்றும் தொடருகிறது.



**ஈரான்:** கி.மு. 4000இலிருந்தே உலகின் மிகப் பழைமையான - தொடர்ச்சியான முக்கிய நாகரிக நாடுகளில் ஒன்றாக உள்ளது. பெர்சியர்கள் உலகின் முதல் வரலாற்று மக்கள் என அழைக்கப்படுகின்றனர்.

கி.மு. 625இலிருந்தே ஒரே தேச நாடாகவும் பேரரசாகவும் இருந்து வருகிறது. அந்தக் காலத்திலேயே இது வடக்கு ஆபிரிக்கா, மத்திய ஆசியாவில் பரவியிருந்தது. கட்டடக் கலை, கலாசாரம் போன்றவற்றில் சிறந்து விளங்கியதால் இன்றும் அங்கு கி.மு. கால கட்டடங்களையும் நினைவுச் சின்னங்களையும் காணலாம்.

**ஏமன் குடியரசு:** அரேபிய தீப கற்பகத்தில் இரண்டாவது பெரிய நாடு. தெற்கு அரேபியாவிலுள இந்த நாட்டின் தலைநகரம் சனா.

பெரும்பாலும் அரபு முஸ்லிம்கள். இருப்பிடம் சார்ந்து 7 ஆயிரம் ஆண்டுகளாக பல நாகரிகங்களுடன் தொடர்புடையதாக உள்ளது. ஏழ்மையான நாடுகளில் ஒன்று. நான்கு யுனெஸ்கோ உலக பாரம்பரியத் தளங்கள் உள்ளன. உலகின் சிறந்த சர்ஃபிங் விளையாட்டுத் தளமாக சொகோட்ரா இங்குள்ளது. நாட்டிலுள்ள தாவரங்களில் 37 சதவீதம் உலகில் வேறெங்கும் கிடையாது. 253 வகையான பவளப் பாறைகள் உள்ளன.

# அதிதி ஷங்கரின் ஆசை



கஞ்சா பூ, கண்ணால செப்பு சிலை உன்னால என ரசிகர்களை கிறங்க வைத்தவர் பிரமாண்ட இயக்குநரான ஷங்கரின் மகள் அதிதி. டாக்டருக்கு படித்துவிட்டு ஆக்டராக வலம் வருபவர். 'நேசிப்பாயா' படம் பொங்கலுக்கு வெளியான நிலையில் அவர் அளித்த பேட்டியில்,

**★ நேசிப்பாயாவில் என்ன ஸ்பெஷல்?**

விஷ்ணுவர்தன் முதல் முறையாக படம் முழுக்க ஒரு காதல் கதையை இயக்கியுள்ளார். இந்தக் கால காதலர்களின் உறவு, எதிர்பார்ப்பு, பிரிவு எல்லாம் கலந்ததுதான் 'நேசிப்பாயா'. எனக்கு முதல் காதல் படம். அப்பாவின் கேம் கேஞ்சர், என் படம் ரிலீஸ் என இந்தாண்டு எனக்கு டபுள் ஸ்பெஷல்.

**★ புதுமுக நடிகருடன் நடித்தது ஏன்?**

நான் புதுமுகமாக வந்தப்போ கார்த்தி, சிவகார்த்திகேயன் ஓகே சொன்னாங்க. அதுமாதிரிதான். விஷ்ணுவர்தன் படம் என்பதால் எதுவும் கேக்கல. ஆகாஷுக்கு இது முதல் படம் போலவே தெரியாது; நீங்களே ஆச்சரியப்படுவீங்க.

**★ ஷங்கரின் மகள் என்ற அடையாளம் உதவுதா?**

ஷங்கரின் மகள் என்பது பெருமை. அவர் பெயரை வைத்து வாய்ப்புப் பெறவில்லை. நானே ஆடிஷன் சென்று வாய்ப்பு பெறுகிறேன். சினிமாவுக்கு வந்த பின் அப்பா மேல் மரியாதை கூடியிருக்கு.

**★ டாக்டர்... ஏன்டா சினிமாவுக்கு வந்தோம்னு நினைத்தது உண்டா?**

சினிமாவில் ஜெயிக்கலாம், தோற்கலாம், நம் கையில் இல்லை; மக்கள் முடிவு பண்ணனும். படிச்சுட்டு இரண்டு வருஷம் அப்பாகிட்ட டைம் கேட்டேன். சினிமா செட்டாகவில்லை என்றால் மேற்படிப்புக்கு போறேனு சொன்னேன். இப்போதைக்கு சரியாக போகிறது.

**★ அப்பா படத்தில் எப்போது நடிப்பீங்க?**

சீக்கிரமே நடக்கும், காத்திருக்கிறேன்.

**★ பணமா, கதையா அதிதியின் தெரிவு எது?**

காசுக்காக சினிமாக்கு வரல. ஒரு கதை கேட்டு என்னை மறந்து அந்தக் காட்சியில் நான் இருந்தால் நடிப்பேன். பெரும்பாலும் கதையை நானும், என் மேனேஜரும் கேட்போம். எப்போதாவது அம்மா கேட்பாங்க. கடைசியாக அப்பாவிடம் எடுத்துச் செல்வேன்.

**★ அதிதியின் ஆசை?**

முழுமையான ஒரு வரலாற்று படத்தில் நடிக்கணும்.

**★ அடுத்தடுத்த படங்கள் பற்றி?**

தமிழில் அர்ஜூன் தாஸ் படம், தெலுங்கில் சாய் ஸ்ரீநிவாஸ் உடன் ஒரு படம் நடிக்கிறேன். தெலுங்கில் கலர் புல்லா கிராண்டா எடுக்குறாங்க.

**★ பெண்களுக்கு சொல்ல விரும்புவது**

நிறைய பெண்கள் தைரியமாக முன்வந்து பிரச்சினைகளைப் பேசுறாங்க. பெண்கள் பாதுகாப்பாக இருக்கணும்.

# முத்தையாவும் கண்ணையாவும்



அன்றைய திரைவானில் கதாநாயகர்களுடன் பல்வேறு பாத்திரங்களில் - ஒருசில துணைப் பாத்திரங்களில் பல குணசித்திர கலைஞர்களும் கலந்து ஒரு கலக்கு கலக்கியிருக்கிறார்கள். அவர்களில் அன்றைய ரசிகர்களும் இன்றைய ரசிகர்களும் அறிந்தும் அறியாத அரிய சுவைமிகு குட்டித் தலைவர்களை அடிக்குறிப்பாகத் தருவதே என் நோக்கம். அந்த நாளைய நடிகர்களைக் கூற விளைகிறேன்.

அவர்களில் 'முத்தையா'வைப் பற்றி சொல்லவேண்டுமானால், இவர் 1950இல் பல படங்களில் குணசித்திர வேடங்களில் நடிக்கத் தொடங்கியவர். 1964ஆம் ஆண்டு ஏ.வி.எம். நிறுவனம் பிரம்மாண்டமான தயாரிப்பில் உருவான 'விஜயபுரி வீரன்' படத்தில் ஈ.வீ.சரோஜாவின் தந்தை யாக நடித்திருந்தார். இப்படத்தில் வில்லன் ராமதாஸின் கொடுமைக்கு உள்ளாக்கப்படும் காட்சியில் நடித்திருந்தார். இவர் அதிகமான படங்களில் வில்லனால் இம்சைப்படுத்தப்படும் காட்சிகளில் நடித்திருந்தார். முத்தையா முகத்தில் சோகக் காட்சிகளில் சோபிக்கக்கூடிய காட்சிகளில் சிறப்பாக நடித்திருந்தார். 1964இல் எம்.ஜி.ஆரின் 'தாயின் மடியில்' படத்தில் சரோஜாதேவியின் தகப்பனாராக நடித்திருந்தார். வில்லன் எம்.ஆர்.ராதாவால் தொல்லைப்படுத்தும் பணக்காரராக நடித்திருந்தார். 1968இல் வெளிவந்த 'புதிய பூமி' படத்தில் ஜெயலலிதாவின் பாட்டனாராக காட்சியளித்தார். இப்படத்திலும் நம்பியாரால் கொடுமைப்படுத்தப்படுகிறார். 'குமரிக்கோட்டம்' (1971) படத்தில் எம்.ஜி.ஆரின் தகப்பனாராக காட்சியளித்தார். இப்படத்தில் வீ.கே.ராமசாமியால் ஏமாற்றப்படுகிறார். 'அன்னமிட்ட கை' (1972) படத்திலும் எம்.ஜி.ஆரின் தகப்பன் வேடம். இப்படத்தில் ஆர்.எஸ்.மனோகரால் தொல்லைப்படுத்தப்படுகிறார்.

மோட்டார் சுந்தரம்பிள்ளை (1966) படத்தில் சிவாஜிகணேசனின் மாமனாராக சோகக் காட்சியில் சோபித்து நடிக்கிறார். 'தங்கச் சுரங்கம்' (1969) படத்தில் வில்லன் ஓ.ஏ.கே.தேவரால் சிறை வைத்து கொடுமைக்கு ஆளாக்கப்படுகிறார். 'இதயத்தில் நீ' படத்தில் எம்.ஆர்.ராதாவால் மிரட்டப்படும் காட்சியிலும் 'ஹலோ மிஸ்டர் ஜமீந்தார்' படத்திலும் சோகக் காட்சியில் நடித்திருந்தார். முத்தையா சோகக்காட்சிக்கென்றே அன்று படங்களில் ஒப்பந்தம் செய்யப்பட்டார் போலும்.

அடுத்து 'என்னத்தை கண்ணையா'வைப் பற்றி அலசி ஆராய்வோம். இவர் அன்று அதிக படங்களில் ஒருசில காட்சிகளில் நகைச்சுவை வேடங்களில் கறுப்பு வெள்ளை படங்களில் தோன்றியிருந்தார். இவர் நடித்த எல்லாப் படங்களையும் விட்டுவிட்டு ஒருசில படங்களை மட்டுமே நாம் பார்ப்போம்.

டி.ஆர்.ராமண்ணா கலரில் தயாரித்த 'நான்' படத்தில் இவர் அடிக்கடி ''என்னத்தை என்னத்த சொல்ல'' என்ற டயலை அடிக்கடி கூறுவார்.



இதனால் இவரது ரசிகர்கள் ''என்னத்தை கண்ணையா'' என அழைக்கலானார்கள். பின்னர் இவர் நடித்த படங்களில் இவரைத் தயாரிப்பாளர்கள் இதுபோன்ற டயலை உச்சரித்து நடிக்கும்படி கூறினார்களாம். 1968ஆம் ஆண்டு வெளிவந்த எம்.ஜி.ஆரின் 'கணவன்' படத்தில் சோ, மனோரமா போன்றோருடன் இவர் டாக்டராக வந்து நகைச்சுவையில் ஒரு கலக்கு கலக்கினார். அதே ஆண்டில் ஜெமினி நிறுவனத்தின் 100ஆவது படமும் எம்.ஜி.ஆரின் 100ஆவது படமுமான 'ஒளிவிளக்கு' படத்தில் சுந்தரிபாயுடன் போடும் கும்மாள நடிப்பை மறக்க முடியாது.

இவர் எம்.ஜி.ஆரின் 'இதயக் கனி' (1975), சிவாஜியின் 'சொர்க்கம்' (1970) போன்ற படங்களிலும் இவரது வயிறு குலுங்க வைக்கும் விகடக் காட்சிகளைக் காணலாம். அன்று சுருளிராஜன், தேங்காய் சீனிவாசன், நாகேஷ், வீ.கே.ராமசாமி, மனோரமா போன்றோருடன் சிரிப்புக் காட்சிகளில் தோன்றி நடித்தார். 'நம் நாடு' (1969) படத்தில் அசோகன், தங்கவேலு, ரங்கராவ், ராம்தாஸ் போன்ற வில்லர்களுடன் இவரும் ஒரு வில்லனாக வந்து எம்.ஜி.ஆரால் உதை வாங்கும் காட்சியில் தோன்றினார்.

'மூன்றெழுத்து' படத்தில் கண்ணையா பயங்கரமான வில்லனாக பரிணமித்தார். பின்னாளில் கவுண்டமணி, செந்தில் கூட்டணியுடன் இவரும் ஒரு கலக்கி கலக்கியிருந்தார். இடைக்காலப் படங்களில் வடிவேலுவுடனும் நகைச்சுவையாக காட்சிகளில் வலம் வந்தார். ஒரு படத்தில் இவர் வடிவேலு கேட்கும் கேள்விக்கு ''வரும் ஆனால் வராது'' என்ற வசனத்தை உச்சரிக்கிறார். இன்றைய ரசிகர்கள் பேசும்போது இவ்வசனத்தை ஜோக்காக சொல்வதுண்டு. இன்று இவர் உயிரோடு இல்லாமல் இருந்தாலும் இவ்வசனத்தை உச்சரிப்போர் அதிகம் உள்ளனர். அதுதான் ''வரும் ஆனால் வராது''

**கலாபூஷணம்**
**கல்லொளுவை பாரிஸ்**




# 24ஆம் திகதி வெளியாகும் Mr.HouseKeeping




ஜம்ப் கட்ஸ் யூடியூப் சேனலின் மூலம் தனது ரசிகர்கள் பட்டாளத்தை உருவாக்கியவர் ஹரி பாஸ்கர். அடுத்ததாக 'மிஸ்டர் ஹவுஸ் கீபிங்' படத்தில் கதாநாயகனாக நடித்துள்ளார்.

இப்படத்தில் ஹரி பாஸ்கருக்கு கதாநாயகியாக லாஸ்லியா நடித்துள்ளார். இப்படத்தை அருண் ரவிச்சந்திரன் இயக்கியுள்ளார்.

படத்தின் டீசர் சில மாதங்களுக்கு முன் வெளியானது. இப்படத்தில் ஹரி பாஸ்கர், வீட்டில் ஐடியில் வேலை செய்கிறேன் என வீட்டுக்குத் தெரியாமல் சென்னையில் வந்து லாஸ்லியா வீட்டில் வீட்டுப்பணி செய்யும் நபராகவுள்ளார். லாஸ்லியாவிடம் காதல் கொள்கிறார். ஆனால், லாஸ்லியா பல நபர்களை டேட் செய்து வருகிறார் போன்ற காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

படத்தின் ஒளிப்பதிவை குலோதுங்கவர்மன், இசையை ஓஷோ வெங்கட் மேற்கொண்டுள்ளார். இந்நிலையில், படத்தின் ரிலீஸ் திகதியை படக்குழு வெளியிட்டுள்ளது. திரைப்படம் இம்மாதம் 24ஆம் திகதி வெளியாகவுள்ளது.

# பெப்ரவரியில் வெளியாகும் 'மர்மர்'

ஹேமந்த் நாராயணன் 'மர்மர்' என்ற திரைப்படத்தை இயக்கியுள்ளார். இத்திரைப்படமே தமிழில் உருவாகியுள்ள முதல் Found footage ஹாரர் திரைப்படமாகும். Found footage ஹாரர் திரைப்படங்கள் என்றால் திரைப்படத்தின் காட்சிகள் பெரும்பாலானவை டேப் ரெகார்டர், சிசிரிவி கேமரா பூட்டஜ் போலவே காட்சிப்படுத்திருப்பர். இதன் மூலம் உண்மையாகவே அந்த அமானுஷ்ய சம்பவ உணர்வை அது பார்வையாளர்களுக்கு கடத்தும். படத்தின் ஃபர்ஸ்ட் லுக்கை படக்குழு வெளியிட்டுள்ளது.





இப்படத்தை ஸ்டான் அலோன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. பர்ஸ்ட் லுக் போஸ்டரில் கபா கபா கபிஸ்து என்ற வார்த்தை இடம்பெற்றுள்ளது. படத்தின் ஒளிப்பதிவை ஜேசன் வில்லியம் மேற்கொள்கிறார். ரோகித் படத்தொகுப்பை செய்கிறார். திரைப்படத்தில் நடித்துள்ள நடிகர்களின் விவரத்தை விரைவில் வெளியிடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. திரைப்படத்தை எதிர்வரும் பெப்ரவரி மாதம் வெளியிட படக்குழு திட்டமிட்டுள்ளது.

# 'எங்க வீட்டுப் பிள்ளை'

## ஸ்வீட் கிக்ஸ்டி

**ச.சுந்தரதாஸ்**



தமிழ்த் திரையுலகில் வசூல் சக்ரவர்த்தியாகத் திகழ்ந்தவர் எம்.ஜி.ஆர். இவர் நடிப்பில் படம் தயாரித்தால் பணத்தை அள்ளலாம் என்ற ஆர்வம் காரணமாக அன்றிருந்த எல்லா பெரிய படத் தயாரிப்பு நிறுவனங்களும் எம்.ஜி.ஆரின் கால்ஷீட்டுக்காக அதீத அக்கறை காட்டி வந்தன. அந்த வரிசையில் எம்.ஜி.ஆரின் நடிப்பில் தங்களின் விஜயா கம்பைன்ஸ் சார்பில் படமொன்றை தயாரிக்க வேண்டுமென்ற ஆவல் அதன் அதிபர்களாக நாகிரெட்டி, சக்கரபாணி இருவருக்கும் தோன்றியதன் விளைவே 1965ஆம் ஆண்டு வெளிவந்த 'எங்க வீட்டுப் பிள்ளை' படமாகும்.



தமிழிலும் தெலுங்கிலும் ஏக காலத்தில் படம் தயாரித்து வெற்றி கண்ட நிறுவனம் விஜயா கம்பைன்ஸ். இவர்கள் தயாரித்த பாதாள பைரவி, மிஸ்ஸியம்மா, மாயா பஜார், கடன் வாங்கி கல்யாணம் போன்ற படங்கள் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றன. இவர்களின் ஆஸ்தான ஹீரோவாக ஜெமினி கணேசன் திகழ்ந்தார். ஹீரோயினாக சாவித்திரி விளங்கினார். ஆனாலும் அறுபதாம் ஆண்டுகளின் தொடக்கத்தில் இவர்கள் எடுத்த 'மனிதன் மாறவில்லை' எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. இதனைத் தொடர்ந்து அவர்கள் மனம் மாறினார்கள். அவர்களின் கவனம் ஜெமினியிடமிருந்து விலகி எம்.ஜி.ஆர். பக்கம் திரும்பியது. விஜயா, வாஹினி ஸ்டுடியோ அதிபர்கள் கேட்கிறார்கள் என்றவுடன் எம்.ஜி.ஆரும் அவர்கள் தயாரிப்பில் நடிக்க உடன்பட்டார். ஏற்கனவே என்.டீ.ராமராவ் நடிப்பில் வெளிவந்த ராமுடு பீமுடு படத்தை தமிழில் எடுப்பதென்று தீர்மானமானது. அதிலும் தங்கள் நிறுவனத்தின் முதல் கலர் படமாக இதை எடுக்கவும் முடிவானது.

தமிழ்ப் படத்தில் எம்.ஜி.ஆர். இரட்டை வேடத்தில் நடிக்கிறார் என்றவுடனேயே அவருக்குப் பொருந்தும் விதத்தில் ஒரிஜினல் கதையில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. அந்த மாற்றங்கள் படத்தின் வெற்றிக்கு உதவின என்பதை மறுக்க முடியாது. முக்கிய மாற்றம் தெலுங்கு படத்தில் இல்லாத ''நான் ஆணையிட்டால்'' பாடல் காட்சியாகும். வாலியின் இந்தப் பாடலும் ரீ.எம்.எஸ்ஸின் குரலும் எம்.ஜி.ஆரின் அட்டகாசமான நடிப்பும் படத்துக்கு புது மெருகைத் தந்தன. எம்.ஜி.ஆர். ஒருவரால்தான் இந்தக் காட்சியில் நடிக்க முடியும் என்பதும் நிரூபணமானது.

அதேபோல் வீரனாக வரும் எம்.ஜி.ஆரின் நடிப்பை தூக்கி சாப்பிட்டு விட்டது. கோழையாக வரும் எம்.ஜி.ஆரின் நடிப்பு. என்ன முகபாவம், என்ன பயம், என்ன மிரட்சி. அசத்திவிட்டார் எம்.ஜி.ஆர். அவருடன் போட்டி போடும் நம்பியாரும் குறை வைக்கவில்லை. படம் முழுவதும் எல்லோரையும் அதட்டி, மிரட்டி கத்தி கலங்க வைக்கிறார். எஸ்.வி.ரங்கராவ். ஜாலியான அப்பா, நடிப்பும் கச்சிதம். நாகேஷ், தங்கவேலு, மாதவி கொமடி சூப்பர்.

இரண்டு எம்.ஜி.ஆர். என்றவுடன் அவருக்கு இரண்டு ஜோடி. சரோஜாதேவிக்கு இந்தப் படத்தில் மேக்கப், ஆடை அலங்காரம் எல்லாம் பிரமாதம். சரோஜாதேவி ஸ்டைலிஷ் என்றால் ரத்னா பாந்தம். இருவரும் அழகாக வந்து பவிசாக நடிக்கிறார்கள். இவர்களுடன் ருஷ்யேந்திரமணி, வெங்கடாசலம், பேபி ஷகிலா, சீதாலஷ்மி, கே.கே.சௌந்தர் ஆகியோரும் நடித்தார்கள்.

வாலி, ஆலங்குடி சோமு இருவரும் எழுதிய பாடல்கள் விஸ்வநாதன், ராமமூர்த்தி இசையில் ரம்மியமாக ஒலித்தன. நான் மாந்தோப்பில் நின்றிருந்தேன், பெண் போனால், மலருக்கு தென்றல் பகையானால், குமரிப்பெண்ணின் உள்ளத்திலே, கண்களும் காவடி சிந்தாடட்டும் ஙடல்கள் எல்லாம் இன்றும் ஒலிக்கின்றன.

படத்தின் வசனங்களை சக்தி கிருஷ்ணசாமி எழுதினார். அலட்டல் இல்லாத அளவான



வசனங்கள். கண்ணுக்கு இனிமையான ஒளிப்பதிவை வின்சென்ட், சுந்தரம் இருவரும் கையாண்டார்கள். கிருஷ்ணாராவின் செட் அருமை.

எங்க வீட்டுப் பிள்ளை தமிழ், தெலுங்கு, ஹிந்தி என்று மூன்று மொழிகளிலும் எம்.ஜி.ஆர்., என்.டி.ராமராவ், திலீப்குமார் நடிப்பில் வெளிவந்தது. மூன்று படங்களையும் தாபி சாணக்கியா டைரக்ட் செய்தார். மூன்றிலும் எங்க வீட்டுப் பிள்ளை படமே அருமையாக அமைந்தது. படத்தில் எம்.ஜி.ஆர். நடித்ததும் அதற்குக் காரணமானதென்றால் மிகையாகாது.



எம்.ஜி.ஆர். இரட்டை வேடங்களில் நடித்த முதல் சமூகப் படம் எங்க வீட்டுப் பிள்ளை. இந்தப் படம் எம்.ஜி.ஆரை ரசிகர்கள் மனதில் எங்க வீட்டுப் பிள்ளையாக இறுத்தியது . படமும் வெள்ளி விழா கண்டது.

எம்.ஜி.ஆர். இலங்கை வந்தபோது இரத்மலானை விமான நிலையத்திலிருந்து திறந்த வாகனத்தில் அழைத்துவரப்பட்டபோது அந்த நெடுஞ்சாலையில் அமைந்திருந்த பிளாசா தியேட்டரில் எங்க வீட்டுப் பிள்ளை திரையிடப்பட்டது. அதனை தனது வாகன ஊர்வலத்தின்போது எம்.ஜி.ஆர். கண்ணுறும் வாய்ப்பையும் பெற்றார். என்றும் ரசிகர்கள் மனதில் நிறைந்து அவர்களின் எங்க வீட்டுப் பிள்ளையாக இன்றும் இப் படம் திகழ்கிறது!

s.suntheradas@hotmail.com

# சிதைக்கும் நினைவுகள்

மீண்டும் பிறக்கும்
நினைவுகள்
மனதிலே ஏற்படும்
மாற்றங்கள்
அச்சமடையும் நான் .

உணர்கிறேன் அது
மனதிலே வலிகளையோ
மகிழ்ச்சியையோ
சுமக்கின்றது.

நொடிப்பொழுதில்
உள்ளத்தில்
வெடிக்கும் எரிமலைகள்
தலையை அதிர வைத்து
உணர்வுகளை சிதைக்கின்றது.

மீண்டும் பிறக்கும்
நினைவுகள்
மனதிலே ஏற்படும்
மாற்றங்கள்
அச்சமடையும் நான்.

மகிழ்வுறும் தருணங்களை
நீடிக்க ஆசைப்படும்
உள்ளம் வலிகளை
உணர்த்தும் சோகங்களை
புகைக்கின்றது.

தனிமை தரும் அச்சம்
நீங்கள் உணரும் சமயம்
என் நினைவுகள்
உங்களையும் வதைத்தால்
நான் இல்லாத நொடிகளில்
நீங்கள் என்ன செய்யலாம்.

மீண்டும் பிறக்கும்
நினைவுகள்
மனதிலே ஏற்படும்
மாற்றங்கள்
அச்சமடையும் நான்.

**ஏ.எம்.அப்பாஸ் ,**
**வாழைச்சேனை.**



# யார் கவிஞன்



கவிஞன் நல்ல கவிஞன்
ஆண்டவன் அருளினால்
அவனிக்களித்த அற்புதப் புதையல்
கவிஞன் நல்ல கவிஞன்.

சொற்களின் பட்டறைக்குள்ளே
சொக்கிடும் சொற்கள் பொறுக்கி கவி
செப்பிடும் உழவன்
அவன்தான் செந்தமிழ்க் கவிஞன்.

ஆறிடும் முன் அடவு கிடக்காது
அவன் பேனா நெஞ்சில் ஊறிடும்
எண்ணங்கள் அவன் கவியினில்
இனித்திடும் மதுத் தேனாய்.

நாறிடும் கவிகள் ஒரு போதுமே
வேணாம் என நாளெல்லாம் ஓதிடுவான்
அவன்தானாம் கவிஞன்

அணைந்த சுடரினைச் சுற்றி நிற்கும்
ஐதரோக்காபன் ஆவியைப் போல
அவன் புனைந்த
கவியினைச் சுற்றி நிற்கும்
நல்ல பொலிவான கருத்துகள்.
உந்துகின்ற கற்பனையில்
அவன் கவியில் பந்து விளையாடும்
பல சொற்கள் அவற்றை
சிந்து படிப்பதற்கிணங்க

மக்கள் சிந்தையினுட்
சிறையாய் வைப்பான்
அவனே கவிஞன் நல்ல கவிஞன்.

**கவிதாயினி**
**மாஜிதா தவ்பீக்,**
**மருதமுனை.**

# மாற்றம்

நீ மாறித்தான் விட்டாய்
பார்த்துக் கொண்டே
இருக்கிறேன்
நன்றாக தெரிகிறதே
உந்தன் மாற்றம்...

ஏன் மாறினாய் என
கேட்டுவிட முடியும் தான்
ஆனால் பயப்படுகிறேன்
என்னில் பிழை
சொல்லிடுவாயென

உந்தன் நிலமைகள்
புரிந்ததாலே

தொல்லைத் தர மறுத்தேன்
மாறுவாயென நான்
நினைத்தே பாரலையே ..

ஆனால் மாறிவிட்டாய்
வடுவாய் சுட படாத
பாடுபட்டு துடிக்கிறேன் .

மறுமுறை உன்னை
மீண்டும் அதுபோன்று
கிடைத்திடாயோ வென

அழிந்து போன
செயல்கள் மீளுருவம்

கொண்டால்தான் என்ன?
எழும் எண்ணங்களை
யார் தான்
நிறுத்த முடிந்திடுமோ

பட்டு தீரணுமோ
தொட்டு மீளும்
வலிகளை அகற்ற தான்
ஏழுமோ?..

**சஹ்னாஸ் பேகம்,**
**முதலைப்பாளி,**
**புத்தளம்.**



# தொட்டுவிடும் தூரம்

மெல்லென வீசும் காற்றினிலும்
அசையும் கிளை போல் உறுதியற்று
உழலும் மனமே அடங்கிப்போ

மௌனத்தின் போர்வைக்குள்
அமிழ்ந்ததாய் பாசாங்கு செய்யும்
மனது உலகையே வலம் வரும்
காட்சியை யார் அறிவார்

ஆன்மாவின் ஆசைக்கே அளவுகோல்
இல்லையே உள்ளங்கை அளவு
இதயத்தில் உலகளவு தேடல்
வைத்த
இயற்பியல் விசைக்கே
எல்லாமும் வெளிச்சம்

பிரபஞ்ச எல்லையையே
வினாடிக்குள் தொட்டு
மீளும் ஆழ்மனக் கரங்களுக்கு
தொட்டு விடும் தூரத்தில்தானே
தொடுவானம் இருக்கிறது.

**-மருதூர் மௌஜுன் -**

# மூடி செல்லும் மனிதர்

நான்கு பேர் நம்மைச் சுமக்கையில்
மனித வாழ்வு முடிவாகும்
பூமியின் மடி தரும் அமைதி
பின் நம் பயணம் தொடங்கும்.

நண்பர், சொந்தம் கண்ணீர் விட்டு
கை குவித்து வழி அனுப்புகின்றார்
பிறந்த நாள் முதல் எண்ணத்தோடு
அவசானம் இங்கே நிற்கின்றார்.

வெற்றியும் துவழ்ந்த முகமும்
வாழ்க்கையின் நாட்கள் பின் நின்றது,
சுமந்தவர்கள் சுமந்த பயமும்
அவன் பிணம் பேசத் தொடங்கியது.

பொருள், பதவி, புகழெல்லாம்
அவனுடன் ஒன்றும் செலவில்லையே,
ஆனால், அந்த நால்வரின் கையில்
அவன் நற்கருத்தே மட்டும்
நிழலாய் நிற்குமே.


சுமந்தவரின் மனம் சுமக்கும்
அன்பின் சுவடுகள் மிஞ்சும்
நனவிலும் கனவிலும் வாழ்வது
அவனின் நற்கீர்த்தி மட்டுமே.

காலமெலாம் காலடித் தடம்
காண்பது அவனின் பினம் தான்,
வாழ்ந்து முடித்துவிட்டாலும்
அவன் மனிதனாய் வாழ்ந்ததுதான்!

**கவிஞர் த. ரூபன்,**
**ஈச்சிலம்பற்று,**
**திருகோணமலை.**

## தூறல்கள்

# அதிரவைக்கும் எதிர்கால கணிப்பு



தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரி, நாட்டிலும் சரி, அடுத்து என்ன நடக்கப்போகிறது என்று தெரிந்துகொள்ள மக்களுக்கு எப்போதுமே ஆர்வம் இருக்கும்.

அந்த வகையில், வாழும் நாஸ்ட்ரடாமஸ் என அழைக்கப்படும் ஏதோஸ் (Athos Salome) எனும் பிரேஸில் ஜோதிடக் கலைஞர், 2025ஆம் ஆண்டு எப்படி இருக்கும் என்று கணித்துள்ளார். இவர், 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்பெற்ற பிரெஞ்ச் ஜோதிடரான நாஸ்ட்ரடாமஸ்க்கு இணையாகக் கருதப்படுகிறார்.

அவர் என்னவெல்லாம் கணித்துக் கூறியிருக்கிறார் என்று பார்க்கலாம்...

குளோனிங் போன்ற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, அறிவில் சிறந்த, வலிமையான, நோய் எதிர்ப்புச் சக்திகொண்ட, எவ்வித குறைபாடுகளும் இல்லாத மனிதர்களை அரசாங்கங்கள் இரகசியமாக உருவாக்கிக்கொண்டிருப்பதை அறிவியலாளர்கள் இந்த ஆண்டில் வெளிச்சத்துக்குக் கொண்டுவருவார்கள்.

ஏலியன்கள் உள்ளன என விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் அதிகாரபூர்வமாக அறிவிக்கத் தொடங்குவார்கள். செவ்வாய் கிரகத்தில் நுண்ணுயிர்கள் உள்ளன என்பதற்கான ஆதாரங்கள் வெளியாகும். பூமிக்கடியில் இரகசியமாக இயங்கிவரும் இராணுவத் தளங்கள் மற்றும் இரகசிய இராணுவ இயக்கங்கள் குறித்த உண்மைகள் வெளியாகும்.

மனித உடலில் பொருத்தப்படும் சிப்கள் பிரபலமாகும்.

இதன் மூலம் மனிதர்கள் கண்காணிக்கப்படுவார்கள். சூறாவளிகள், வறட்சி போன்ற எதிர்பாராத பருவநிலை பேரழிவுகள், எதிர்பாராத இடங்களில் ஏற்படும். அதிகாரம் மிக்க சில மனிதர்களால் செயற்கையான ஆற்றல் நெருக்கடி உருவாகும். இதன் மூலம் உலக மக்களைக் கட்டுப்படுத்த நினைப்பார்கள். உலகின் பல்வேறு பகுதிகளில் மோதல்கள் நிறைந்திருக்கும். மத்திய கிழக்கு மற்றும் ரஷ்யாவில் ஒரு புதிய வகை போரை நோக்கிய சூழல் உருவாகும். இது மனிதர்களின் போர் மட்டுமல்ல, இயந்திரங்களின் போராக இருக்கும். போரில் மேம்பட்ட தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும் என்று நீள்கிறது அவரின் கணிப்பு.

ஏதோஸ் இதற்கு முன்பாக கணித்த கொரோனா பெருந்தொற்று, தங்கம் விலை உயர்வு, பொருளாதார நெருக்கடிகள், ரஷ்யா - உக்ரைன் போர் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் நடந்திருப்பதால், 2025ஆம் ஆண்டு பற்றிய அவரின் கணிப்பு பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

## தமிழன் தர்பார்

இது எங்க ஏரியா

# குழந்தைகள் இல்லா நாடு: கவலையில் ஜப்பான்!



தொழில்நுட்பங்களில் சிறந்து விளங்கும் ஜப்பானில், மக்கள் தொகை சரிவு உண்டாகிவருவது அந்நாட்டு அரசுக்கு கவலையை ஏற்படுத்திவரும் நிலையில், அங்குள்ள தோஹோகு பல்கலைக்கழக சமூகம் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் ஹிரோஷி யோஷிடா சமீபத்தில் ஓர் ஆய்வறிக்கையை வெளியிட்டுப் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறார்.

2720ஆம் ஆண்டு ஜனவரி 05ஆம் திகதிக்குள், ஜப்பானில் 14 வயதுக்குட்பட்ட ஒரேயொரு குழந்தை மட்டுமே இருக்கும் என்று அதிர வைக்கிறது அந்த ஆய்வறிக்கை.

2023ஆம் ஆண்டில் ஜப்பானில் பிறப்பு வீதம் வெகுவாகக் குறைந்தது மட்டுமல்லாமல், இதுவரை இல்லாத வகையில் புதிய வரலாற்றுச் சரிவைத் தொட்டது. எங்கள் ஆய்வில், குழந்தைகள் மக்கள் தொகை ஆண்டுக்கு 2.3 சதவீதம் வீழ்ச்சியை சந்தித்துவருவதும், இதன் விளைவாக, அடுத்த 695 ஆண்டுகளில் ஜப்பான் குழந்தைகளற்ற நாடாக மாறிவிடும் அபாயம் உள்ளதும் தெரியவந்துள்ளது.

திருமணங்கள் குறைவது, தனிமை வாழ்க்கையைத் தேர்ந்தெடுப்போர் அதிகரித்தல் மற்றும் குழந்தை பெற்றுக்கொள்ளும் ஆர்வம் குறைதல் போன்றவை குழந்தைகள் எண்ணிக்கை குறைவதற்கான காரணங்களாக இருக்கின்றன என்று குறிப்பிடுகிறது அந்த அறிக்கை. இது தொடர்பான விவாதம் சமூகவலைத்தளங்களில் அனல் பறக்க நடக்கிறது.

# ஈ.வெ.ராவின் மனிதாபிமானம்



ஈ.வெ.ரா. 25 ஆயிரம் ரூபாவை மடியில் கட்டிக்கொண்டு நீதிமன்றத்துக்குப் போய் இதோ பணம் இருக்கிறது என்று சொன்ன சம்பவமொன்று நடந்தது.

என்.எஸ்.கிருஷ்ணனுக்கு ஒரு வழக்கில் தண்டனை கொடுத்துவிட்டனர் (1945). அன்று தீர்ப்பு சொன்னபோது, நீதிமன்றத்தில் பெரும் கூட்டம்.

ஜாமினில் எடுப்பதானால் பணம் வேண்டி இருக்கும் என்று யாரோ கூறினர். அதைக் கேள்விப்பட்ட ஈ.வெ.ரா., 25 ஆயிரம் ரூபாவை மடியில் கட்டிக்கொண்டு, நீதிமன்றத்துக்கு வந்தார்.

“இதோ பணம், 25 ஆயிரம் ரூபாவை நான் தருகிறேன். ஜாமினில் எடுங்கள்” என்றார்.

ஆனால், ஜாமினில் எடுக்க முடியவில்லை. தவித்துப் போனார் ஈ.வெ.ரா.

அண்ணாதுரை முதல்வரான பின், அவருக்கு சிகிச்சையளிக்க அமெரிக்கா செல்ல வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. பெருமளவில் பணம் செலவாகும் என்று பேச்சு எழுந்தது. அதெல்லாம் அரசு செலவுதான். ஆனாலும், ஈ.வெ.ரா. பெருந்தொகையை எடுத்துக்கொண்டு மருத்துவமனைக்கு வந்து அமைச்சர்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்களிடம் தனித்தனியாக எவ்வளவு செலவானாலும் நான் தருகிறேன் என்று மன்றாடியபோது, கலங்காத கண்களும் கலங்கின.

ஒருபுறம் பொதுப்பணத்தில் ஒரு காசுகூட தொடாத சிக்கன சிகாமணி. மறுபுறம், உற்றவருக்கு ஓடிவந்து உதவும் மனிதாபிமானம்.

இவை, ஈ.வெ.ரா. எனும் நாணயத்தின் இரண்டு பக்கங்கள்.

# மன்மோகன் சிங்



சமீபத்தில் காலமான முன்னாள் பிரதமர், பொருளாதார மேதை மன்மோகன் சிங், எளிமை, அடக்கத்துக்குப் பெயர் பெற்றவர்.

அவரது 3 மகள்களில் ஒருவர், தமன்சிங். அவர் தனது பெற்றோரை பற்றி ஏற்கனவே எழுதி, அவர்களே வெளியிட்டிருந்த (ஸ்டிரிக்ட்லி புத்தகத்தில் பெர்சனல்- மன்மோகன் அண்ட் குர்சரண்), மன்மோகன் சிங் குறித்த சில அறியப்படாத தகவல்களை வெளியிட்டிருந்தார்.

அதிலிருந்து...

1950களில், இங்கிலாந்தின் பிரசித்திபெற்ற கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் அப்பா பொருளாதாரம் பயின்றார். அப்போது அவருக்குப் பணத்துக்கு மிகவும் சிரமம். ஸ்கொலர்ஷிப் உதவியால்தான் படித்தார். அவருக்குப் படிப்பு, தங்குமிடச் செலவுகளுக்கு வருடத்துக்கு 600 பவுண்டுகளாகும் என்றால், 160 பவுண்டுகள்தான் உதவித்தொகையாகக் கிடைத்தது. இந்தியாவிலிருந்து அவரது தந்தை, சிறுதொகைதான் அனுப்பிவைப்பாராம். எனவே அப்பா ரொம்பவே சிக்கனமாக இருந்துள்ளார்.

பல்கலைக்கழக உணவு விடுதியில் உணவு விலை குறைவு என்பதால், அங்குதான் அப்பா எப்போதும் சாப்பிட்டுள்ளார். வெளியில் சாப்பிடுவதும், ஏதாவது பருகுவதும் வெகு அபூர்வம்.

பல்கலைக்கழக உணவு விடுதியிலும் சாப்பிடுவதற்குப் பணமில்லாது போகும்போது, சாக்லேட் பார்களை வாங்கிச் சாப்பிட்டு சமாளித்துள்ளார். பணமில்லா விட்டால் அப்பா பட்டினி கூட கிடப்பாரே தவிர, யாரிடமும் பணம் கேட்க மாட்டார். அவர் தனது ஆயுட்காலம் முழுக்க யாரிடமும் கடன் வாங்கியதே இல்லை.

பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முதல் மாணவராக தேர்ச்சி பெற்றபோது, இந்தியாவிலிருந்து அனுப்பப்படும் சிறுதொகையையும் அனுப்ப வேண்டாம் என்று கடிதம் எழுதிவிட்டாராம். ‘‘பல்கலைக்கழகத்தில் எனக்குப் பரிசாக ஒரு தொகையை வழங்குவார்கள். அதை வைத்து சமாளித்துக்கொள்கிறேன்” என்று கூறிவிட்டார்.

அப்பா, கலகலப்பான நபராக அறியப்பட்டவர் இல்லை. ஆனால், நாங்கள் குடும்பச் சுற்றுலாவாக வெளியே செல்லும்போது அவர் பாடுவார். அவருக்கு ஒன்றிரண்டு அபிமானப் பாடல்கள் உள்ளன. தேசப் பிரிவினை குறித்த ஒரு கவிதையையும் அப்பா பாடுவார்.

அப்பா நகைச்சுவை உணர்வுள்ளவர் என்றாலும், எங்களிடம் அதை அதிகம் வெளிக்காட்டியதில்லை. ஆனால், நண்பர்கள் மத்தியில் அவர் ஜோக்குகள் சொல்வார், மனம் விட்டுச் சிரிப்பார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். நெருக்கமானவர்களுக்குப் பட்டப் பெயர் சூட்டுவதும் அப்பாவுக்குப் பிடிக்கும். மகள்களான எங்களுக்கும் செல்லப் பெயரிட்டு அழைப்பார்.

மேற்கு பஞ்சாப்பில் (தற்போது பாகிஸ்தானிலுள்ள பஞ்சாப்) ஒரு சிறு கிராமத்தில் பிறந்த அப்பா, அங்கு தனது கடினமான சிறுவயது பருவம், எளிமையான வாழ்க்கை குறித்தும் பகிர்ந்துகொண்டிருக்கிறார்.

ஒருமுறை எனது சகோதரி கிகி, ‘‘அப்பா... நீங்கள் மீண்டும் உங்கள் சொந்தக் கிராமத்துக்கு போய் பார்க்க விரும்புகிறீர்களா?’’ என்று கேட்டார். அதற்கு அவர், ‘‘இல்லை... எனக்கு அப்படி எதுவும் எண்ணமில்லை. அங்கு தான் எனது தாத்தா கொல்லப்பட்டார்” என்றார் வருத்தத்தோடு.



# அமெரிக்காவில் ஆரம்பமாகிறது ட்ரம்பின் ராஜ்யம்

வர்மா



அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் ஜனவரி 20ஆம் திகதி பதவியேற்கவுள்ளார். வொஷிங்டன் டிசியில் நடைபெறும் இந்த விழாவில் ஜோ பைடனிடமிருந்து ட்ரம்புக்கு அமைதியான அதிகார மாற்றத்தைக் குறிக்கிறது - அவர் தொடர்ந்து இரண்டாவது தடவையாக வெள்ளை மாளிகைக்குத் திரும்புகிறார்.

துணை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜே.டி.வான்ஸ் ஸும் ஜனவரி 20ஆம் திகதி பதவியேற்பார்.

உயர்நீதிமன்ற பிரதம நீதியரசர் ஜோன் ரொபர்ட்ஸ், பாரம்பரிய முறைப்படி, பதவிப்பிரமாணம் செய்துவைப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது.

ட்ரம்ப் தனது வலது கையை உயர்த்தி, இடது கையை பைபிளில் வைப்பார். பைபிள் ஜனாதிபதியின் மனைவியிடம் இருக்கும்.

''அமெரிக்காவின் ஜனாதிபதி பதவியை உண்மையாக நிறைவேற்றுவேன் என்று நான் சத்தியம் செய்கிறேன் (அல்லது உறுதியளிக்கிறேன்), மேலும் என்னால் முடிந்தவரை, அரசியலமைப்பை பாதுகாப்பேன், பாதுகாப்பேன் மற்றும் பாதுகாப்பேன்" என்று ட்ரம்ப் பதவிப்பிரமாணம் செய்வார்.

ட்ரம்ப் தனது இரண்டாவது பதவிக்காலத்தின் முதல் ஜனாதிபதி உரையைத் தொடர்வார்.

உரையின் நீளம் ஜனாதிபதிக்கு ஜனாதிபதி மாறுபடும். 2017இல் ட்ரம்பின் கடைசி தொடக்க உரை சுமார் 17 நிமிடங்கள் நீடித்ததன. அதேநேரத்தில் பிடன் 2021இல் 20 நிமிடங்களுக்கும் அதிகமாகப் பேசினார் .

கையொப்பமிடும் விழா, தொடக்க மதிய உணவைத் தொடர்ந்து பெரும்பாலும் ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதியின் சொந்த மாநிலங்களிலிருந்து உணவு வகைகள் இடம்பெறும். ட்ரம்ப் பென்சில்வேனியா அவென்யூவில் தொடக்க ஊர்வலத்தை வழிநடத்துவார்.

இந்த அணிவகுப்பு அமெரிக்க கபிடல் மைதானத்திலிருந்து வெள்ளை மாளிகை வரை செல்கிறது. நாடு முழுவதுமுள்ள மில்லியன் கணக்கான அமெரிக்கர்களால் கொண்டாடப்படும் மற்றும் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட விழாவாகும்.

ஊர்வலம் உள்ளூர் நேரப்படி பிற்பகல் 3 மணிக்குத் தொடங்கும். வொஷிங்டன் DC முழுவதும் தொடக்கப் பந்துகளின் வரிசையுடன் நாள் முடிவடைகிறது.

தொடக்க விழாக்களுக்கான கூட்டு காங்கிரஸின் குழு, நிகழ்வுக்கு முந்தைய வாரங்களில் காங்கிரஸ் உறுப்பினர்கள் மூலம் குறைந்த எண்ணிக்கையிலான பதவியேற்பு அனுமதிச் சீட்டுகள் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.

ஜனாதிபதி , துணை ஜனாதிபதி ஆகிய இருவரும் பதவியேற்றவுடன் அமெரிக்க கபிடல் மைதானத்தில் விழாவைக் காண மக்கள் அனுமதிக்கப்படுவர்.

ட்ரம்பின் பதவியேற்பு வைபவங்கள், ஸ்டெர்லிங், வேர்ஜீனியாவிலுள்ள அவரது தனியார் கோல்ப் கிளப்பில் வாணவேடிக்கையுடன் தொடங்கும் மற்றும் துணை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜே.டி.வான்ஸுடன் சனிக்கிழமையன்று அமைச்சரவை வரவேற்பு, இரவு விருந்துபசாரம் நடைபெறும்.

ஞாயிற்றுக்கிழமை, பதவியேற்புக்கு முன்னதாக ட்ரம்ப் ஆர்லிங்டன் தேசிய கல்லறையில் மலர்வளையம் வைத்து அன்றைய தினத்தைத் தொடங்குகிறார், பின்னர் அவர் வெள்ளை மாளிகைக்கு திரும்பியதை வொஷிங்டனிலுள்ள கபிடல் ஒன் அரங்கில் மேக் அமெரிக்கா கிரேட் அகைன் பேரணியுடன் கொண்டாடுகிறார்.

ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் ட்ரம்பின் பதவியேற்பு விழாவில் முன்னாள் முதல் பெண்மணி மிச்செல் ஒபாமா கலந்துகொள்ளமாட்டார் என்று அவரது அலுவலகம் உறுதி செய்தது. முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா பதவியேற்பு விழாவில் பங்கேற்பார். இரண்டு வாரங்களில் முன்னாள் முதல் பெண்மணி தவறவிட்ட இரண்டாவது ஜனாதிபதி நிகழ்வு இதுவாகும். ஜனவரி 09, வியாழனன்று வொஷிங்டன் நேஷனல் கதீட்ரலில் நடந்த முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்டரின் இறுதிச் சடங்கில் அவர் கலந்து கொள்ள வில்லை. அங்கு அவர் ட்ரம்பின் அருகில் அமர நியமிக்கப்பட்டார்.



2017இல் ட்ரம்பின் முதல் பதவியேற்பு விழா உட்பட 2009 முதல் ஒவ்வொரு பதவியேற்பு விழாவிலும் மிச்செல் ஒபாமா கலந்துகொண்டார்.



ட்ரம்பின் பதவியேற்பு விழாவை மிச்செல் ஒபாமா ஏன் புறக்கணித்தார் என்பதற்கு எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை. ட்ரம்புக்கு எதிராக 2016, 2020, 2024 ஆகிய ஆண்டுகளில் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களில் முன்னாள் முதல் பெண்மணி மிச்செல் ஒபாமா ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் கமலா ஹரிஸை ஆதரித்தார்.

பதவியேற்பு விழாவில் பில், ஹிலாரி கிளிண்டன் கலந்துகொள்வார்கள். அதேநேரத்தில் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் மற்றும் மனைவி லாரா ஆகியோரும் கலந்துகொள்வது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

உயர் தொழில்நுட்ப நிர்வாகிகள் எலோன் மஸ்க், மார்க் ஜுக்கர்பெர்க் ,ஜெஃப் பெசோஸ் ஆகியோர் ட்ரம்பின் பதவியேற்பு வைபவத்தில் கலந்துகொவார்கள். பிற அதிகாரிகளுடன் அவர்கள் மேடையில் முன் வரிசையில் இருப்பார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது

பதவி விலகும் ஜனாதிபதி ஜோ பிடன் பதவியேற்பு விழாவில் கலந்துகொள்கிறார். 2020இல் பிடனின் பதவியேற்பின்போது ட்ரம்ப் கலந்துகொள்ளவில்லை

இங்கிலாந்தின் நைகல் ஃபரேஜ் தனது வருகையை உறுதிப்படுத்தியுள்ளார். இருவருக்குமிடையில் சமீபத்தில் சமூக ஊடகத் தகராறுக்குப் பிறகு திரு மஸ்க் உடன் "உடைந்த வேலிகளை சரிசெய்வேன்" என்று நம்புவதாகக் கூறினார்.

கிரீன்லாந்தை வாங்கப்போகிறேன், பனாமா கால்வாயின் கட்டுப்பாட்டை எடுக்க வேண்டும், கனடாவை அமெரிக்காவின் மாநிலமாக்க வேண்டும் போன்ற ட்ரம்பின் கருத்துகள் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளன. நேட்டோ உறுப்பினர்கள் அமெரிக்க பாதுகாப்புக் குடையின் கீழ் தொடர்ந்து தஞ்சமடைய விரும்பினால், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5% பாதுகாப்புக்காக செலவிட வேண்டும் என்றும் அவர் எச்சரித்தார்.

பனாமா, கிரீன்லாந்து ஆகியவை சிறிய, பலவீனமான நாடுகள் முறையே 4.5 மில்லியன், 57,000 மக்கள்தொகை கொண்டவை, ஆனால், இரண்டும் மிகப்பெரிய மூலோபாய புவியியல் முக்கியத்துவம் வாய்ந்தவை. பனாமா கால்வாய் பசிபிக், அட்லாண்டிக் பெருங்கடல்களுக்கிடையே உள்ள ஒரே நேரடி கடல்வழி வர்த்தகப் பாதையாகும்.

கிரீன்லாந்து வட அமெரிக்க கண்டத்தின் ஒரு பகுதியாகும். தலைநகரான நூக், டென்மார்க்கின் தலைநகரான கோபன்ஹேகனை விட நியூயோர்க் நகரத்துக்கு அருகில் உள்ளது. இது ஒரு தன்னாட்சி பிரதேசமாகும். கிரீன்லாந்து அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்கு கப்பல்கள், பாதிக்கப்படக்கூடிய கேபிள்களுக்கு குறுகிய பாதையை வழங்குகிறது.

கிரீன்லாந்து, ஐஸ்லாந்து ஆகியவற்றுக்கிடையே உள்ள நீர் ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளின் கப்பல்களுக்கான நுழைவாயிலாகும். ஆர்க்டிக் பனிக்கட்டி உருகும்போது பெருகிய முறையில் கவர்ச்சிகரமான விருப்பம். அவர்கள் ஒரு காலத்தில் அராயல் நேவியால் பெரிதும் ரோந்து வந்தனர்.

மெக்சிகோ வளைகுடாவை அமெரிக்கா வளைகுடா என மறுபெயரிட அழைப்பு விடுத்தார்.

கிரீன்லாந்தில் அமெரிக்க இராணுவத் தளங்கள், ரேடார் நிலையங்கள் உள்ளன. இந்தத் தீவில் எண்ணெய் மற்றும் மூலோபாய கனிமங்கள் நிறைந்துள்ளன. டிஜிட்டல் தொழில்நுட்பம் சீனாவை சார்ந்திருப்பதைத் தடுக்கும் திறன் வாய்ந்தது.




தற்போதைய சீன, ரஷ்ய அரசாங்கங்கள் மேற்கத்தேய ஜனநாயக கூட்டாளிகளுடன் தீவிரமாக விரோதமாகவும், வெளிப்படையான போட்டியிலும் உள்ளன. பிரிக்ஸ் அமைப்பின் மூலம் மற்ற நாடுகளை தங்கள் பக்கம் சேர்த்துக்கொள்ள முயற்சிக்கின்றன.

ட்ரம்பின் அடுத்தகட்ட நடவடிக்கையை உலக நாடுகள் எச்சரிக்கையுடன் எதிர்நோக்குகின்றன.

ஐரோப்பா கண்டத்திலுள்ள நாடுகள் ட்ரம்ப்பை எச்சரிக்கையுடன் பார்க்கின்றன.

---

# பேசவேண்டியவை மூடியே கிடக்கின்றன



– ஷாமிலா ஷெரீப்

நினைவு 27

பசிக் கொடுமையால் வாடுகின்றவர்களை எதியோப்பியா, சோமாலியா போன்ற நாடுகளில் காணலாம். நான் தொலைக் காட்சிகளில் பார்த்திருக் கின்றேன். ஆனால், நான் நேரில் கண்டதில்லை. 2007ஆம் ஆண்டு கொழும்பின் மத்திய பிரதேசத்திலுள்ள பிரபல பாடசாலைக்குச் சென்ற பின்னரே மாணவர்கள் உணவுக்காக காத்திருப்பதையும் ஏங்குவதையும் முதன்முறையாகக் கண்டேன்.

பாடசாலை முடிந்தும் ஐந்து மணி வரை வீடு செல்லாது மணிக்கூட்டுக் கோபுரத்தின் கீழே உள்ள படிக்கட்டில் அமர்ந்திருப்பர். அவர்களுடன் ஒரு முறை உரையாடினேன்.

''வாப்பா வேலை முடிந்து வீடு போகும்போது என்னையும் கூட்டிக்கொண்டு போவார் ரீச்சர்'' என்றதும் ''அப்ப பகல் சாப்பாடு?''

"பசிக்காது ரீச்சர் எங்களுக்கு பழகிட்டு. அவன் பிஸ்கட் தந்தான்''. இப்படி பதில் வந்தது. பசி வாட்டி வதைப்பது கண்ணில் தெரிந்தது.

கல்வி அமைச்சால் ஏற்பாடுசெய்த எசல பெரஹர நிகழ்வுக்காக 70 மாணவர்களை அழைத்துவரச் சொல்லியிருந்தனர்.

அடுத்த நாள் காலை மாணவர்களை பஸ்ஸில் ஏற்றிவிட்டுப் பார்க்கிறேன் எண்ணிக்கை 77. அதிர்ந்து போனேன். தமிழ்மொழித்தினப் போட்டிக்கு வராதவன் கூட வந்திருந்தான். அப்போது பிரியதர்ஷன் சார் சொன்னார், ''பாவம் அவர்கள் மில்க் பக்கெட், சாப்பாடு, பன் போன்றவை தருவதாகக் கூறியதனால் அழைக்காத மாணவர்கள் கூட வந்திருக்கின்றனர்'' என்றதும், சரி என அழைத்துச்சென்றேன். கங்காராமையிலிருந்து காலிமுகத்திடல் சென்று பின் விகாரமாதேவி பூங்கா வரை நடைபவனியில் ஆர்வமாகக் கலந்துகொண்டனர்.

தமிழ் மொழித் தினம், ஆங்கில மொழித் தினம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு மாணவர்களை வெளியே அழைத்துச்செல்ல நேர்கின்றபோது குறித்த தினத்தில் பாடசாலைக்குச் சமுகமளித்திருக்க மாட்டார்கள். நிகழ்ச்சிக்காக மாணவர்களைத் தெரிவுசெய்கின்றபோது அவர்கள் கேட்கின்ற ஒரே ஒரு கேள்வி சாப்பாடு தருவார்களா? பரிசு கிடைக்குமா? என்பதே தவிர, பங்குபற்ற வேண்டும் என்றோ சான்றிதழ் கிடைக்கும் என்றோ முதலாம் இடம் பெற வேண்டும் என்ற எண்ணமோ இல்லை.

மனிதனுடைய அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்பட்டால் தானே இன்னொன்றைப் பற்றி யோசிப்பதற்கு ஆர்வம் வரும்.

நான் பாடசாலைக்குச் சென்ற முதலாவது வருடம் தரம்-10 மாணவர்களுக்கு வகுப்பு ஆசிரியராக இருந்தேன். சக ஆசிரியர் நஜிமா பொறுப்பாசிரியராக இருந்தார். நாங்கள் இருவரும் சேர்ந்து சிறுவர் தினத்துக்கு மாணவர்களுக்குப் பெறுமதியான பரிசு ஒன்றை வழங்கத் தீர்மானித்தோம். ஒரு மாணவருக்கு 250 ரூபா பெறுமதியான இறப்பராலான பைல் கவருடன் பேனையும் அன்பளிப்புச் செய்தோம்.

பக்கத்து வகுப்பு ஆசிரியை தன் வீட்டிலே கேக் செய்து கொண்டுவந்து மாணவர்களுக்கு கொடுத்திருந்தார். என்னிடம் ஒரு மாணவன் சொன்னான் ''இந்த பைல் கவர சாப்பிட முடியுமா ? பேர்னிட்டா டீச்சர் கேக் செய்து கொடுத்திருக்கா" எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. பாடசாலையால் ஏதோவொரு சிற்றுண்டி கொடுப்பது வழக்கம் என்பதால் வகுப்பு ஆசிரியரான நாங்கள் அன்பளிப்பு வழங்க முடிவு செய்திருந்தோம்.

மாணவர்களுடைய இந்தக் கருத்து என்னையும் சக ஆசிரியரையும் மிகவும் மனமுடையச் செய்தது. அதன் பின் வந்த ஒவ்வொரு சிறுவர் தினத்திலும் நாங்கள் சாப்பாடு கொடுப்பதையே வழக்கமாகக் கொண்டிருந்தோம்.

நான் ஓய்வாக இருக்கும் நேரங்களில் மாணவர்களுடைய வகுப்புக்குச் சென்று அவர்களுடன் கதைப்பது வழக்கம். அப்போது ஒரு மாணவன் சொன்னான், ''வீட்ட போனால் உம்மா சாப்பாடு சமைக்கும் வரைக்கும் நாங்க ரிவி பார்ப்போம்.''

"ஏன் உங்களுடைய அம்மா வேலைக்கு போகிறாவா?" எனக் கேட்டபோது "இல்லை வாப்பா உழைத்துக் கொண்டுவந்து கொடுத்த பின்னர்தான் சமைப்பா. அதுவும் பகலையும் இரவையும் சேர்த்து அஞ்சிமணிக்கால தருவா'' என்றான்.

அப்போது பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளராக இருந்த சுபைர் நானாவுடன் இதுபற்றிக் கதைத்தேன. காலை சாப்பாடு கொண்டு வராத மாணவர்களை இனங்கண்டு நாங்கள் ஏன் ஒரு சாப்பாட்டை வழங்க முடியாது என்றபோது அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதாகக்கூறி தொடர்ந்து முன்னெடுத்தனர். தரம் 6, 7, 8 வகுப்புகளுக்குப் பொறுப்பாக இருந்த பகுதித் தலைவர் ஜோன்சன் ஆசிரியர் தனது பணத்திலிருந்து மாணவர்களுக்கு அடிக்கடி சாப்பாடு வாங்கிக் கொடுப்பதை அவதானித்திருக்கிறேன்.

இலங்கைப் பொருளாதாரம் மத்திய தர வர்க்கத்தை இல்லாமல் செய்து பணக்காரன், ஏழை என்கின்ற இரண்டு தரங்களை அறிமுகம் செய்த பிறகு இரண்டு வேளை சாப்பிடுகின்ற மாணவர்களின் நிலை குறித்து மீண்டும் பேசலானேன். ஹஸீர் ஆசிரியர் தனவந்தர் ஒருவரிடம் பேசி ஒருதொகைப் பணத்தைப் பெற்று முதல் முறையாக கடலை வாங்கி அவித்து தொடங்கி வைத்தார். அதன் பிறகு பெரியளவில் நன்கொடை கிடைத்ததாகவும் அதில் மோசடி இடம்பெறுவதாகவும் பெற்றோர் குற்றஞ்சாட்டினர். அது ஒரு தனிக்கதை. ஆனால், அனைத்து மாணவர்களுக்கும் வயிறாற உண்ணக்கிடைப்பது எனக்கு மனநிறைவைத் தந்தது.

தொடர்வாள்...

# வட்ஸ் அப்

தமிழன் சிறுகதை



ஜே. பிரோஸ்கான்

வாழும் காலங்களில் தனிமை என்பது காய்ச்சல்போல வந்து போய்விடணும். இல்லாவிடின் அதே தனிமை எவ்வாறான பிரச்சினைகளையும் விபரீதங்களையும் தோற்றுவிக்கும் என்பதை நான் நேற்று அறிந்துகொண்டேன்.

பஷீரின் வாழ்க்கைக்குள் ஏற்பட்டிருந்த ஒரு வருட தனிமையின் வலி, அதன் காயம் அவனை வேறு வகையான எண்ணங்களுக்குள் புகுத்திக்கொண்டது. பஷீரின் இந்தத் தனிமை ஏற்படுத்திய இடைவெளி பெரிது. இவனது முன்னைய வாழ்க்கை முறைக்கு முரணானது. ஊரில் மிகப் பக்குவமானவன், சமூக சிந்தனைமிக்க ஒரு நாற்பது வயதை எட்டிய இளைஞன் தனது திருமண வாழ்வும் அதற்கான பரிசுமான ஒரு ஆண் ஒரு பெண் குழந்தையுமென மகிழ்ச்சிகரமான அந்த வாழ்க்கையை மிகவும் அன்போடு நகர்த்தி வந்திருந்தபோதுதான் பஷீரின் தொழிலில் ஏற்பட்ட மிகப்பெரிய சரிவு எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றியது. வறுமை தொடர்ந்தது. பிள்ளைகளின் சின்னச் சின்ன ஆசைகளைக்கூட சரிசெய்து மகிழக்கூட முடியாத சங்கடமான நிலை உருவானது.

இப்போது அவனது மனைவியின் முடிவு அவனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக மாற்றி நின்றது. அவள் வெளிநாடு செல்ல எடுத்த முடிவை யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. குழந்தைகள் படிக்கின்ற நிலையில், இவ்வாறான முடிவு சரி வராது. உன் முடிவை மாற்றிக்கொள் என்று மனைவியிடம் மன்றாடினான்.

மனைவி, ''நம் பிள்ளைகளின் எதிர்காலம் இதற்காக மட்டும்தான் இந்த முடிவை எடுத்திருக்கிறேன். என்னை தடுக்காமல் என் உணர்வைப் புரிந்துகொள்ளுங்கள். என் சந்தோஷத்துக்காகவோ ஆடம்பர வாழ்வுக்காகவோ நான் இந்த முடிவை எடுக்கவில்லை. உங்களாலும் இப்போது இந்தத் தொழில் நெருக்கடியிலிருந்து மீள முடியாது. நீங்கள் வெளிநாடு போறதென்றாலும் நம்மிடம் ஐந்து இலட்சமாவது பணம் வேண்டும். இப்படியிருக்கையில் நான் எடுத்திருப்பது தகுந்த முடிவுதான். எனக்குக் கிடைக்கின்ற கமிஷன் பணத்தில் ஏதாவது செய்து இந்தப் பிள்ளைகளை மகிழ்ச்சிப்படுத்த நமக்கு ஒரு வாய்ப்பாகவும் இருக்கும். என் முடிவை ஏற்று சந்தோஷமாக அனுப்பி வையுங்கள்.''

''நீ சொல்வது நியாயமாக இருந்தாலும் என் மனச்சாட்சி இதனை ஏற்க மறுக்கிறது.''

மனைவி பஷ்மி தொடர்ச்சியாக பஷீரை சம்மதிக்கச் சொல்லி பல முயற்சிகளை எடுத்துக்கொண்டே இருந்தாள். இப்போது பஷீருக்குப் புரிந்தது. இனி அவள் தன் முடிவிலிருந்து பின்வாங்க வாய்ப்பில்லை என்பதை உணர்ந்து சம்மதிக்கிறான். மனைவியும் வெளிநாடு செல்கிறாள். இன்றோடு சரியாக ஒரு வருடம் கடந்துவிட்டது. அங்கே போய் ரொம்ப கஷ்டப்படுறாள். போன இடமும் சரியில்லை, வரவும் முடியாத நிலை. நேரத்துக்கு உணவில்லை, நேரத்துக்கு தூக்கமில்லை, இங்கே சந்தோஷத்தை தரப் போகிறேன் என்று போனவள் அவளும் மகிழ்ச்சியாய் இல்லை. நாங்களும் மகிழ்ச்சியாய் இல்லை என்று என்னிடம் பஷீர் அந்த ரீலோட் போடும் கடையில் சந்தித்தபோது சொல்லி அழுதான். அதைப்பார்க்கும்போது என்னால் ஜீரணிக்க முடியவில்லை. அவனை ஆறுதல் படுத்தவும் மகிழ்ச்சியாக்கவும் எனக்கு முடியல. தோளில் தட்டிவிட்டு அவசரமாக போகவேண்டியிருந்தது. நான் போய்ட்டு இன்னொரு நாள் சந்திப்பதாகக் கூறி மனசு சுமந்த ஒரு மூடை வலியோடு அங்கிருந்து வந்தேன்.

அதன் பிறகு பஷீரை ஒரு மூன்று மாதங்களுக்குப் பிறகு தன் பிள்ளைகளுடன் கடற்கரைக்கு வந்திருந்தபோது சந்தித்தேன். அப்போது அவன் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதுபோல எனக்குத் தெரிந்தது. அவனது பேச்சிலும் நடவடிக்கையிலும் மாற்றம் தெரிந்தது எனக்கு. அவனை அப்படி பார்ப்பது மகிழ்ச்சியாகத்தான் இருந்தது.

என்னடா மச்சான் ரொம்ப சந்தோஷமாக இருக்கா போல.... என்னடா நடந்த இந்த மூன்று மாதத்துக்குள் என்றதும், அவன் என்னைப் பார்த்து மெல்லிய புன்னகையொன்றை உதிர்த்தான்.

''அப்புறம் மச்சான் மனைவி சுகமா. எப்போது நாட்டுக்கு வாறதாம்'' என்று பேசிக்கொண்டிருக்கும்போதே பல தடவைகள் அவனது தொலைபேசிக்கு அழைப்பு வந்துகொண்டேயிருந்தது.

சிரித்து சமாளித்து, வந்த அழைப்பைத் துண்டித்துக் கொண்டிருந்தான்.

''டேய்... ஏன்டா அழைப்பை துண்டிக்கிறா பேசண்டா...''

''இல்லை மச்சான், கடன்காரன் இப்போ பேச முடியாது. அதை விட்டுடு நீ சொல் எப்படியிருக்கா'' என்றான்.

நான் என் சுகம்பற்றி பேசிக்கொண்டிருக்கும்போது மீண்டும் அழைப்பு வந்தது. எனக்கு சரியாக விளங்கியது. நான் இருக்கவும் தான் இவன் பேசாமல் வருகின்ற அழைப்பை துண்டிக்கிறான்.

''சரிடா.... மச்சான் நான் இன்னொரு நாள் பேசுறேன்'' என்று சொல்லி விட்டு நகர்ந்து விட்டேன்.

எனக்கு யோசனையாகவே இருந்தது.

இவன் இப்படி நடந்துக்கிற ஆள் இல்லையே! என்னது இப்படி பதற்றமா இருந்தான். அந்த அழைப்பு வரும் போதெல்லாம் ஒன்றும் புரியவில்லையே, என்னவோ அவனுக்கு ஆயிரம் பிரச்சினை இருக்கலாம் என்று மனதை தேற்றிக்கொண்டு நான் வீடு வந்துவிட்டேன்.

இப்படி சில மாதங்கள் கழிந்தது. அவனது பக்கத்து வீட்டில் வசிக்கின்ற எனது உறவினர் ஒருவரை எதேச்சையாக சந்திக்கக் கிடைத்தபோது பஷீர் பற்றி விசாரித்தேன் அவரிடம். அப்போதுதான் எனக்கு ஒரு பேரதிர்ச்சி காத்திருந்தது.

''யாரே கேட்குறா நீ? அந்த சாகுல் கமீதுட பொடியன் வெள்ளையனயா?''

''ஓ அவனே. வெள்ளையன்டா சொல்ர. பஷீர் என்றுதான் எனக்கு தெரியும், அவன்தான்''

''அதே ஏன் கேட்குறா? ஏன்? அவன் இப்போ பொண்டாட்டிகூட இல்லையே,''

''என்ன சொல்ரா?''

ஆமா வாழ்க்கை பிரிஞ்சு ஒரு நாலு மாசமிருக்கும். பெரிய கேவலம் ஊரெல்லாம் அவன்டயும் அவன்ட பொண்டாடியிட கதையும்தான் கொஞ்ச நாளா.''

''என்னா சொல்றீங்க,தெளிவா சொல்லுங்க... ''

''எல்லாம் இந்த வட்ஸ் அப் படுத்துன பாடு.''

''அல்லாஹ்வே கொஞ்சம் தெளிவா நடந்ததே சொல்லுங்களேன்.'' அவன் எனக்கு நல்லா பரீட்சயமானவன். ஒழுக்கமானவன். அப்படித்தான் இந்த ஊருக்கும் தெரியும். மனிசன்தானே சந்தர்ப்பச் சூழ்நிலை இப்படியெல்லாம் தடுமாற வச்சிடும் கவனமாக இருக்காட்டி.''

''தம்பி அவன்ட பொண்டாட்டி வெளிநாட்டிலே இருந்தபோது அடிக்கடி ரீலோட் போட அந்த கம்சா லெவ்வைட கடைக்கு போறவன். அப்படியே ஒரு வருசத்துக்கு மேலே கடனுக்கு ரீலோட் போடுற மாசம் பொண்டாட்டி காசி அனுப்பினதும் கொடுக்கிற, இப்படி இருவருக்குள்ளும் நல்ல ஒரு நட்பு. ஒரு நாள் கம்சா லெவ்வை, ''அவசரமாக வெளியே ஒரு வேலையாக போக வேணும். நீ கடையில் கொஞ்சமிரு'' என்று சொல்லிட்டு போயிருக்கான், அந்த நேரம் பார்த்து ஒரு பெண் அங்கே ரீலோட் போட வந்திருக்கா. போட வந்தவர்கிட்ட ரீலோட் போடும் டேடா முறைமை தற்போது மாறிட்டு 455 ரூபாட டேடா இப்போ 988 ரூபாவாக உயர்ந்திட்டு என்று சொல்லிருக்கான்.

அந்தப் புள்ள குறைவாக பணம் கொண்டு வந்திருக்கு. பரவாயில்ல நான் ரீலோட் போடுறேன். நீங்க பிறகு தாங்க என்று சொல்லி ரீலோட்டை போட்டுவிட்டான்.

அந்தப் புள்ளையும் நாளைக்கு தருவதாக சொல்லிவிட்டு போய் விட்டது.

இப்படி ஆரம்பிச்ச அந்தத் தொடர்பு என்னாச்சுன்னா அந்தப்புள்ளட நம்பர் எடுத்து வட்ஸ் அப்ல பேசத் தொடங்கிட்டான். அந்தத் தொடர்பு என்னன்டா இவனது தனிமையை ஏக்கத்தை ஆசையை திருப்திப்படுத்தியதாக உணர்ந்தவன் உறவை தொடர்ந்தான். அந்த உறவு தகாத உறவாக மாறி பல பிரச்சினைகளை உண்டுபண்ணிவிட்டது.

ஒரு நாள் அந்த பிள்ளை தான் கர்ப்பமாக இருப்பதாகவும் தன்னை கல்யாணம் கட்டுமாறும் கேட்க இவனுக்கு இடி விழுந்தது. அந்தக் கர்ப்பத்துக்கு இவன் காரணமில்லை என்பது இவனுக்கும் அவளுக்கும் நன்கு தெரிந்ததுதான். பாதுகாப்பாக நடந்த தவறு என்பதையறிந்தும் அந்த பெண் இவனை அடிக்கடி தொந்தரவு பண்ணத் தொடங்கிவிட்டாள். இவன் இப்போதுதான் இவளைப்பற்றி விசாரிக்கத் தொடங்குகிறான். விசாரணை இவனுக்கு இன்றும் பல அதிர்ச்சி சேதிகளைக் கொடுத்தது.

அந்தப் பெண் இப்படி பல பிரச்சினைகளை ஏற்கனவே சுமந்திருந்தவள். மிக தவறான பெண் என்பதை அறிந்து அவளிடம் இப்படி நீ என்னை மிரட்டுவாய் என்று சத்தியமாக எண்ணவில்லை, எதற்காக என்னை இப்படி உன் வலையில் சிக்க வைத்தாய் என்று கதறி அழுதிருக்கான். அவளுக்கு இதுதான் தொழில். ஆடம்பர வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு இவ்வாறான குடும்பஸ்தர்களை தன் வலையில் விழ வைக்கிறதுதான் இவளது வேலை என்பதை அப்போதுதான் உணர்ந்துகொணாடான்.

என்னடா நம்மட திறமையாலதான் அவளை அடைந்தோம் என்று அதுவரை எண்ணியிருந்த பஷீருக்கு உண்மை பல காயங்களை ஏற்படுத்தியது. ஊரில் மானம் போனது. மரியாதை இழந்தான். மனைவி, பிள்ளை குடும்பத்தாரிடம் அவமானப்பட்டான். அவண்ட பொண்டாட்டி வெளிநாட்டிலிருந்து வீடு வந்து எப்படியோ இருவரும் சேர்ந்து வாழ்ந்துதான் வந்தார்கள். ஊரில் எல்லோரும் அந்தப் புள்ளைக்கு பெரிய மனசு பாறேன். புருசன் செய்த அப்படி பெரிய தவறை மன்னித்து அவனோடு வாழுது என்றெல்லாம் புகழ்ந்து பேசப்பட்டது.

இப்படி இருக்கும்போது சில நாட்களின் பின் என்ன நடந்தது என்றால் இவன் எதேச்சியாக தனது மனைவியின் கைபேசிக்கு வந்த ஒரு அழைப்பை எடுக்க அந்த அழைப்பில் இருந்தவர் ஒரு ஆண் என்பதை அறிந்தவர் அதன் பின்னர் மனைவியின் கைபேசியை அவருக்குத் தெரியாமல் நோண்டத் தொடங்கியிருக்கிறான். அப்போதுதான் அவனுக்கே பேரதிர்ச்சி காத்திருந்திருச்சி.

அப்படி என்ன அது?

அதை ஏன் கேட்குறா?

அவள் இவனைவிட பல மடங்கு போக்கிரி. வெளிநாட்டிலே அவள்ற தனிமையைப் போக்க அவளும் சில பல முடிவுகளை எடுத்திருக்கா. வட்ஸ் அப்பில் நோண்டிய பின் பல ஸ்கீரின் சோர்ட், பல வோய்ஸ் மெசேஜ், பல அந்தரங்க காட்சிகள் என பட்டியல் நீண்டது.

இப்போது யாரு பெரிசு நீயா நானா என்று தொடர்ந்த பிரச்சினை கைகலப்பாக மாறி அவளின் தலைமுடியை வெட்டி எறிஞ்சிட்டான். அலங்கோலமாக அடி, உதை சண்டையென நீண்ட பிரச்சினை காதி நீதிமன்றம் வரை போய் விவாக விடுதலையில் முடிந்தது. பாவம் பிள்ளைகள் ஒன்று அவனிடம். இன்னொன்று அவளிடம். அவள் நேற்றுத்தான் வெளிநாடு சென்றுவிட்டாள் பிள்ளையை தன் தாயிடம் கொடுத்துவிட்டு. வட்ஸ்அப் படுத்தின பாட்டைப் பாத்திங்களா?

இப்படித்தான் பல பேருடைய வாழ்க்கை தள்ளாடிக்கொண்டிருக்கு.. இந்த சமூக வலைத்தளங்களால்.

## மலையகத்தின் சொல்ல மறந்த கதை
## சொந்தங்களை தேடி

கொரோனா நிலைமை இல்லை
முழு நாடே
ஸ்தம்பித்து போனாலும்
சிலோனிலே வாழ்ந்து வந்த
எல்லா மக்களுக்கும்
மேலாக மண்ணோடு
போனவங்க
மலையகத்து ஆளுகத்தான்

அடுத்த பக்கம்
கோப்பிக்கொண்ட
வீழ்ச்சியாலே
உலக சந்தையிலே
பெரு மாற்றம் வந்துருச்சு...

தேயிலை என்று சொல்லி
குடியேற்ற நாடுகளில்
புதிதாக பயிர் ஒன்றை
ஆங்கிலேய அரசு அது
உருவேற்றி வைத்து விட
அடுத்த யுகம் ஒன்னு
உலகத்திலே
ஆரம்பம் ஆயிருச்சு.....

என்னதான் கொலரா
நோவாளே
பல பேரு செத்து மாண்டாலும்
சிலோனில் வேலை செஞ்சு
சில பேரு சொந்த ஊரு
போன பின்னே
அதைப் பார்த்து ஏமாந்து
சிலோனு போனாக்கா

நல்லா இருக்கலாம்னு
கோபிக்கு அடுத்ததா
தேயிலை நம்பிகிட்டு
இங்கு வரும் சனங்களுமே
இன்னமும் கூடிருச்சு......

சிரிச்சுக்கிட்டே வானத்தில
வட்டமிட்ட சூரியனும்
இன்னைக்கு மேகத்தை
போர்த்தி கிட்டா
ஊதக்காத்து வீசையிலே
சேர்ந்துவிட்டு தூறல் பல
தூத்தி தூத்தி அடிக்கிறது
உடம்பும் குளிர்கிறது

தட்டி தட்டி எழுப்பிவிட்டும்
மூக்காயின் மூச்சி சத்தம்
கொஞ்சமும் கேட்கவில்ல
கத்தி கூச்சலிட்டா
சின்னப்பொன்னு
அவ கத்தும் கூச்சலிலே
எத்தனையோ வலிகளப்பா

காதிருந்தும் கேட்காத
கண்ணிருந்தும் குருடான
இந்தக் கூறுகெட்ட தேசத்திலே
அவ கத்தும் சத்தம் மட்டும்
கேட்டிடுமா....

ஆத்தாளை விட்டு விட்டா
தனக்கு யாருமில்லை
ஐயோ என்று சொல்லி
அவ கத்தும் அந்த சத்தம்
ஊரையே உலுக்கியது....

சின்ன வயசு தொட்டு
அவ பெருசா ஏதும்
அரிந்திருக்க வாய்ப்பு இல்லை

எத்தனை நாளாக
கூடையிலே இன்னும்
ஒரு கூடையாக
நெஞ்சினிலே தொட்டில் கட்டி
மூக்காயி நெஞ்சினிலே
மூட்டையாக தொங்கி
இருப்பா..

மூச்சிரைந்து போய் கிடக்கும்
மூக்காயி நெஞ்சினிலே
முகம் சாய்ந்த சின்ன
பொண்ணு
சின்ன குழந்தையாட்டம்
திம்மி விம்மி அழுத்துகிறா

அடியே ஆத்தா
உன் ஆத்தாளுக்கு
ஒன்னும் இல்ல
மூர்ச்சையாகி போய் கிடக்கா
கொஞ்சம் தண்ணி
தெளிச்சு விட்டா
மயக்கம் தெரிஞ்சிரும் டி

இப்படி சொல்லிவிட்டு
அங்கிருந்து ஓடையிலே
தண்ணி கொஞ்சம்
கொண்டுவந்து
முகம் தெளிச்சா லட்சுமி

கை கால் அசைச்சு விட்டு
மெதுவாக கண் திறக்கும்
மூக்காகி கண்ணும் முன்னே
விழியாக நின்று இருக்கா
இந்த பொண்ணு
சின்ன பொண்ணு சின்ன
பொண்ணு...

ஆத்தாளுக்கு என்ன ஆச்சு
பதறி போயிட்டேன்மா
என்று சொல்லி
பச்ச குழந்தையை ஆட்டம்
அவ அழுகுறத பார்க்கையில
கல்லும் கரையும் ஐயா..

உடம்பெல்லாம் நெருப்பா
கொதிக்கிறது
மூக்காய்க்கு காய்ச்சலும்
அடிக்கிறது
தடிமன் கூட பிடித்துவிட்டு
உடம்பு கொதியாய்
கொதிக்கிறது

என்ன செஞ்சு சரி
மாரியாத்தா புண்ணியத்தில்
உன்னை கரையேத்தி
போடணும்டி
உன் அப்பன் கிட்ட ஒப்படைச்சா
உசுரு நிம்மதியா போகும்
அம்மா

என்று சொல்லி எட்டு வைக்கும்
மூக்காயி முட்டி வலிக்குது
என்று வாழ்க்கையில
முதல்முறையா உட்கார்ந்தா....

(சொல்ல மறந்த கதை
இன்னும் சொல்லப்படும்)

எம்.ராமதாஸ்,
இறம்பொடை.

தமிழன் தொடர்கதை

# புலரும் பொழுது

அத்தியாயம் 05

கலாபூஷணம் சபீனா வைத்துல்லாஹ்



நான் “குடிக்க ஏலாதே” என்றதும் அழுதிட்டாள்.

நீராகாரங்கள் செஞ்சி தந்து குடிக்க வெச்சிச் சந்தோஷப்பட்டுப் பாசத்தைக் கொட்டினாள்.

''இண்டைக்கு என்ர புள்ளையை மருமகனாக்க ஆசைப்படுறாள்.”

“என்ன செய்றது. கடவுளின் எழுத்து இருந்தா நடக்கட்டும்.”

“இந்தச் சம்பந்தம் நடக்காம போனா என்னோட கோவிச்சிடுவாளோ என்னோட ஒறவை முறிச்சிடுவாளோ!”

“அப்பா எங்கை இருக்கீங்க அப்பா. இன்றைக்குப் பின்னேரம், கடைப்பக்கம் போவோமா அப்பா” என்று மலர் சொல்லிக்கொண்டு வந்தபோது அவரின் சிந்தனை கலைந்தது.

“சரியம்மா போவோமே. உங்க அம்மாவையும் கூட்டிக்கொண்டு போவம். மத்தியானம் சாப்பிட்டாப் பிறகு வயற்பக்கம் போயிட்டு டக்கென்டு வந்திடுவேன். பின்னேரம் நாலுமணி போல போவம் மலர்'' என்றார் அப்பா.

வழமையாக லீவு முடிஞ்சாப் பிறகு கெம்பசுக்குத் திரும்பப் போறப்போ சுமக்குஞ் சாமான்களின் லிஸ்ட் பெரிசா வெச்சிருப்பாள். சரி வாங்கிக் குடுப்பமே - என்று மனசுக்குள் பேசிக்கொண்டார் நாதன்.

கவிதா அனுப்பிவிட்ட ஆட்டிறைச்சியைக் கறி சமைத்துக் கொண்டிருந்தார் தாய் மாலா. கவிதாவின் கனவு நிறைவேறுமா எனும் சந்தேகம் மாலாவுக்கு இருந்தது.

“என்னம்மா வாசம் மூக்கை உடைச்சுக்கொண்டு போகுது. என்ன கறி சமைக்கிறீங்கம்மா'' என்றான் ஆனந்தன்.

“ உனக்கு விருப்பமான கறிதான். ஆட்டிறைச்சிக் கறி” என்றார் மாலா.

“ஆட்டிறைச்சி அப்பா வாங்கி வந்தவரோ. எங்கே வாங்கினதாம்'' என்றான் ஆனந்தன்.

“ கொஞ்சம் பொறு அந்தக் கதையை ஒனக்குச் சொல்றன்.”

“என்னம்மா ஆட்டிறைச்சிக்கு ஒரு கதை வச்சிருக்கீங்களா”

“ஓமோம்!”

“ சரி சரி ஆறுதலாச் சொல்றேன் கொஞ்சம் பொறு!” என்றார் தாய்.

வாசலில் அரட்டைச் சத்தம் கேட்டதும், அங்கு போய்ச் சேர்ந்துகொண்டான் ஆனந்தன்

ஆட்டிறைச்சிக் கறியுடன் ஆனந்தமாகப் பகல் உணவை முடித்துக்கொண்ட அனைவரும் குட்டித் தூக்கம் போட்டனர். ஆனால், தந்தையார் வயற்பக்கம் போய் அறுவடைக்கான ஒழுங்குகள் மற்றும் நெல் விற்பது, விதைநெல் கொண்டு வருவது போன்ற ஒழுங்குகளை முடித்துவிட்டு வீடு திரும்பினார்.

அவ்வேளையிலே, தாயும் மகளும் கடைக்குச் செல்ல ஆயத்தமாக இருந்தனர். ஒரு முச்சக்கர வண்டியிலே அவர்களை ஏற்றிக்கொண்டு மூன்று கிலோ மீற்றர் தொலைவிலுள்ள கடைத்தெருவுக்கு அழைத்துச் சென்றார் நாதன்.

தாயும் மகளும் பல கடைகள் ஏறி இறங்கினர். பார்த்துப் பார்த்துப் பல சாமான்களை வாங்கிக் குவித்தனர். மலர் அழகுக்கு அழகூட்டும் பொருட்கள் மற்றும் உடைகள் என வாங்கினாள்.

மாலா சமையலுக்கான சாமான்களை வாங்கிக் கொண்டார்.

தகப்பன் பொறுமை காத்ததை எண்ணி மிகவும் நெகிழ்ந்து போனாள் மலர்.

கடைத்தெரு கடந்து வீடு திரும்பிக் கொண்டிருக்கையில், “உண்மையில் கடவுள் எனக்களித்த வரந்தான் என் கணவர்!” என்று அகமிக மகிழ்ந்தார் மாலா.

அன்று தன் மகனுக்கு மாலாவைப் பெண் கேட்டு வந்திருந்த கமலம்மா, “என்ர புள்ள நாதன், பெரிய படிப்பெல்லாம் படிக்கலம்மா. தங்கமான புள்ள. கஷ்டப்பட்டு உழைச்சி அஞ்சு தங்கச்சிமாரைக் கரைசேர்த்தவர்” ஒங்கட பொண்ணு நல்ல புள்ளயாமென்று கேள்விப்பட்டேன். நம்ம ஒருக்காக் கேட்டுப் பாப்போமே என்றுதான் வந்தேனம்மா'' என்று தன் எண்ணங்களை முன்வைத்தார் கமலம்மாள்!

மாலாவின் அம்மம்மா, “மாப்புள்ளை படிக்கலயாமே. இவள் மாலா வேணாமென்று சொல்லிடுவாளோ!” எனப் பயந்தார்.

ஆனாலும், கமலம்மாளின் ஊர் பேர் விபரங்களை எடுத்துக்கொண்டார். ஒரு வாரம் கழித்து முடிவு தருவதாகவும் சொல்லியனுப்பினார்.

விவரங்களை விளங்கி எடுத்த மாலா டீச்சர், கடுமையாக யோசித்தார். அம்மம்மாவின் கண்ணுக்குப் பின்னாலே தனக்கொரு துணை தேவையென உணர்ந்தாள். அம்மம்மாவுக்கும் அப்போதுதான் நிம்மதி கிடைக்குமென எண்ணினாள்.

நாவற்பழ நிறத்தழகி மாலாவுக்கும் ஆணழகனான நாதனுக்கும் வயதுப் பொருத்தம் சுமாராகவே இருந்தது. மாலா பச்சைக் கொடி காட்டினார்.

நாதன் அமைதியான முறையிலே மாலாவுக்குத் தாலி கட்டித் தன்னூருக்கு அழைத்து வந்தார். அன்றிலிருந்து இருவரும் காதலித்துக்கொண்டே இருக்கின்றனர். உண்மையான அன்பும் பாசமும் அவர்களின் வாழ்வை அலங்காரம் செய்தது.

“படிக்காத மேதைகளும் பாரினில் உண்டு” என்பதை யதார்த்தமாக உணர்ந்துகொண்டாள் மாலா.

“அம்மா நான் எடுத்த சல்வார் நல்ல கலர்தானேம்மா” என்றாள் மலர்.

மாலாவின் சிந்தனை கலைந்தது.

“ஓமோம் மலர்.''

''ஆனாலும் விலைதான் மிச்சம் கூடிப் போச்சு” என்றதும்,

“பரவாயில்ல மகள் உனக்குப் பிடிச்சதத்தானே எடுத்திருக்கிறாய்!”

“ விலையைப் பற்றிப்பரவாயில்ல “ என்றார் மலரின் அன்பான தந்தை!

“தேங்ஸ்ப்பா”

“என்ர அப்பா போல யார் இருக்கா”எனச் சொல்லி மகிழ்ந்தாள் மலர்.

வீடடைந்ததும் கடைத்தெருவில் பொருட்கள் வாங்கிய அனுபவத்தை அண்ணன்மார்களுடன் பகிர்ந்து அளவளாவி ஆனந்தமடைந்தாள் மலர்.

அன்றைய பொழுதின் ஆரவாரங்கள் அடங்கிய பின்னர் அனைவரும் படுக்கைக்குச் சென்றனர்.

பொழுது புலர்ந்தவுடன் நெல் அறுவடை செய்வதற்காக நேரத்துக்கு வயற்பக்கம் போகவேண்டுமென்ற எண்ணத்துடன் நாதன் தலையணையில் சாய்ந்தார்.

ஆனால், மனது கவிதாவைச் சுற்றிச் சுற்றி வந்தது.

“கவிதாட மகள் ரம்யாவுக்கு டீச்சர் வேல கெடைக்குமாம் என்று மாலா சொன்னவ. அதுவும் நல்லதுதான். ஊர்ப் புள்ளையல் அவக்கிட்டப் படிச்சுக்கொள்ள ஏலும். அவவை ஆனந்தனுக்குக் கட்டி வைக்க அவனோட கதச்சிப் பாப்போம்'' என இன்னும் பல நினைவுகளுடன் படுக்கையில் புரண்டு புரண்டு கிடந்தார் நாதன்.

மாலா கண்விழித்தபோது நாதன் நித்திரையின்றி இருப்பதை விளங்கினாள்.

“என்னங்க நித்திரை வரயில்லையா,எதப் பத்தி யோசிக்கிறீங்க. கவிதாவோட ஆசையைப் பற்றியா, எல்லாம் நல்லபடியா நடக்கும், நீங்க நல்ல வடிவாப் படுத்துத் தூங்குங்கப்பா” என்றாள்.

மாலாவின் பாசக்கயிறு அவரை நித்திரையுடன் பிணைத்துவிட்டது.

புள்ளினங்கள் பள்ளியெழுந்து மெல்லிசை பாடுகையில் துள்ளியெழுந்து ஆராதனையை முடித்து விட்டுத் தேநீரை ஆற்றிக் கொண்டிருந்தார் மாலா!

ஆனந்தனும் அமுதனும் அப்பாவுடன் வயல் அறுவடைக்குச் செல்ல ஆயத்தமானார்கள்.

(தொடரும்)



# நிறம் மாறும் ஒலிம்பிக் பதக்கங்கள்

பாரிஸில் 2024ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்கள் தங்கள் பதக்கங்கள் நிறம் மாறியதாக முறைப்பாடளித்ததை அடுத்து "குறைபாடுள்ள பதக்கங்களை" மாற்றுவதாக சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி உறுதியளித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களில் இந்திய துப்பாக்கி சுடுதல் வீராங்கனை மனு பாக்கரும் ஒருவர். இவர் அந்தப் போட்டியில் இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றார்.

இந்தச் சிக்கலைச் சரிசெய்வதற்காக பதக்கங்களைத் தயாரிப்பதற்குப் பொறுப்பான Monnaie de Paris உடன் சர்வதேச ஒலிம்பிக் குழு இணைந்து பணியாற்றும்.

100க்கும் மேற்பட்ட பதக்கங்கள் குறைபாடுள்ளவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

பிரான்ஸ் ஒன்லைன் ஊடகமான La Lettre கருத்துப்படி, "100க்கும் மேற்பட்ட குறைபாடுள்ள பதக்கங்கள் அதிருப்தியடைந்த விளையாட்டு வீரர்களால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன".

இதில் இந்திய ஆடவர் ஹொக்கி வீரர் ஹர்திக் சிங், அமெரிக்க ஸ்கேட்போர்டர் நைஜா ஹஸ்டன் ஆகியோரும் அடங்குவர். அவர்கள் தங்கள் மங்கலான பதக்கங்கள் குறித்து அதிருப்தி தெரிவித்தனர்.

Monnaie de Paris இந்தப் பதக்கங்களை "குறைபாடுள்ளவை" என்று முத்திரை குத்துவதை மறுத்துள்ளது. ஆனால், கோரிக்கையின்பேரில் மாற்றீடுகள் வழங்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தியது.

பாரிஸ் 2024 விளையாட்டுப் போட்டிகளில் 5,084 பதக்கங்கள் வழங்கப்பட்டன. இவை அனைத்தும் ஆடம்பர நகைகள், வாட்ச் நிறுவனமான Chaumet ஆல் வடிவமைக்கப்பட்டன. அவை Monnaie de Paris ஆல் தயாரிக்கப்பட்டன. ஒவ்வொரு பதக்கமும் ஈபிள் கோபுரத்தின் துண்டுகளைக் கொண்டிருந்தது.

தனித்துவமான வடிவமைப்பு உறுப்பு பாரிஸின் நினைவுச்சின்னத்தின் இயக்க நிறுவனத்திலிருந்து பெறப்பட்டது. ஒவ்வொரு பதக்கத்துக்கும் பிரான்ஸ் பாரம்பரியத்தின் தொடுதலை அளிக்கிறது.

புதிய விதிமுறைகள் பதக்க உற்பத்தியைப் பாதித்தன.

லா லெட்ரே, பதக்கங்கள் "பயன்படுத்தப்பட்ட புதிய தயாரிப்புகளின் சுமைகளைத் தாங்க வேண்டும்" என்று பரிந்துரைத்தது.

# ஜோகோவிச்சை மிரட்டிய 19 வயது வீரர்

(ரமணி)

அவுஸ்திரேலிய ஓபனில் ஜாம்பவான் ஜோகோவிச்சுக்கு எதிரான போட்டியில் முதல் செட்டை கைப்பற்றி ரசிகர்களுக்கு



அதிர்ச்சி வைத்தியம் செய்தார் 19 வயது இந்திய சிறுவனான நிஷேஷ் பசவரெட்டி.

டென்னிஸ் உலகின் மிகப்பெரிய கிராண்ட்ஸ்லா மாகக் கருதப்படுவது அவுஸ் திரேலிய ஓபன். இந்தத் தொடர் அவுஸ் திரேலியாவின் பிரிஸ்பேன் நகரில் நடை பெற்று வருகிறது. அவுஸ்திரேலியா ஓபனில் அமெரிக்கா சார்பில் களமிறங் கியுள்ளார் நிஷேஷ் பசவரெட்டி. இவர் ஆந்திராவைப் பூர்வீகமாகக்கொண்டவர். 2005ஆம் ஆண்டு பிறந்த இவர், சிறுவயது முதலே டென்னிஸ் போட்டியில் மிகுந்த ஆர்வத்துடன் இருந்தார். முறையாக டென்னிஸ் கற்றுத்தேர்ந்த இவர் தனது 19ஆவது வயதில் அவுஸ்திரேலிய ஓபன் தொடரில் முதன்முறையாக களமிறங்கினார்.

அனுபவமிக்க ஜோகோவிச்சுடன் தன்னுடைய முதல் போட்டியில் அவர் மோதினார். டென்னிஸ் உலகின் முடிசூடா மன்னனாகத் திகழும் ஜோகோவிச் நிஷேஷை எளிதில் வீழ்த்தி விடுவார் என்று எதிர்பார்த்த ரசிகர்களுக்கு நிஷேஷ் அதிர்ச்சியளித்தார். தொடக்கம் முதலே ஜோகோவிச்சுக்கு எதிராக தனது ஆதிக்கத்தைச் செலுத்திய நிஷேஷ், 4-6 என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றியதும் களத்தில் குவிந்திருந்த ரசிகர்கள் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந் தனர். முதல் செட்டை இழந்த ஜோகோவிச்சுக்கு அடுத்தடுத்த செட் களிலும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நிஷேஷ் கடும் சவால் அளித் தார். ஆனால், தனது அனுபவத்தால் ஜோகோவிச் நிஷேஷை வீழ்த்தினார்.

இரண்டாவது செட்டை 6-3 என்ற கணக்கில் ஜோகோவிச் கைப்பற்ற 3ஆவது சுற்றிலும் நிஷேஷ் கடும் நெருக்கடி அளித்தார். ஆனாலும், ஜோகோவிச் 6-4 என்ற கணக்கில் வெற்றி பெற, அடுத்து நடந்த சுற்றை 6-2 என்ற கணக்கில் வென்று ஜோகோவிச் வெற்றிபெற்றார்.

2 மணி நேரம் 59 நிமிடங்கள் இந்தப் போட்டி நடந்தது. ஜோகோவிச்சுடன் 19 வயது வீரர் சுமார் 3 மணிநேரம் மல்லுகட்டியமை குறிப்பிடத்தக்கது. இளம் வீரர் நிஷே ஷின் ஆட்டத்தைப் பார்த்த ஜோகோவிச் ஆச்சரியப் பட்டார். விளையாட்டில் கிடைத்த ஒவ்வொரு கைதட்ட லுக்கும் நிஷேஷ் தகுதியானவர் என்று ஜோகோவிச் பாராட்டினார். அவரது ஷாட்டும் அவரது போட்டியிடும் குணமும் தன்னை ஆச்சரியப்படுத்தியதாகவும் ஜோகோவிச் கூறினார். இந்தப் போட்டி முடிந்த பிறகு நிஷேஷின் விளையாட்டைப் பாராட்டி மைதானத்தில் குழுமியிருந்த ரசிகர்கள் எழுந்து நின்று கைதட்டினர்.

இவரது பெற்றோர்கள் நெல்லூரைச் சேர்ந்த வர்கள். 1999ஆம் ஆண்டு இவர்கள் அமெரிக்காவின் சான்பிரான் ஸிஸ்கோவுக்கு குடிபெயர்ந்தனர். கடந் தாண்டு நிஷேஷ் இரண்டு சேலஞ்சர் பட்டங்களையும் நான்கு தொடரின் இறுதிப்போட்டிக்கும் முன்னேறியவர் என்பது குறிப்பிடத்தக்கது. காவின் ஸ்டாண்ட்போர்ட் பல்கலைக்கழகத்தில் இவர் படித்தார்.



# கார்ல்சனை வீழ்த்திய எரிகைசி

மிகவும் பிரபலமான ஒன்லைன் செஸ் தளமான செஸ் டொட்கொம் நடத்திய வாராந்த பிளிட்ஸ் போட்டியில் இந்தியாவின் நம்பர்-1 வீரர் அர்ஜூன் எரிகைசி முதல் பரிசை வென்றார்.

செவ்வாய்க்கிழமை நடந்த இந்தப் போட்டியில் அர்ஜூன் எரிகைசி 11 சுற்றுகளில் விளையாடி 10 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்தார். இந்தப் போட்டியில் அவர் உலகின் நம்பர்-1 வீரரான மாக்னஸ் கார்ல்சனை 10ஆவது சுற்றில் வீழ்த்தினார். இது மட்டுமன்றி உலகின் இரண்டாம் நிலை வீரரான ஃபேபியானோ கருவானாவையும் வீழ்த்தினார்.

இந்தத் தொடரில் எரிகைசி உலகின் நான்காம் நிலை வீரரான ஹிகாரு நகமுராவிடம் 7ஆவது சுற்றில் தோல்வியடைந்தார். மெரிக்க நகமுரா உலகின் மூன்றாவது தரவரிசை வீரர், எரிகைசி FIDE கிளாசிக்கல் தரவரிசையில் நான்காவது இடத்திலுள்ளார்.

இந்தப் போட்டியில் உலக செஸ் சம்பியனான குகேஷ் கலந்துகொள்ளவில்லை. ஒன்லைனில் நடக்கும் பிலிட்ஸ் செஸ் போட்டிகளில் செஸ் டொட் கொம்மிலுள்ள வீரர்கள் மட்டுமே கலந்துகொள்ள முடியும்.

கடந்த ஆண்டு, எரிகைசி 2800 மதிப்பீட்டை எட்டினார். செஸ் வரலாற்றில் 16 கிராண்ட்மாஸ்டர்கள் மட்டுமே இந்தப் புள்ளிகளை மட்டுமே எட்டினர் என்பது குறிப்பிடத்தக்கது.



# பாகிஸ்தானில் இந்திய அணி கப்டன் ரோஹித் சர்மா

பாகிஸ்தானில் நடைபெறும் சம்பியன்ஸ் கிண்ணப் போட்டியில் இந்தியா விளையாட மாட்டாது. ஆனாலும், இந்திய அணியின் கப்டன் ரோஹித் சர்மா பாகிஸ்தானுக்கு பயணத்தை மேற்கொள்ள வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

ஐ.சி.சி. நெறிமுறைகளின்படி, அனைத்து அணி கப்டன்களும் தொடக்க விழாவில் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது. 29 ஆண்டுகளுக்குப் பிறகு பாகிஸ்தானுக்கு ஒரு மெகா சர்வதேச கிரிக்கெட் போட்டி திரும்புவதைக் குறிக்கும் வகையில், பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பிரமாண்டமான விழாவைத் திட்டமிடுவதால், சம்பியன்ஸ் டிராபியின் தொடக்க விழாவில் பங்கேற்க இந்திய அணி கப்டன் பாகிஸ்தானுக்குச் செல்வார் - என்று ஐ.ஏ.என்.எஸ். அதன் ஆதாரங்களை மேற்கோள் காட்டி தெரிவித்துள்ளது.

1996 கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டியை இந்தியா இலங்கையுடன் இணைந்து பாகிஸ்தான் நடத்திய பின்னர், அங்கு முதல் பெரிய ஐ.சி.சி. போட்டி இதுவாகும்.

இந்தியா விளையாடும் அனைத்து போட்டிகளும் டுபாயில் நடைபெறும். இந்தியா இறுதிப்போட்டிக்கு முன்னேறினால், அதுவும் டுபாயில் நடைபெறுமென்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய கிரிக்கெட் அணி கடைசியாக 2008ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிரான ஆசியக் கிண்ண இறுதிப் போட்டிக்காக பாகிஸ்தானுக்குச் சென்றது. இந்தியா 8 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.


# மனைவிகளுக்கு நோ சொன்ன பிசிசிஐ

நியூசிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு எதிராக இந்திய அணி படுதோல்வியடைந்ததால் கடுப்பாகிய பிசிசிஐ புதிய வழிகாட்டல்களை விதித்துள்ளது.

சொந்த மண்ணில் நடந்த டெஸ்ட் தொடரில் அதிர்ச்சியூட்டும் ஒயிட்வாஷ் மற்றும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான வெளிநாட்டுத் தொடரில் 1-3 என்ற கணக்கில் தோல்வியடைந்த பிறகு, வாரியம் (பிசிசிஐ) இந்திய வீரர்களுக்கு புதிய வழிகாட்டுதல்களை வகுத்துள்ளது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு அதிகாரிகள், கேப்டன் ரோஹித் சர்மா, தலைமைப் பயிற்சியாளர் கவுதம் கம்பீர், தலைமைத் தேர்வாளர் அஜித் அகர்கர் ஆகியோருக்கு இடையேயான மறுஆய்வுக் கூட்டத்தில், இந்திய வீரர்களின் மனைவிகள்





முழு சுற்றுப்பயணத்திலும் தங்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று முடிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கொரோனாவுக்கு முந்தைய விதியை மீண்டும் அறிமுகப்படுத்த பிசிசிஐ திட்டமிட்டுள்ளது.

இந்திய அணி வீரர்களுடன் மனைவிகள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் முழு சுற்றுப்பயணத்துக்கும் பயணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள். 45 நாட்களுக்கு மேல் நீடிக்கும் ஒரு போட்டி அல்லது தொடருக்கு மனைவி அல்லது குடும்பத்தினர் வீரருடன் 14 நாட்கள் மட்டுமே தங்க முடியும். அதுவே குறுகிய சுற்றுப்பயணங்களாக இருந்தால், தங்குவதற்கான வரம்பு ஏழு நாட்களாகக் குறைக்கப்படுமென கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

சமீபத்தில் முடிவடைந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் விராட் கோஹ்லி, கே.எல். ராகுல் போன்ற பல கிரிக்கெட் வீரர்களின் மனைவிகள் அனைத்து ஆட்டங்களிலும் கலந்துகொண்டனர். சுற்றுப்பயணம் முழுவதும் குடும்பத்தினருடன் இருப்பதால் வீரர்களின் செயற்றிறன் பாதிக்கப்படுவதாக வாரியம் கருதுகிறது.

அனைத்து இந்திய வீரர்களும் அணி பஸ்ஸில் செல்லவேண்டியிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளில், பல வீரர்கள் தனியாக பயணம் செய்வதையே விரும்பினர். ஆனால், இப்போது அது நடக்காது. அந்தஸ்தைப் பொருட்படுத்தாமல், அனைத்து வீரர்களும் அணி பஸ்ஸில் ஒன்றாகச் செல்ல வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

"அணி ஒற்றுமையைக் கருத்திற்கொண்டு, இப்போது அனைத்து வீரர்களும் அணி பஸ்ஸில் மட்டுமே பயணிப்பார்கள். ஒரு வீரர் எவ்வளவு பெரியவராக இருந்தாலும் அவர் தனித்தனியாக பயணிக்க அனுமதிக்கப்படமாட்டார்" என்று வெளியான தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுமட்டுமல்லாமல், வீரர்களைத் தவிர, இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் கவுதம் கம்பீரின் மேலாளர் அணியின் ஹோட்டலில் தங்குவதைத் தடுக்கவும் பிசிசிஐ முடிவு செய்துள்ளது. அவர் விஐபி ரூமில் இருந்து போட்டிகளைப் பார்க்கவும் அனுமதிக்கப்படமாட்டார். அணியின் பஸ்ஸைப் பயன்படுத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.





தற்போது விற்பனையில்...

புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டி மாதாந்த வெளியீடுகள்

ஜனவரி மாத

சஞ்சிகைகளை பெற்றுக்கொள்ளலாம்

பிரதிகளை பெற்றுக்கொள்ள அழையுங்கள்

0777 983308 / 074 1684643





Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7